காலந்தோறும்

# தமிழகம்

(வரலாற்றுக் கட்டுரைத் தொகுப்பு)

புலவர்
கா. கோவிந்தனார்



எழிலகம்

# காலந்தோறும்
# தமிழகம்

(வரலாற்றுக் கட்டுரைத் தொகுப்பு)

புலவர். கா. கோவிந்தனார்

எழிலகம்
46, செல்வ விநாயகர் கோயில் தெரு
திருவத்திபுரம் (செய்யாறு)
திருவண்ணாமலை மாவட்டம்—604 407.

# நூல் விவரப் பட்டியல்

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | காலந்தோறும் தமிழகம் (வரலாற்றுக் கட்டுரைத் தொகுப்பு) |
| ஆசிரியர் பெயர் | : | புலவர் கா. கோவிந்தனார் |
| முதற்பதிப்பு | : | டிசம்பர், 1998 |
| உரிமை | : | பதிப்பகத்தாருக்கு |
| நூல் வெளியீடு | : | எழிலகம்<br>46, செல்வ வினாயகர் கோயில் தெரு<br>திருவத்திபுரம் (செய்யாறு)<br>திருவண்ணாமலை மாவட்டம்-604407<br>தொ. எண் : 04182—22255 / 20755<br>22806 |
| தாளின் தன்மை | : | 10.5 kg. வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | : | 1×8 கிரவுன் |
| மொழி | : | தமிழ் |
| அச்சு எழுத்து | : | 10 புள்ளிகள் |
| பக்கங்கள் | : | 184 |
| நூல் கட்டுமானம் | : | சாதா அட்டை பைண்டு |
| சென்னை முகவரி | : | 17/12பீட்டர்ஸ் சாலைக் குடியிருப்பு<br>இராயப்பேட்டை, சென்னை-600 014<br>தொ. எண் : 8528340. |

**விலை : ரூ. 35-00**

| | | |
|---|---|---|
| அச்சிட்டோர் | : | வெற்றி அச்சகம்<br>சென்னை-14 |

I S B N 81—85703—19—1

# பதிப்புரை

இருபதாம் நூற்றாண்டுத் தமிழகத்தின் வரலாற்றில் தனக்கென ஒரு சிறப்பிடத்தைப் பெறத்தக்க வகையில் நல்ல தமிழ் அறிஞராக, வரலாற்றுத் திறனாய்வாளராக, செந்தமிழ்ப் பேச்சாளராக, இலக்கியப்படைப்பாளராக, பாதை மாறாத பகுத்தறிவுவாதியாக, அப்பழுக்கற்ற அரசியல் தலைவராக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவராக, எனப் பல்திறன் படைத்த நற்றமிழ்ப் புலவராக விளங்கியவர்,

புலவர். கா. கோவிந்தனார் அவர்கள்

"தமிழுக்கும், தமிழ்ப் புலவர்கட்கும், தமிழ் நாட்டுக்கும் தொண்டாற்றத் தன்னையே அர்ப்பணித்தவர்" என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டப்பெற்ற பேறு பெற்றவர்; பைந்தமிழ்ப் புலவராய் உயர்ந்து, சங்கத் தமிழ் ஏடுகளிலெல்லாம் திளைத்து, வரலாற்றுக் கண்கொண்டு ஆய்ந்து, தொல்காலத் தமிழர் வாழ்வை இக்காலத்தவரும் தெளிந்திடுமாறு தேன் தமிழ்ச்சுவடிகளாக வரைந்து வழங்கிய பெருமை உடையவர்,

புலவர். கா. கோவிந்தனார் அவர்கள்

புலவர்களுள் பெரும் புலவராய் விளங்கி, திருவண்ணா மலை குன்றக்குடி ஆதீனத்தாரின் 'புலவரேறு' பட்டம், தமிழக அரசின் 'திரு. வி. க. விருது', மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' பட்டம்,

போன்ற சிறப்புகளைப் பெற்ற புலவர் அவர்களின் தமிழ்ப்பணி பொன்விழாக் கண்ட பெருமையினையுடையது.

'என் தமிழ்ப்பணி' என்ற தலைப்பில், தாம் எழுதிய கடைசி கட்டுரையில், "என் எழுத்துப்பணி தொடரும். குறள்பற்றி, சங்க இலக்கியங்கள் பற்றி பல தலைப்புகளில் நூல் எழுதக் குறிப்பு எடுத்து வைத்துள்ளேன். 'கல்வி கரையில, கற்பவர் நாள் சில!' காலம் இடம் தந்தால் என் எழுத்துப்பணி தொடரும்" என்று புலவர் தம் தமிழ்ப் பணியைத் தொடரவேண்டும் என்ற தணியா ஆவலை வெளியிட்டுள்ளார். ஆனால், காலம் இடம் தரத் தவறி விட்டதனால், முற்றுப்பெறாத நிலையிலே அவருடைய எழுத்துப்பணி எச்சமாகவே நின்று போயிற்று காலம் செய்த கொடுமை அது!

தமிழால் உயர்ந்து, தம் தமிழ்ப்பணி மூலம் தமிழுக்கும் உயர்வு தேடித்தரும் வகையில், எழுத்துலகம் நினைவு கொள்ளும் வண்ணம் நூற் பணியாற்றிய புலவர் அவர்கள், 'செத்தும் பொருள் கொடுத்த சீதக்காதி வள்ளல்' போலத் தம் மறைவிற்குப் பின்னும் தமிழுக்கு அணி செய்யும் வகையில் பல இலக்கியப் படைப்புகளைத் தம் கையெழுத்து வடிவிலே அளித்துச் சென்றுள்ளார்.

அந்த எழுத்துச் சுவடிகளையெல்லாம் அச்சுவடிவில் வெளியிடுவதைத் தன் தலையாய கடமையாக எழிலகம் ஏற்று,

"வள்ளுவர் சொல்லாட்சி மாட்சி."

"மனையுறை புறாக்கள்."

"பெரும்பாணாற்றுப்படை—விளக்கவுரை."

"புலா அம்பாசறை."

ஆகிய இலக்கிய நூல்களை வெளியிட்டுள்ளோம்.

சங்ககால அரசர் வரிசை, திருமாவளவன், அறம் உரைத்த அரசர், இலக்கியங் கண்ட காவலர், கலிங்கங் கண்ட காவலர், தமிழர் தளபதிகள். கழுமலப்போர், தமிழர்வாழ்வு, தமிழர் வாணிகம், பண்டைத்தமிழர் போர் நெறி, தமிழகத்தில் கோசர்கள், போன்ற வரலாற்று நூல்கள் பல படைத்த புலவர் அவர்கள், சங்ககாலம் தொட்டு, இன்று வரையான, தமிழகவரலாற்றைக், காலம் தோறும் தொகுத்து வரிசையாக எழுதும் பணியில் ஈடு பட்டிருந்தார்கள்.

அந்தப் பணியும் முற்றுப்பெறாது போனது. அந்தப் பணியில் அவர் எழுதி முடித்த வரலாற்றுப் படைப்புகளை,

தமிழக வரலாறு வரிசை

என்ற பெயரில் வெளியிட முனைந்து,

"தமிழக வரலாறு—சங்ககாலம்-அரசர்கள்."

"தமிழக வரலாறு-கோசர்கள்."

"தமிழக வரலாறு-கரிகாற்பெருவளத்தான்.

ஆகிய வரலாற்று நூல்களை வெளியிட்டுள்ளோம்.

புலவர் அவர்கள் விட்டுச் சென்றுள்ள, அச்சு வடிவம் பெறாத வரலாற்றுக் கட்டுரைகளைத் தொகுத்து இன்று,

## காலந்தோறும் தமிழகம்
(வரலாற்றுக் கட்டுரைத் தொகுப்பு)

என்ற இக்கட்டுரைத் தொகுப்பைத் தமிழ்கூறு நல்லுலகத் தின் முன் படைக்கிறோம்.

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம் புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே"

என்ற புறநானூற்று மொழிகளுக்கேற்ப, புகழுடம்பு பெற்று விட்ட புலவர் பெருந்தகை, இறவாத புகழுடைய இலக்

இயல்கள் பலவற்றைத் தமிழன்னைக்கு அணிசெய்ய அளித்துவிட்டுச் சென்றுள்ளார். புலவர் அவர்களின் முன்னைய படைப்புகளுக்குத் தமிழகத்துப் பெரியோர் களாகிய தாங்கள் காட்டிய பேரன்பையும், பாராட்டையும், ஆதரவினையும் தொடர்ந்து அளித்திட வேண்டுகிறோம்.

"தமிழுக்குத் தொண்டு செய்வார் சாவதில்லை" என்றார் பாவேந்தர். தம் வாழ்நாள் முழுவதும், காலம் கரம் பிடித்து அழைத்துப் போன அந்தக் கடைசி நொடி வரை, தமிழ்ப்பணி ஆற்றிய புலவர் அவர்கள் வாழ்வார்! அவர் தமிழ் உலகிற்கு அளித்துச் சென்றுள்ள இலக்கியச் செல்வங்கள் உள்ளவரை என்றென்றும் நிலைத்து வாழ்வார்! தமிழ் படிப்போர் நெஞ்சமெல்லாம் நிறைந்து வாழ்வார் என்பது உறுதி!

—எழிலகம் பதிப்பகத்தார்

# பொருளடக்கம்


பதிப்புரை 3

1. சங்க காலம்

அ. மாநகர் மதுரை 11

ஆ. ஓடாப்புட்கை உறையூர் 27

இ. பழந்தமிழர் சமயநிலை 39

ஈ. குதிரை மலை அஞ்சி 43

உ. களப்பிரர் 48

2. பல்லவர் காலம்

அ. பல்லவர்கள் தோற்றம் 55

ஆ. சிம்ம விஷ்ணு 62

இ. மகேந்திரவர்மன் 64

ஈ. பல்லவ—சாளுக்கியர் போர் 68

உ. பல்லவர் அரசியல் 74

ஊ. பல்லவர் காலச் சமயநிலை 79

எ. பல்லவர் கால இலக்கியம் 84

ஏ. பல்லவர் காலத்தில் ஓவியமும் சிற்பமும் 88

ஐ. பல்லவர் காலத்தில் இசையும் நடனமும் 92

3. சோழர்—பாண்டியர் காலம்

அ. தமிழகத்தின் பரப்பும் பழமையும் 97

ஆ. கடைச்சங்க காலத்திற்கும் விஜயாலயன் காலத்திற்கும் இடைப்பட்ட காலச் சோழர் நிலை 101
இ. சோழப் பேரரசு—தோற்றமும், வீழ்ச்சியும் 105
ஈ. சோழர்—பாண்டியர் உறவு 114
உ. சோழர்—மேலைச் சாளுக்கியர் உறவு 125
ஊ. சோழர்—வேங்கிச் சாளுக்கியர் உறவு 136
எ. சோழர்—இராட்டிரகூடர் உறவு 141
ஏ. சோழர் அரசியல் 145
ஐ. பழைய தமிழகத்தில் மக்களாட்சி 149
ஒ. பாண்டியப் பேரரசின் வீழ்ச்சி 161

நாயக்கர் காலம்

அ. மதுரை நாயக்கர் ஆட்சி 169
ஆ. மதுரை நாயக்கர்களும் கிறித்துவப் பாதிரிமார்களும் 179

# 1. சங்க காலம்

# அ. மாநகர் மதுரை

வடவேங்கடம் தென்குமரிக்கு இடைப்பட்ட தமிழகம், பண்டு பலப்பல பேரூர்களைத் தன்னகத்தே கொண்டிருந்த தேனும், மூவேந்தர்களின் அரசியல் தலைமை நிலையங் களாய்த் திகழ்ந்த மாநகர்கள், மதுரை, உறையூர், வஞ்சி, புகார் என்ற நான்கேயாம். மதுரையைத் தலைநகராகக் கொண்ட பாண்டி நாட்டிற்குக் கொற்கை போலவும், வஞ்சியைத் தலைநகராகக் கொண்ட சேரநாட்டிற்குத் தொண்டிபோலவும், உறையூரைத் தலைநகராகக் கொண்ட சோழநாட்டிற்குக், கடல் வாணிகம் வளர்க்கும் துறைமுகப் பட்டினமாய் விளங்கிய புகார், சோழ அரசர்களுள் ஒரு சாராரின் தலைநகராகவும் விளங்கிற்று. ஆதலின், மூவேந் தர்ப் பேரூர்களாய், இந்நான்கு நகரங்களும் கொள்ளப் பட்டன. அதனாலேயே சிலப்பதிகாரம் பாடிய சேரர் கோவாகிய இளங்கோவடிகளார், தமிழகத்தின் பேரூர்களாக இந்நான்கு நகரங்களையும் குறித்துள்ளார்.[1]

சேர, சோழ நாடுகளுக்கு இல்லாத ஒரு பெரிய பகை, பாண்டிநாட்டிற்கு இருந்தது. அந்நாடு பகையரசர்களால் பாழுறுவதோடு, அவ்வப்போது கடல்கோள்களாலும் அழிவுற்று வந்தது. காய்சின வழுதி முதல் கடுங்கோன் ஈறாக உள்ள எண்பத்தொன்பது அரசர்கள் ஆட்சிபுரிந்து வந்த காலம்வரை, பாண்டிநாட்டுத் தலைநகராக விளங்கிய தென் மதுரையும் பஃறுளி, குமரி எனும் இரு ஆறுகளுக்கு இடைப்பட்ட ஏழ்தெங்கநாடும், ஏழ்மதுரைநாடும், ஏழ்முன்

பாலை நாடும், ஏழ் பின்பாலைநாடும், ஏழ்குன்றநாடும், ஏழ்குணக்காரைநாடும், ஏழ்குறும் பனைநாடும், குமரி, கொல்லம் முதலாம் பன்மலைநாடும் உள்ளடக்கிய பாண்டி நாட்டின் பெரும்பகுதியும், கடுங்கோன் காலத்தில் கடல் கோளால் அழிவுற்றன. தெற்கண் தம்நாடு அழியக்கண்ட தென்னவனும், தென்னவன் நாட்டு மக்களும் சிறிது வடக்கே வந்து, கபாடபுரத்தைத் தலைநகராகக் கொண்டு வாழ்ந்தனர்; வெண்தேர்ச்செழியன் முதல் முடத்திருமாறன் ஈறாக உள்ள வேந்தர் நாற்பத்தொன்பதின்மர் இருந்து அரசாண்ட கபாடபுரமும், குமரிக்குன்றும், பஃறுளியாறும் கடல் கோளால் பாழாயின.

தென்திசைக்கண், நீண்டு பரந்திருந்த பாண்டிநாடு இவ்வாறு பாழுற்றமையால், கபாடபுரத்தில் கடல்கோள் காலத்தில் இருந்து அரசாண்ட முடத்திருமாறன் தன்னாட்டின் மேற்கே நாடாண்டிருந்த சேரர்களையும், வடக்கே வாழ்ந்திருந்த சோழர்களையும் வென்று துரத்தித் தன்னாட்டை அடுத்திருந்த அவர் நாட்டு நிலங்களைக் கைப்பற்றிப், பாண்டியநாடு கடல்கோளால் இழந்த நிலக் குறையை நிறைவாக்கினான்.[2] தம் பழைய தலைநகரங்கள் இரண்டும், கடல்கோளால் பாழுற்றமை கண்ட பாண்டி நாட்டு மக்கள், நாடும், நகரமும் புதியவாகக் காணுங்கால், அவற்றிற்கு அத்தகைய கேடு மீண்டும் வாராமை வேண்டும், என்பதில் பெரிதும் விழிப்பாயிருந்தனர். அன்று அவர்கள் கண்ட பாண்டியநாட்டின் புதிய தலைநகரே இன்றைய பழம்பெரும் நகராகிய மதுரை மாநகரம்.

நாடும் நகரமும் கடல்வாய்ப்படவே, கலங்கிய பாண்டிய மன்னன், வடதிசைக்கண் உள்ள மணலூர் வந்து தங்கினான்; ஆங்கிருந்தவாறே தலைநகர் அமைத்தற்குத் தகுதிவாய்ந்த இடத்தைத் தேர்ந்துகொண்டிருந்தான். அக்காலை அம்மணலூர் வணிகன் ஒருவன், மேற்கே உள்ள நாடுகளுக்குச் சென்று வாணிகம் புரிந்து, ஊர்நோக்கி மீண்டு

வருவனாயினன். அவ்வாறு மீண்டு வருங்கால், மணலூரை அடையச் சிறிது தொலைவே இருந்த அளவில் ஞாயிறு மறைந்து இரவு வந்துறவே மேற்கொண்டு செல்லமாட்டாது அங்கேயே தங்கினான். அவ்வாறு அவன் தங்கிய இடம், கடம்பமரங்கள் நிறைந்த ஒரு காடு; அக்காட்டில் தன் வாணிக வளத்தோடு தங்குவதற்கு வாய்ப்புடைய இடம் தேடித் தங்கிய வணிகன், தன் மாலைக் கடனாற்று முன்னர், யாகுபோக நீராடுதற்கேற்ற நீர்நிலை தேடித் திரியுங்கால், அக்காட்டின் ஒருபால், ஒரு பொய்கையும், அப்பொய்கைக் கரையில் ஒரு சிவலிங்கமும் இருக்கக் கண்டான். பொய்கையில் நீராடி இறைவனை வழிபட்டு இரவைக் கழித்தான். பொழுது விடிந்ததும், பொய்கை இருக்கும் இடம் சென்று உற்று நோக்க, பொய்கை, பொன்னிறத்தாமரை மலர்ந்து மணம் கமழவும், பொய்கைக் கரைக்கண் இருக்கும் இறைவன் திருவுருவம், செடிகளாலும், கொடிகளாலும் மறைப்புண்டு கிடக்கவும் கண்டான்.

மீண்டும் ஒரு முறை அவ்விறைவனை வணங்கி வாணிகப்பொருள்களோடு மணலூர் வந்துசேர்ந்தான். ஊர் அடைந்த வணிகன், தலைநகர் அமைக்கும் தகுதிவாய்ந்த இடம் காணாது கலங்கி நிற்கும் மன்னவன்பால் சென்று, இரவுதான் தங்கிய கடம்பவனம், ஆங்குள்ள பொய்கை, பொய்கைக்கரையில் கோயில் கொண்டிருக்கும் இறைவன் திருவுருவம் ஆகியன குறித்து அறிவித்தான். வணிகன் கூறியன கேட்ட வேந்தன், தன் அமைச்சர் உடன்வரக், கடம்பவனம் சென்று அவற்றைக் கண்டான். அவ்விடம் கடலுக்கு மேற்கில், அக்கடல்நீர் எளிதில் புகமாட்டாத் தொலைவில் இருப்பதாலும், திருக்குளமும் திருக்கோயிலும், அவ்விடம் பண்டு ஒரு பெருநகரின் இருப்பிடமாம் என்பதை அறிவிப்பதாலும், அக்கடம்பவனக்காடு, தலைநகர் அமைப் பிற்குத் தகுதிவாய்ந்த இடமாம் எனத் துணிந்தான்.

தலைநகர் அமைக்கும் பணி உடனே தொடங்கப் பெற்றது; மரங்கள் அழிக்கப்பட்டன; மண் செப்பம் செய்யப்பட்டது, இறைவன் திருவுருவம் இருக்கும் இடத்தை நடுவாக வைத்துப் பெரியகோயிலை எழுப்பினர்; கோயிலைச் சூழ, அங்காடி முதலாம் பெரிய தெருவுகளும் பெருந்தெருவுகளை ஒன்று சேர்க்கும் சிறிய தெருவுகளும் அமைத்தனர்; நகரின் இடையிடையே மன்றங்களும் பொதியல்களும் எழுந்தன; பொய்கைகளும், பூஞ்சோலைகளும் பலப்பல இடம் பெற்றன. அரசனுக்குரிய அரண்மனை, நகரின் வடகிழக்கே அமைக்கப்பட்டது. இவை அனைத்தையும் சூழ உயர்ந்த மதிலும், ஆழ்ந்த அகழியும், அடர்ந்த காவற்காடும் எடுத்து நகருக்கு அரண் அமைத்தனர்.

மதுரை மாநகர் அமைப்புக்குறித்து, அம்மதுரையில் இறைவன் செய்த திருவிளையாடல்களை எடுத்துக்கூறும் திருவிளையாடற் புராணம் கூறுவது இது.

"மதுரை நோக்கி வரும் மக்கள், மதுரை நெருங்கி விட்டது என்பதை, அம்மாநகரில் எழுப்பும் பல்வேறு ஒலிகளும் ஒன்று கலந்து பொருள் விளங்காப் பேரொலியாய் வந்து ஒலிக்கக் கேட்டு உணர்ந்து கொள்வர். அத்தகைய ஒலி அலைகள் ஓயாது எழும் வண்ணம் மக்கள் கூட்டம் மல்கி வாழ்வது மதுரை மாநகரம். இறைவன் திருக்கோயில்களிலும் அரசன் அரண்மனையிலும் எழும் முரசொலியும், செந்தழல் ஓம்பும் அந்தணர்களின் நான்மறை ஒலியும், அருள் நெறி நிற்கும் முனிவர்களின் மந்திர ஒலியும், வேந்தனும் வீரர்களும் பெற்ற வெற்றிகுறித்து மக்கள் எடுக்கும் விழாவொலியும், அரசன் நாற்படை வரிசையில் நிற்கும் வேழங்களின் பிளிற்றொலியும், குதிரைகளின் கனைப்பொலியும், போர்க்களமும், ஏர்க்களமும் பாடும் பொருநர்களின் பாட்டொலியும் ஆகிய பல்வேறு ஒலிகளும், மதுரைநோக்கி வருவாரை, அவர்கள் சேய்மைக்கண் வரும்போதே, வருக வருக என வரவேற்கும்,"[3]

மக்கள் மதுரையை நெருங்க நெருங்க, மதுரை மாநகரின் பல்வேறு மணங்களையும் நுகரத் தொடங்கி விடுவர். மதுரை மாநகரத்து மகளிரும் மைந்தரும் மகிழ்ந்து பூசிக்கொள்ளும் அகில், குங்குமம், கத்தூரி, சந்தனம், முதலாம் மணப்பொருள்களின் மணத்தையும், மைந்தர் மார்பிலும், மகளிர் கூந்தலிலும் அணிந்து கொள்ளும் சண்பகம், மல்லிகை, முல்லை, மாதவி முதலாம் மலர் மாலைகளின் மணத்தையும், அறுசுவை உணவாக்கும் அட்டிற்சாலையிலும் அப்பம் சுடும் அங்காடி வீதியிலும் எழும் பல்வேறு மணத்தையும், மாடங்களில் எழுப்பும் அகில் முதலாம் மணப் புகைகளின் மணத்தையும், அரசனும் அரசியாரும் அகமகிழ்ந்து பூசிக்கொள்ளும், அருள்நெறி மேற்கொண்ட அறவோர்களையும் அடிமையாக்கவல்ல, அழகிய மணத்தையும் வாரிக்கொண்டு வந்து வீசும் மதுரைக் காற்று, "மாக்காள்! நீங்கள் கருதிச்செல்லும் மாநகர் சேய்மைக்கண் இல்லை; நனிமிக அணித்தாயிற்று" என அறிவித்து, அவர்களை வரவேற்கும்.[4]

குரவம், கோங்கு, வேங்கை, வெண்கடம்பு, சுரபுன்னை, மஞ்சாடி, மருது, செலுந்தில், செருந்தி, சண்பகம், பாதிரி, குருக்கத்தி, செம்முல்லை, முசுட்டை, மோசி, மல்லிகை, வென்நறுந்தாள், வெட்பாலை, பிடவம், இருவாட்சி எனும் பன்னிறமலர்கள், நன்னிற ஆடையென மேலே படர்ந்து, தண்ணீரை மறைத்துத் தவழ்ந்து செல்ல, கோங்கு, வேங்கை, முதலாம் மரங்கள் வளர்ந்த மணல் மேடுகள் இடையிடையே இடம்பெற, இரு கரையிலும் நிற்கும் முருக்க மரமும், முல்லைக்கொடியும் செம்மலரும் வெண்மலரும் சொரிய, கயல் மீன்கள் கண்ணெனத் தோன்றி ஆடித்திரிய அறல்பட்ட கருமணல், கூந்தலெனக் காட்சி நல்க ஓடிவரும், பொய்யா வளம் வழங்கும் வையையாறு, மதுரையின் வடகிழக்குப் பகுதிகளை வளைத்து ஓடி, அம்மாநகரின் ஒரு பால் அரணாய் விளங்கிற்று.[5]

வையையாறு, மக்கள் வழங்கலாகா ஆழம் உடையது, அதனால் மதுரை மாநகர்க்கு வடநாட்டினின்றும் வருவார் வையையை இடையூன்றிக் கடந்து வருவதற்கு ஏற்ற எண்ணற்ற ஓடங்கள் நிற்கும் துறைகள் பல இரு கரையிலும் அமைந்திருந்தன. குதிரை முகம் போலவும், யானை முகம் போலவும், சிங்க முகம் போலவும் அமைக்கப்பட்ட அவ்வோடங்கள் ஆற்றைக் கடந்து செல்லும் காட்சி காண்பார் கண்களுக்குக்களிப்பூட்டும் கவின்மிகு காட்சியாம்.[6]

வையையாற்றைக் கடந்து வந்தால், நகரின் நாற்புறமும் வளர்ந்திருக்கும் காவற்காடு, பகைவர் படை எளிதில் புகாவாறு தடுத்து நகரைப் பாதுகாத்து நிற்கும். காவற்காடு களைக் கடந்து சென்றால் வருவது, மதுரை மாநகரின் புறநகர்; தாமரைப் பொய்கையும், தண்ணறும் சோலை களும், நெல்லும் கரும்பும் விளையும் நன்செய்களும் நிறைந்த அப்புறநகர், இயற்கையோடு இரண்டறக் கலந்துறையும் இன்ப வாழ்வினரான அறவோர்களின் வாழிடமாம்: ஆங்கு அவ்வறவோரல்லது, பிறர் எவரும் சென்று வாழ்தல் இயலாது. அறவோர்கள் வாழும் அறப்பள்ளிகளும், அவர் வணங்கும் திருமால் கோயிலும், இயக்கிபோலாம் சிறுதெய்வ கோட்டங்களும் மிக்கது அப்புறநகர்; கடவுள் வழிபாட்டு ணர்வு மிக்க மதுரை மக்கள், காலையிலும், மாலையிலும், மதிலைக் கடந்து புறநகர் போந்து, ஆங்குக் கோயில் கொண் டிருக்கும் கடவுளரை வழிபட்டுச் செல்வர்.[7]

புறநகரையும் அகநகரையும் இடை நின்று பிரிப்பன, அகழியும் மதிலும். காவற்காட்டை அழித்து மேல் வரும் பகைவர் படை, மதிலைத் தாக்கிப் பாழாக்காவாறு தடுத்து நிறுத்துவது அகழி. வையையாற்று நீராலும், நகரின் மாடங் களிலிருந்தும் மனைகளிலிருந்தும் ஓடிவரும் கழிநீராலும் நிறைந்த அவ்வகழி, எளிதில் கடக்கலாகா அகலமும் ஆழமும் உடைத்து, கருநிறக்குவளையும் செந்நிறத் தாமரையும்,

வெண்ணிற ஆம்பலும் மலர்ந்துள்ளமையால் அவ்வகழி• கழிநீர் தந்த நாற்றம் அற்று மணம் வீசும் மாண்பும் உடைத்து.[8]

அகழிநீர் அலைக்க, நகரை வளைந்து நெடிய மதிற்சுவர் நிற்கும். விண்ணாற உயர்ந்து அகழலாகா அகலமும், அழிக்கலாகாத் திண்மையும் வாய்ந்து விளங்கும் அம்மதில்கள் அகழியைத் தூர்த்துப் பகைவர் படை, தன் மீது பாயுமா மாயின், அந்நிலையில் அவர் படையைப் பாழாக்கும், தாமே இயங்கவல்ல இயந்திரப்படைகள் எண்ணற்றன பொருத்தப் பெற்றிருக்கும்.[9]

நகரின் உள்ளே நால்திசைக் காற்றும் நன்கு நுழைதற் கேற்ற நெடிய வாயில்கள் நகரின் நாற்புறமும் அமைந் திருக்கும். பகைவென்று மீளும் பாண்டிநாட்டு வேழப்படை, வென்று உயர்த்திய வெற்றிக்கொடிகளோடும் புகுதற்கேற்ற உயர்வுடையன அவ்வாயில்கள்; மலையைக் குடைந்து பண்ணினாற் போலவும், மழை மேகம்படிந்த மலைகளைப் போலவும் தோன்றும் நெடிய அவ்வாயில்கள், என்றும் வெள்ளம் வற்றாது விளங்கும் வையையாறுபோல், மக்கள் இரவு பகல் எப்பொழுதும் இடையறாது வழங்கும் மாண்புடைய.[10]

வாயிற்றலையில், மதுரை மன்னன் மாற்றலரைவென்று பெற்ற வெற்றிகளை விளக்கிக் காட்ட நாள்தோறும் நாட்டியக் கொடிகள் வரிசையாக நின்று பறக்கும். நான்கு வாயில்களிலும், வாளேந்திய யவனவீரர்கள், இரவுபகலாக இருந்து காவல் புரிவர். அவர் காவலைக் கடந்து அகநகர் புகுவது அரிதினும் அரிதாம். அகநகர் வாழ்வார் புறநகர் போகவும், புறநகர் வாழ்வார் அகநகர் புகவும் வாயில்கள் தோறும், அகழியின் குறுக்கே சுருங்கை வழிகள் அமைக்கப் பெற்றிருக்கும். வாயிலைக் கடந்து செல்லும் மாவும்

மாக்களும் எண்ணிக்கான இயலாப் பெருந்திரளினராதலின், அச்சுருங்கைகள், யானைப்படை புகினும் பாழகாத் திண்மை உடையவாமாறு அமைக்கப் பெற்றிருந்தன.[11]

மதுரை மாநகரின் அகநகர்த் தெருவுகள், அகன்றும் நீண்டும் ஆறுபோலும் காட்சி நல்கும் அழகுடையவாம்; அதனால் அத்தெருவுகள், காற்று எக்காலத்தும் வீசும் வாய்ப்புடைய; அத்தெருவுகளில், தென்றலும் வாடையும் தடையின்றிப் புகுந்து உலாவும்.[12]

வாயிலைக் கடந்து, அந்நகர்க்குட் செல்வார், முதற்கண் அடியெடுத்து வைப்பது, நகரத்துக் செல்வக்குடியில் பிறந்த நம்பியர் விரும்பும் பரத்தையர் வீதி. பரத்தையர் அப் பெருங்குடிச் செல்வரோடு புறநகர் புகுந்து, பொழிலாடியும் புனலாடியும் மகிழ்தற்கு வாய்ப்பளிக்கும் வண்ணம், அவர் வாழும் வீதி, புறநகரை அடுத்து அமைந்திருந்தது.[13]

பரத்தையர் வீதியை அடுத்துவரும் பெரிய வீதிகள் இரண்டும் நாடாளும் மன்னவன் காணத்தக்கனவும், நாட்டில் வாழும் மக்கள் காணத்தக்கனவுமாய் இருவகைக் கூத்துக்களிலும் வல்ல கூத்தியர் வாழும் இடங்களாம்.[14]

கூத்தியர் வீதியைக் கடந்தால் வருவது தொழிலாளர் வாழிடம். சங்கை அறுத்துக் கைவளை முதலியன கடைந்து தருவாரும், தூயமணிகளுக்குத் துளையிட்டுத் தருவாரும், உருக்கி வார்த்த பொன்னால் அணி பல ஆக்கி அளிப்பாரும், பொன்னை உரைத்து நோக்கி, மாற்றும் மதிப்பும் காண்பாரும், ஆடை நெய்து அளிப்போரும் செம்பால் கலம்புனை வாரும், கச்சும், குச்சும் கட்டித் தருவாரும், மலர் வகையும் மணப்புகைவகையும் அறிந்து தருவாரும், ஓவியரும், இவர் போலும் பிற தொழிலாளர்களும், நகரின் அப்பகுதியில் ஒன்று கலந்து வாழ்ந்திருப்பர்.[15]

தொழிலாளர் வாழும் வீதியை அடுத்து, அவர்கள் தொழில் புரிந்து அளித்த பல்வகைப் பொருள்களும் விற்கும் நாளங்காடி அமைந்திருந்தது. ஆங்கு வகை வகையான வண்டிகள், வட்டைகள், தேர்மொட்டு, மெய்க்கவசம், அங்குசம், தோலால் ஆன கையுறை போலும் போர்க்குப் பயன்படும் பொருள்கள், அரியா யோகம் முதலாம் மருந்து வகைகள், குழியம் முதலாம் மணப்பொருள்கள், வெண்மயிர் விசிறி, பன்றி முதலாம் உருவம் வரைந்த ஓவியப் படங்கள், குத்துக்கோல், செம்பாலும், வெண்கலத்தாலும் வனையப் பெற்ற புதுப்புதுக் கலங்கள், மாலை வகைகள், வெண்சங்கை வாளால் அறுத்துச் செய்தப் பல்வகைப் பொருள்கள், தந்தத்தைக் கடைந்து தந்த கணக்கற்ற பொருள்கள், மணம் வீசும் புகைதருபொருள்கள், மேனிக்கும் மயிருக்கும் பூசும் சாந்து வகைகள் என்பன போலும் இனம் விளங்கா எண்ணற்ற பொருள்கள் குவிந்து கிடக்கும்.[16]

அங்காடி வீதியை அடுத்து, அதற்கு இனமான, பல்வேறு வணிக வீதிகள் வரிசையாக அமைந்திருந்தன. முதலில் நிற்பது நவமணிக் கடைவீதி. மரகதம், மாணிக்கம், முத்து பளிங்கு, பவளம், புருடராகம், வயிரம், வைடூரியம், கோமேதகம் என்ற நவமணிக் குவியல்களும் அவற்றின் வகை தெரிந்துரைக்கும் மக்கள் தொகையும் ஆங்கு மண்டிக் கிடக்கும்.[17]

நவமணிக் கடைவீதியை அடுத்து, அம்மணிகளை அழுத்தி அணிகலன் ஆக்கத்துணை புரியும் பொன்விற்கும் பொன் வாணிகர் வீதி அமைந்திருந்தது. ஆங்குச் சாதரூபம், கிளிச்சிறை என்று மாற்றுக்குறைந்த இளம்பொன் வகையும், ஆடகம் சாம்பூநதம் என்ற மாற்று மிகுந்த பெரும் பொன் வகையும் விற்கப்பெறும்; வாங்க வருவார், இன்ன இடத்தில் இன்னபொன் உளது என்பதை எளிதில் உணர்ந்து கொள்ளுமாறு, அதை அறிவிக்கும் நால்வேறு கொடிகளும் ஆங்காங்கே நின்று பறக்கும்.[18]

பொன்வாணிகர் வீதியை அடுத்து வருவது அறுவை வீதி; ஆங்கு நூலாலும், மயிராலும், நுண்ணிய பட்டாலும், இனத்திற்குப் பலநூறு வகையாக நெய்யப்பெற்ற ஆடைகள் அடுக்கி வைத்து விற்கபெறும்.[19]

ஆடைகள் விற்கும் அறுவை வீதியை அடுத்து உணவிற்கு பயன்படும் பல்வகைப் பொருள்களும் விற்கும் பலசரக்குக் கடைவீதி அமைந்திருக்கும். ஆங்கு, நெல்லரிசி, புல்லரிசி, வரகு, தினை சாமை, இறுங்கு, தோரை, இராகி, எள்ளு, கொள்ளு, பயறு, உளுந்து, அவரை, கடலை, துவரை, மொச்சை என்ற ஈரெண்வகை கூலப் பொருள்களும் குவியல் குவியல்களாய்க் கொட்டி வைக்கப்பெறும். மிளகுப் பொதிகளும், பாக்குப் பொதிகளும், காலமல்லாக் காலத்தும் வந்து அவண் குவியும்; நிறுக்கும் துலாக்கோலும், அளக்கும் மரக்காலும் உடைய ராய தரகர், ஓரிடத்தே நிற்கமாட்டாது ஓடி ஓடித்திரிந்து வாணிகம் புரிவர்.[20]

வாணிக வீதிகளுள் கடைசியில் இருப்பது காயும்கனியும் விற்கும் மாலைக் கடைவீதி. கூலவாணிகர் வீதியில், சோறு ஆக்கஉதவும் உணவுப் பொருள்களை வாங்கியவர், கறிக்கு உதவும் உணவுப் பொருள், காய்கறிகளை வாங்கிச் செல்ல வாய்ப்பளிக்கும் வகையில், அவை விற்கும் கடைவீதி, கூல வீதியை அடுத்து அமைக்கப் பெற்றது. ஆங்கு மா, பலா, வாழை, முதலாம் கனிவகைகளும், வாழை வழுதுணம், பாகல் போலும் காய்வகைகளும், வள்ளி போலும் கிழங்கு வகைகளும், பருவத்தே மழை பெய்யத் துளிர்த்து வளர்ந்த வகை வகையான கீரைகளும், கற்கண்டுக் கட்டிகளும், விற்கப்படும். வெளியூர் வணிகர்க்கு, இறைச்சி கலந்து ஆக்கிய இனிய சோற்றினை விற்கும் வாணிகமும் ஆங்கு நடைபெறும்.[21]

வாணிக வீதிகளையெல்லாம் கடந்து சென்றால், நகரின் நடுவே அந்தணர்களும், அமைச்சர்களும், அரசரோ டொத்த பெருஞ்செல்வர்களும், அரசர்க்கு மகட்கொடை அளிக்கும் உரிமை பெற்ற உயர்ந்த வேளாளர்களும், அரசர் களும் வாழும் அழகிய மாளிகைகள் ஆங்காங்கே காணப் படும். நகரின் இடையடையே, மூன்று வீதிகளும் நான்கு வீதிகளும் வந்துக்கூடும், சந்திகளிலும், சதுக்கங்களிலும், மன்றங்களும், பொதியல்களும், ஆன்றோர் உறையும் அறங்கூர் அவைகளும் அமைந்திருக்கும்.

மக்களும், மன்னவனும் வாழும் மனைகளுக்கும், மாடங் களுக்கும் மன்றங்களுக்கும் இடையிடையே, ஏற்புடைய இடங்களில் எல்லாம்கடவுளர் உறையும் கோயில்கள் காணப்படும். மதுரைமாநகரில், சிவனுக்கும், செவ்வேளுக் கும், திருமாலுக்கும் பல தேவனுக்கும் எடுத்த கோயில்கள் எண்ணற்றன[22].

மதுரை மாநகரம், ஒரு பெரிய வாணிக நிலயமாத லோடு, அது ஒரு பேரரசின் தலைநகரும் ஆம். அதனால் அந்நகரத்து வீதிகளில் வந்து குவிந்து நிற்கும் பல நாட்டு மக்களுக்கு, அரசன் நாற்படையால், அவ்வப்போது இடையூறு உண்டாவதும் உண்டு. வேந்தன் படைகள், அவ் வீதிகளில் பலகால் போவதும் வருவதும் செய்யும். வீதிகளில் திரிந்து விலை கூறி விற்கும் சிறு வணிகர் கூட்டமும், அவ் வணிகர்களைச் சூழ்ந்து நின்று வாணிகம் புரியும் மக்களும், அரசன் நாற்படை அவ்வீதியுள் வரக்கண்ட வுடனே, தம் உயிரிழந்து போனாற்போல் அஞ்சி, அலறிப் புடைத்து, அங்கும் இங்கும் ஓடி, வீதியின் இருமருங்கும், மலையென உயர்ந்து நிழல் தந்து நிற்கும் மாடங்களில் ஒடுங்கி, அவற்றின் நிழலில் ஒதுங்கியிருந்து, படை அகன்றதும் பழையபடியே புகுந்து வாணிகம் புரிவர்.[23]

பெருவெள்ளம் வந்து பாய்வதால், பெருகாமல், மழை மேகம் குடிப்பதால் குறையாமல் என்றும் தன்னிலையில் திரியாது விளங்கும் கடல் போன்றது மதுரை. அரசியல் பணிகுறித்தும், வாணிக வளம் கருதியும் வருவாரும், போவாரும் மல்கிய மதுரை மாநகரும், வாழும் மக்கள் தொகையில் எக்காலத்தும், எவ்விதமாற்றமும் பெறு வதில்லை. ஆங்குமக்கள் தொகையில் மாற்றம் நிகழ்வது மில்லை.[24]

மதுரைமாநகரின் மாலைத் தோற்றம், மனமகிழ்ச்சி தரும் மாண்புடைத்தாகும். நாகரிகம் மிக்க நம்பியர் தம்மை ஆடை அணிகளால் அழகு செய்து கொண்டு, காற்றெனக் கடுக ஓடும் குதிரைகள் மீது அமர்ந்து, வீதிகளில் உலா வந்து, ஆங்காங்குள்ள அழகு நலங்களை கண்டு மகிழ்ந்து திரியும் காட்சியும், அகன்ற வீதிகளில் இருமருங்கும் வானளாவிய உயர்ந்த மாளிகைகளின் மேல் மாடத்தில் இருந்தவாறே நகர் அழகைக் கண்டு மகிழும் மகளிர் முகங்கள், அம்மாளிகையில் ஏற்றிய கொடிகள் காற்றால் ஆடுந்தோறும், மறைந்து, மறைந்து கருமேகத்தினிடையே புகுந்து புகுந்து வெளிப்படும் வெண்மதி போல் தோன்றும் காட்சியின்பமும், மதுரை வீதிகளின், மாலைக்காலத்து மறக்கவொண்ணா மாண்புகளாம்[25].

ஞாயிறு மறைந்து இருள் பரவத் தொடங்கியதும், மனையுறை மகளிர், மாடங்களில் விளக்கேற்றி வைத்து, இல்லுறை தெய்வங்களுக்கு மலர் தூவி மணப்புகை காட்டி வழிபடுவர். நாடக மகளிரும், அவர் நலம் விரும்பும் நகர நம்பியரும் ஆடியும் பாடியும் அகமகிழ்வர். மகவீன்ற மகளிர், மூதாட்டியர் துணை வரச்சென்று, தம் மாசுபோகக் குளத்தில் நீராடி மீள்வர். முதற் சூல் உள்ள தன் மகள் இனிதே மகவீன்று மாண்புறுதலை வேண்டும் தாய், வேலனையும் தேவராட்டியையும் வரவழைத்து வெறியாடி வழிபாடாற்றுவள். ஊர் மன்றங்களில் குரவைக் கூத்து

ஓயாது. நாற்சந்திகளிலும், முச்சந்திகளிலும் பேச்சு மேடைகளிலும் சொற்பொழிவும், இசையரங்குகளில் இசை விழாவும், நாடக மேடைகளில் நாடகமும் நடைபெற, மதுரை மக்கள் கண்டும் கேட்டும் களித்துச்செல்வர். இரவின் முன் யாமம் இவ்வாறு இனிதே கழியும். பின்னர் ஊரில் சங்கு, ஒலி அடங்கும். வணிகர் நம் கடைகளைத் திரையிட்டு அடைத்து உறங்கப்போவர். அப்ப வணிகர், விடிந்ததும் அப்பம் சுடுதற்கு வேண்டும், பாகு, பருப்பு, கற்கண்டு, கரைத்த மாவு இவற்றைப் பதம் பண்ணி வைத்துவிட்டு, அவற்றின் அருகிலேயே கிடந்து உறங்கத் தொடங்குவர். திருவிழாக்களில் தெருக்கூத்தாடும் கூத்தர், தம் கூத்து முடிந்து உறங்கப் போவர்; ஊரே ஒலி அடங்கி உறங்கும். இடையாமத்தில் மதுரையைக் காண்பார்க்கு, அது, பகலெல்லாம் ஓயாது ஒலித்த அலை அடங்கி உறங்கும் கடல்போல் தோன்றும்.[26]

ஒரு நாட்டில் வாழும் எல்லோரும் நல்லோராய் வாழ்வர் என எதிர்பார்த்தல் இயலாது. அந்நாடு எவ்வளவுதான் நல்லாட்சி நிலவும் நாடாயினும் அந்நாட்டிலும் ஒரு சில தீயோர் வாழ்வர். மதுரை, மாநிதி விளங்கும் ஒரு மாபெரும் நகரம், அதனால், அந்நகர் ஒரு சில கள்வர்களுக்கும் வாழிடம் வழங்கியிருந்தது. கருநிற மேனியும், கல்லையும் மரத்தையும் துளைக்கும் கன்னக்கோலும், எதிர்த்தாரைத் தாக்க ஏந்திய நீண்ட வாளும், காலில் செருப்பும், கையில் நூலேணியும் உடைய அக்கள்வர், தக்க சமயத்தில் தம்மைக் காத்துக் கொள்ள உதவும் உடைவாளை ஆடைமேல் செருகி, அது தெரியாதவாறு, அதன் மீது கச்சணிந்து, களவாடற்கேற்ற காலமும் இடமும் கருதி, ஊரெல்லாம் உறங்கும் இரவின் இடையாமத்தில்; மதுரை வீதிகளில் மறைந்து திரிவர். மதுரை மன்னன், ஆளும் முறையறிந்த அறிஞனாதலின், அக்கள்வரை அவர் அறியாமல் அஞ்சாது பின் தொடர்ந்துச் சென்று, அவர்

வாழிடம் அறிந்து கைப்பற்றி, மாநகர் மக்களையும், அவர் மாநிதியையும் காக்கவல்ல காவல் வீரரைப் பெற்றிருந்தான். களவு நூல்வல்ல அக்காவலர், பேயும் உறங்கும் நள்ளிரவிலும் உறங்காது, பெருமழை பெய்யும் காலத்திலும் ஓயாது திரிந்து காவல் புரிந்தனர். அதனால், மதுரை மக்கள், மனக் கவலையற்று அயர்ந்து உறங்கி இரவைக் கழித்தனர்.[27]

இரவுப்பொழுது இவ்வாறு இனிது கழியப் பொழுது புலரும் விடியற்காலையில், மதுரை மாநகர், மீண்டும், உயிர் பெற்று எழும். அந்தணர் ஓதும் வேத ஒலி, தேன் தேடித் திரியும் வண்டுகள் எழுப்பும் இன்னொலிபோல் எங்கும் வந்து இசைக்கும். யாழ்ப்பாணர் மனைகளில் மருதப்பண்ணொலி கேட்கும்; பாகர், யானைகளுக்கு உணவூட்டும் ஒலி உரக்க ஒலிக்கும்; குதிரைகள் எழுந்து புல்லும் கொள்ளும் உண்ணும் கடை வீதியில், பணியாளர் கடைகளை மெழுக்கித் துப்புரவாக்குவர்; கட்கடைகளில் தொழில் தொடங்கிவிடும். மனைகளில், துயில் ஒழிந்து தொழில் தொடங்கிய மகளிர், கதவுகளைத் திறக்கும் ஒலி மனைதோறும் ஒலிக்கும், நாழிகை உணர்த்துவார், விடிந்தது பொழுது என விளம்புவர் அரசன் கோயிலில் பள்ளி எழுச்சி முரசு, இமிழ் எனும் ஒலி எழ முழுங்கும். கோழிச் சேவல்கள் கூவும்; அன்னச் சேவல்கள், தம்பேடுகளை அழைக்கும்; மயில்கள் அகவும். களிறுகள் பிளிறும்; வலியக் கூட்டில் வாழும் கரடியும் புலியும் முழுங்கும். செல்வர் மனை முன்றில்களில், முன்னாள் தூவிய மலர்களின் வாடல்களை அம்மனையுறை மகளிர் இரவு தம் கணவரோடு ஊடியக்கால் உதிர்ந்த முத்துக்க ளோடும், அணிகளோடும் அகற்றி அவ்விடங்களை அழகு செய்வர். மதுரை வீதிகளின் வைகறை வனப்பு இத்தகைத்து.[28]

மதுரை, பாண்டி நாட்டின் தலைநகர்; பாண்டியர் தலைநகர்கள் கடல் கோள் போலும் காரணங்களால் பாழகும் போகூழ் உடைய; அந்நிலை மதுரைக்கும் பொருந்

திற்றுப்போலும். அதனால், அது வையையாற்று வெள்ளப் பெருக்கில் ஆழ்ந்து ஒருமுறையும், கற்புடைத் தெய்வமாம் கண்ணகியால் எரியுண்டு ஒரு முறையும் ஆக இருமுறை அழிவுற்றது. ஆனால், மதுரையைப் பண்டு அமைத்த அரசர், நகர் அமைப்பின் முறையெலாம் உணர்ந்து நலமெலாம் அமைய அமைத்தமையால், அது இருமுறை அழிவுக்குள்ளாகியும், பழைய பாண்டியர் தலைநகர்கள் போல் அறவே அழிந்து போகாது, தமிழ்நாட்டின் தலைசிறந்த நகராய் இன்றும் நின்று நிலைபெறுகிறது.

## சான்றெண் விளக்கம்

1. "நெடியோன் குன்றமும், தொடியோள் பௌவமும்
தமிழ்வரம்பு அறுத்த தண்புனல் நன்னாட்டு
மாடமதுரையும், பீடார் உறந்தையும்,
கலிகெழு வஞ்சியும், ஒலிபுனல் புகாரும்"
—சிலம் பு : 8 : 1—4.

2. "மலி திரை ஊர்ந்து தன்மண் கடல் வெளவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நாடு இடம்பட,
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்"
—கலித்தொகை : 104 : 1—4

3. சிலம்பு : 13 : 137—150
4. சிலம்பு : 13 : 115—133
5. சிலம்பு : 13 : 155—170
6. சிலம்பு : 13 : 176—179
7. சிலம்பு : 13 : 191—196; 15 : 115—116; 18 : 3—5

8. சிலம்பு : 13 : 183—184
9. மதுரைக் காஞ்சி : 352
சிலம்பு : 15 : 207—217
10. நெடு நல் வாடை : 87—88
மதுரைக் காஞ்சி : 356
11. சிலம்பு : 15 : 217; 14 : 63—67
12. நெடு நல் வாடை : 30
சிலம்பு : 14 : 70; 122—123
13. சிலம்பு : 14 : 70—145
14. சிலம்பு : 14 : 146—167
15. மதுரைக் காஞ்சி : 511—518
16. சிலம்பு : 14 : 168—179
17. சிலம்பு : 14 : 180—200
18. சிலம்பு : 14 : 201—204
19. சிலம்பு : 14 : 205—207
20. சிலம்பு : 14 : 208—211
21. மதுரைக் காஞ்சி : 527—544
22. சிலம்பு : 14 : 6—10
23. மதுரைக் காஞ்சி : 375—406
24. மதுரைக் காஞ்சி : 424—429
25. மதுரைக் காஞ்சி : 431—452
26. மதுரைக் காஞ்சி : 555—630
27. மதுரைக் காஞ்சி : 632—653
28. மதுரைக் காஞ்சி : 654—686

# ஆ. ஓடாப் புட்கை உறையூர்

பாண்டிநாட்டுத் தலைநகர், தொடக்கத்தில் கடல் கொண்ட நாட்டு மதுரையாய், இடைக் காலத்தில் கபாட புரமாய், இறுதியில் இக்கால மதுரையாய் மாறி மாறி வந்ததைப் போன்றே, சோணாட்டுத் தலைநகரும் மாறி மாறி வந்துள்ளது. கரிகாலன் காலத்தில், புகார், சோணாட்டின் தலைநகராய்த் திகழ்ந்தது. அவன் காலத் திலேயே, தலைநகராம் தகுதியினைப் பெறுவதற்கேற்ப, உறையூர் கோட்டையும் கோயிலும் உடையதாக அமைக்கப் பெற்றது. அவனுக்குப் பின், அதுவே சோணாட்டின் தலைநகர் ஆயிற்று. பிற்காலச் சோழர் காலத்தில், தலை நகர்த்தகுதியை உறையூர் இழந்து விட்டது. அது தஞ்சைக்கு மாறிற்று. தஞ்சையும் நிலைத்த தலைநகராய் வாழவில்லை. சோழர்களுள் சிலர், சிலகால் சிதம்பரத் தையும், சிலகால் காஞ்சியையும் தலைநகராகக் கொண் டனர்.

பாண்டியர் தலைநகர் ஒவ்வொன்றும், முன்னையது அழிந்த பின்னரே, பின்னது அமைக்கப்பட்டது; ஆனால் சோணாட்டுத் தலைநகர்கள் அவ்வாறு அமையவில்லை. ஒன்று இருக்கும்போதே மற்றொன்று அமைக்கப் பெற்றுள்ளது. பாண்டியர் தலைநகராய்த் திகழ்ந்த நகரங்களுள், இன்று மதுரை ஒன்றே உளது; ஏனைய இரண்டும் அழிந்து விட்டன. இந்நிலைக்கு மாறாக சோணாட்டுத் தலைநகராய்த் திகழ்ந்த நகரங்களுள்,

புகார் ஒன்றே அழிந்து போக, ஏனைய அனைத்தும் அழியாதே உள்ளன.

கரிகாலன் காலத்திலும் அவனை அடுத்து அரியணை ஏறியோர் காலத்திலும் சோணாட்டிற்குச் சேரநாடும், பாண்டி நாடும் மட்டுமே பகை நாடுகளாம். அதனால், அப்பகைவரை அடக்க, அவர் நாடுகளுக்கு அணித்தாகத் தலைநகர் அமைத்தனர். அந்நிலை மாறிற்று: பிற்காலச் சோழர் காலத்தில் பல்லவர், இராட்டிரகூடர், சாளுக்கியர் என்ற வடநாட்டு அரச இனங்களே சோணாட்டுப் பகைவர்களாய் வந்து வாய்த்தனர். அதனால், அப்பகையைத் தாங்கவும், தாக்கி அழிக்கவும், அச்சோழர் தலைநகர், மெல்ல மெல்ல வடக்கு நோக்கி வந்து விட்டது போலும்.

கடல் வாணிகம் வளர்த்த வளமார்நகராய் விளங்கிய புகார், ஒரு சில காலம் சோணாட்டின் தலைநகராய்த் திகழ்ந்தது என்றாலும், சோணாட்டின் நிலைத்த தலை நகராய்ச் சங்க காலத்தில் விளங்கியது உறையூர் ஒன்றே; தமிழ் அரசர் மூவர் தலைநகர்களையும் ஒரு பாட்டில் வைத்துப் பாராட்டிய இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார், "குட்டுவன், வருபுனல் வாயில் வஞ்சி" "செழியன் தமிழ்நிலைபெற்ற தாங்கருமரபின், மகிழ் நனைமறுகின் மதுரை" "செம்பியன் ஓடாப்புட்கை உறந்தை" எனச் சோணாட்டுத் தலைநகராக உறந்தை ஒன்றையே கூறியுள்ளார்.[1]

இளங்கோவடிகள், "மாட மதுரையும், பீடார் உறந்தையும், கலிகெழு வஞ்சியும், ஒலிபுனல்புகாரும்"[2] எனப் பாராட்டிய அடிகளில், சோணாட்டு நகரங்களாக உறையூர் புகார் இரண்டையும் கூறியுள்ளார் எனினும், உறையூரைத் தமிழரசர்களின் தலைநகர்களுக்கிடையே வைத்து, அவற்றோடொப்பக் கூறி சோணாட்டு நகர் என்ற உரிமையால், உறையூரோடு உடன் வைத்துக் கூற வேண்டிய

புகாரை, அவ்வாறு கூறாது, பாண்டி நாட்டுத் தலைநகர் மதுரைக்கும் சேரநாட்டு தலைநகர் வஞ்சிக்கும் இடையில் சோணாட்டுத் தலைநகர் என்ற உரிமை வாய்ந்த உறையூரைக் கூறிய பின்னர், புகாரைப் பிரித்து வேறு கூறியது, அவர் காலத்தில், சோணாட்டுத் தலைநகராய்த் திகழ்ந்தது உறையூரே என்பதை உறுதி செய்வதாகும்.

சோணாட்டின் தலைநகராய் விளங்கிய புகார், கடல் வாணிகம் வளர்ந்த பின்னர், வாணிகப் பெருநகராய் மாறி விட்டது. வாணிகம் கருதி வந்த வெளிநாட்டு மக்கள் வாழ்வால், ஆங்கு இடநெருக்கம் உண்டாயிற்று. காவிரி சூழக் கடலை அடுத்து இருந்த அந்நகர் எல்லை மேலும் விரிவு படுத்த இயலவில்லை. வளரும் மக்கள் பெருக்கத்திற்கு வாழிடம் தேடவேண்டியதாயிற்று! அக்குறைபாடு கண்டு கலங்கினான் அன்று சோணாட்டு அரியணையில் வீற்றிருந்த கரிகாற்பெருவளத்தான்.

கரிகாலன் போர்வேறி மிக்கவன்; போர் நுணுக்கம் அறிந்த அவன், பகை நாடுகளைச் சென்று தாக்கும் அண்மையில் தன் படைத்தளம் இருக்கவேண்டும் என எண்ணினான். சோணாட்டின் ஒரு கோடியில் இருக்கும் புகார், அதற்குத் தகுதியுடையதன்று எனக் கருதினான். மேலும் சோணாட்டின் பகை நாடுகளாய் பாண்டிநாடும் சேர நாடும், காவிரியின் தென்பால் திசைக்கண் உள்ளன. அப்பகை நாடுகள் மீது போர்தொடுத்துச் செல்லும் தன் படைகளை, இடையறாது பெருக்கெடுத்தோடும் காவிரியாறு பலமுறை தடுத்து நிறுத்தித் தான் எண்ணியதை எய்தவிடாது தடைசெய்வது கண்டு பலமுறை கலங்கிய கரிகாலன், தலைநகர், காவிரியின் தென்கரையில் இருந்தால் மிகுதியும் நலமாம் என எண்ணினான். அது தலைநகரை, வேறு தக்க இடத்தில் அமைக்க வேண்டும் என்ற அவன் கருத்திற்கு ஊக்கம் ஊட்டிற்று. சோணாட்டின் நடுநாயகமாய் விளக்கும் இடத்தைத் தேடத் தொடங்

கினான். அக்கருத்தோடு, காவிரியின் எதிர்முகமாகச் சில காவதம் சென்று, காவிரியைக் கடந்து அதன் தென்கரை அடைந்தான், ஆங்கு அவன் கண்ட காட்சி, அவ்விடத்தையே தலைநகர்க்குரிய இடமாகத் தேர்ந்தெடுக்கத் தூண்டிற்று.

கரிகாலன் காவிரியின் தென்கரையை அடைந்த பொழுது, ஆங்கு ஒரு கோழியும், ஒரு யானையும் போரிட்டுக் கொண்டிருந்தன. கோழியும் கோழியும் போரிடுவதும், யானையும் யானையும் போரிடுவதும் உலகியல்; அப்போர்க் காட்சிகளை அவனும் கண்டுள்ளான். ஆனால், கோழி, வேழத்தோடு போரிடுவது ஒரு புதுமை; அதுபோல் நிகழ்ச்சியை, அவன் அதுவரை கண்டதில்லை; அதனால் அப்போர்க்காட்சியை, ஆர்வமும் வியப்பும் மிகக்கண்டு நின்றான். போரின் முடிவு, அவன் வியப்பை அதிகமாக்கியது. கோழி, வேழத்தை வென்றது! களிறு தோற்றுத் தொலைந்தது. கோழியின் வெற்றிக்கண்டு வியந்த வேந்தன், சிறிது நேரம் அதுவே நினைவாய் நின்று இறுதியில் அவ்வெற்றி, கோழியின் ஆற்றலால் வந்ததன்று; அது அக்கோழி வாழும் நிலத்தின் ஆற்றலால் நேர்ந்தது; அம்மண்ணில் முளைக்கும் புல்லும் போர் வெல்லும் எனத் துணிந்தான். படை அமைத்துப் பகை வெல்லத் துணை புரியும் தலைநகரை அமைக்கத்தக்க இடம் தேடி வந்த கரிகாலன், அதற்கு அவ்விடமே, தக்க இடமாம் எனக் கருதினான்; அவ்விடத்தில் எழுப்ப எண்ணிய நகருக்கு அந்நிகழ்ச்சியை நினைவூட்ட, கோழி என்றே பெயர் சூட்டினான். கோழியின் மற்றொரு பெயராய வாரணம் என்ற பெயராலும் அது வழங்கிற்று.[8]

தலைநகர் அமைத்தற்குக் காவிரியின் தென்கரைக் கண்ணதாகிய அவ்விடமே ஏற்றதாம் எனக் கருதிய கரிகாலன், முதற்கண், ஆங்குக் காடென வளர்ந்திருந்த மரம் செடி கொடிகளை வெட்டி அகற்றினான்; பின்னர், மக்களும் மாவும் வாழ்தற்குத் தண்ணீர் இன்றியமையாதது

எனக் கண்டு, குளங்கள் பல தோண்டினான். நிலவளமும், நீர்வளமும் உடையதாக ஆக்கிய பின்னர், ஆங்கு மக்கள் வாழ வானளாவ உயர்ந்து விளங்கும் மாடங்களையும் மனைகளையும் கட்டினான்; அரசனும் அவன் வணங்கும் கடவுளும் இருந்தற்கு அரண்மனையும் ஆலயமும் அமைத்தான். வாழிடம் பெறமாட்டாது வருந்திய தன் சோணாட்டுக் குடிமக்களைக் கொண்டு வந்து குடியேற்றினான்.

அவ்விடத்தை இவ்வாறு மக்கள் வழங்கும் மாநகராக ஆக்கிய பின்னர், அதற்கு அரண் அமைக்கத் தொடங்கினான்; நகரைச் சூழப் பெரிய மதில் அமைத்தான். அம் மதிலில் ஆங்காங்கே, பெருவாயிலும் சிறுவாயிலும் அமைத்தான். மதில் உச்சியில் அகத்துளவீரர் நின்று போரிடற்கு ஏற்றவாறு, ஏவறைகளையும், ஆங்கு அவ்வீரர்க்கு வேண்டும் அம்புகளைச் சேர்த்து வைக்கும் அம்புப் புதைகளையும் அமைத்தான். உறையூர்க்கோட்டை, இவ்வாறு, அரணுக்குரிய அத்தனை உறுப்புக்களையும் குறைவறப் பெறவே, ஆங்கு நிறுத்தி வைக்கப்பெற்ற சோழர் படை, "பகைவர் பலர்; யாமோ துணையிலேம்; ஆகவே, போரிடும் துணிவு எமக்கு இல்லை" என அடங்கிவிடாது, "பகை எத்துணைப் பெரிதாயினும், அஞ்சாது பொருது அழிப்போம்" என்று இறுமாந்து கூறவல்ல, ஆற்றல் உடையதாயிற்று அழிக்கலாகா அரணும் அவ்வரணை நின்று காக்கவல்ல பெரும் படையும் பெற்ற உறையூர்க்கோட்டையில், வெற்றித் திருமகள், விரும்பி வீற்றிருக்கத் தொடங்கினாள்.[4]

கரிகாலனைப் பாடிப் பதினாறு நூறாயிரம் பசும்பொன் பரிசில் பெற்ற புலவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார், உறையூர்க்கோட்டை அமைத்த கரிகாலன் பெருஞ்செயலைத் தாம் பாடிய பட்டினப்பாலையுள் வைத்துப் பாராட்டியுள்ளார்.

சோழநாட்டின் சிறந்த படைத்தளமாக விளங்க வேண்டும் என்ற விருப்பத்தின் விளைவாகவே, உறையூர்

அமைக்கப்பெற்றது. அதற்கேற்ப, அந்நகர் அரணுள், கடல்போல் பரந்த ஒரு பெரிய படை, பகைவர்மீது எந் நேரத்திலும் வேண்டுமாயினும், போர்தொடுத்து எழுதற் கேற்ப, எக்காலத்தும் நிறுத்தப் பெற்றிருந்தது. அவ்வாறு நிறுத்தப்பெற்ற படையுள், சோணாட்டின் தலைசிறந்த யானைப்படையும் ஒன்று, அப்படையைச் சேர்ந்த யானை கள், உறையூரில் கோயில்விழாக் குறித்தும், கொற்றவை விழாக் குறித்தும், மனைகளில் நடைபெறும் மங்கல விழாக் குறித்தும் எழும் முரசொலி கேட்பினும், அதைப் போர் முரசின் ஒலி எனக்கொண்டு போர்வெறிகொள்ளும் பெருமையுடையவாம்; உறந்தை நகரின் இப்படைப்பெரு மையும், இப்படையைச் சேர்ந்த களிறுகளின் தோற்றமும் புலவர்களால் பாராட்டப் பெற்றுள்ளன. [5]

படைத்தளமாக விளங்கும் அந்நகரைப் பகைவர் பாழ் செய்ய முனைவர் என்ற அச்சம், அதை அமைக்கும் பொழுதே எழுந்தது. அதனால், அந்நகர் அரணைப் பகைவர் எளிதில் அணுகாவாறு, அதைச் சூழக் காவற் காட்டினை வளர்த்திருந்தனர்; சிறு குன்றுகளை இடை இடையே கொண்டு பெரும்பாலும் நொச்சி மரங்களே வளர்ந்திருந்த அக்காவற்காடு, பகைவர்க்குப் பாய்ந்து உட்புகலாகாப் பெருந்தடையாய் அமைந்தது. புலவர் பாராட்டைப் பெறும் பெருமை, அக்காவற்காட்டிற்கும் வாய்த்தது. [6]

உறையூர், சோழர்களின் படைநிற்கும் நகராக விளங்கி யமையால், உறையூரையும், அவ்வூர்க்கு உரிய சோழரையும் ஒருங்குவைத்துப் பாராட்டிய புலவர்கள் அனைவரும் "அடுபோர்ச்சோழர் அறங்கெழுநல்லவை உறந்தை," "மறங்கெழு சோழர் உறந்தை [7] எனச் சோழர்களின் போர்வீரம் தோன்றவே பாராட்டிப் பாடியுள்ளனர்.

பொறையாறு என்ற ஊர் புறந்தை எனத் திரிந்து வழங்குவதுபோல், உறந்தை என வழங்கும் உறையூர்,

மக்கள் வாழும் வானளாவும் மாடங்களாலும், அரசர் வாழும் அரண்மனையாலும் சிறப்புடைத்து. அதன் மாட மாளிகைகளும் மன்னன் கோயிலும், பிறர் எளிதில் புகலாகா அரிய காவல் உடையவை; பாடிப் பரிசில் பெறும் பாணன், பொருநன் முதலாம் இரவலர்களுக்கும், புலவர்களுக்கும் எளியவாய அவை, பகைவர் புகுதற்கு அரியவாம்.

உறையூர்ச் சோழனாய கோப்பெருஞ் சோழனின் உயிர் ஒத்த நண்பராய பிசிராந்தையார் என்ற பாண்டிநாட்டுப் புலவர், அன்னத்தைத் தூதுவிடுத்துப் பாடிய அழகிய பாட்டில், "குமரித்துறையில் அயிரை மீன் உண்டு, இமயம் நோக்கிச் செல்லும் அன்னமே, இடைவழியில் சோணாட்டில் உயர்ந்த மாடங்கள் நிறைந்த ஒரு மாநகர் தோன்றும்; அதுவே உறையூர்; என் நண்பன் உறையும் ஊரும் அதுவே; அது அரிய காவல் உடையது; ஆனால், நீ, அவன் நண்பனும், புலவனுமாய் நான் அனுப்பும் தூது ஆதலின், வாயில் காவலர்க்கு வருகையை உணர்த்தாதே உட்புகுந்து சோழனைக் கண்டு நலம் கூறிப் போவாயாக" எனக் கூறியிருப்பது, அந் நகர்க்காவலின் அருமை பெருமை தோன்றத் துணை புரிவது அறிக.

காவிரியின் தென்பால் அமைந்த உறையூர், அவ் வாற்றிற்கு நனிமிகச் சேய்மைக்கண் அமையாது, அக்காவிரி யாற்றுப் பாய்ச்சலால் வளம்பெற்ற வயல்களும் தோட்டங் களும் நிறைந்த அதன் கரைக்கு அணித்தாகவே அமைந் திருந்தது. புகார் போன்ற, காவிரியின் வடபால் நகரங்களில் வாழ்வார், உறையூரை எளிதில் அடைவதற்கு ஏற்றவாறு, காவிரியில், அன்று அணை அமையவில்லை. மக்கள், காவிரியை ஓடங்களில் ஏறிக் கடந்தே உறையூர் அடைந் தனர்: 'புகார் நகரத்தினின்றும் புறப்பட்ட, கோவலன் கண்ணகி, கவுந்தி ஆகிய மூவரும், காவிரியின் வடகரை வழியே சில காவதம் சென்று, பள்ளி ஓடம் ஏறிக் காவிரியைக் கடந்து. அதன் தென் கரை சேர்ந்தனர்" எனச் சிலப்பதிகாரம் கூறுவதும் காண்க.[8]

அவ்வூர் அருகே ஓடும் காவிரி ஆழம் மிக்கது. சில காலங்களில், ஓடக்கோலும் நிலைபெற மாட்டாது ஆழ்ந்து போகுமளவு, நீர்மட்டம் உயர்ந்துவிடுதலும் உண்டு.[10]

காவிரி வெள்ளப் பாய்ச்சலால் வளம் மிக்க நன்செய்கள் சூழ நடுவே நின்ற உறையூர்க்கு உணவுப் பஞ்சம் உண்டாவதில்லை; நெல் வயல்களே நல்ல அரணாக அமைந்த அம் மாநகரில் நெற்கூடுகள், மலை போல் நிறைந்திருக்கும் காட்சி, நின்று காணப் பேரழகு தரும்; அந்நெல் வளத்தைப் புலவர்கள் நாவாரப் பாராட்டியுள்ளனர்.[11]

நாற்படைப்பெருமையும், நெல்வளப் பெருக்கமும் மிக்க ஒரு நகரத்தில், செல்வமும் சிறந்து விளங்கும் எனச் சொல்ல வேண்டியதில்லை. பொன்னும் பொருளும் குவிந்திருந்தன; நவமணியும், எண்வகைக் கூலமும் எங்கும் நிறைந்தன; வளம் கொழிக்கும் வேறு நகரங்களைக் கூறுங்கால், உறையூரையே உவமை காட்டிக் கூறுமளவு, அது உயர்ந்து விளங்கிற்று.[12]

உறையூரின் வளம் பெருகுவதற்குப் பெருந்துணை புரிந்தது, அந்நகரின் நெய்தற்றொழிலே; உறையூர் ஆடைகள், உரோம் நகரத்து உயர்ந்த செல்வர்களால் உவந்து வாங்கப்பெற்றன; "ஆர்கரடிக்" என அவர்களால் அழைக்கப்பெற்ற உறையூர்ப் பூந்துகில்கள், உரோமப் பேரரசின் பொன்வளத்தையே பாழாக்குமளவு அந் நாட்டிற்குக் கொண்டு செல்லப்பட்டன; உறையூரின் அறுவை வாணிகம், தம்நாட்டுச் செல்வம், அவ்வாடையின் வரவால் சீரழிவது கண்டு, உரோமநாட்டு ஆட்சியாளர், அவ்வாணிகத்தைக் கட்டுப்படுத்தச் சட்டங்கள் இயற்றுமளவு வளர்ந்து வளம் தந்தது என மேலைநாட்டு நிலநூல் ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

"சான்றோர் பலர் யான் வாழும் ஊரே" என்றார் ஒரு பெரும்புலவர்; ஒரு நாடோ அல்லது நகரமோ, அமைதி

நிலவும் நல்வாழ்வு வேண்டின், ஆங்கு, அறிவன அறிந்து அறவழி காட்டும் ஆன்றோர் பலர் வாழ்தல் வேண்டும்; வாழும் மக்கள் உள்ளத்தை வளம் உடையதாக்கும் ஆற்றல் அவர்க்கே உண்டு; மக்கள், மனவளம் அற்றவராயின், ஆங்கு நிலவளமும், நிதிவளமும் நிறைந்திருப்பினும் பயன் இல்லை; நல்வாழ்விற்கு வேண்டும் அமைதி அங்கு நிலவாது; அது மனவளம் ஒன்றினாலேயே உண்டாம்; ஆகவே, அம்மன வளம் உண்டாக்கும் மாண்புடைப் பெரியோர் வாழ்வு நனிமிக இன்றியமையாது; உறையூர், இதிலும் குறைபாடு டையதன்று; ஆன்றோர் பலர் அந்நகரில் வாழ்ந்திருந்தனர்; பழந்தமிழ்ப் பாடல்கள் மட்டும் புலவர் பலர் பெயர்களை நமக்கு அறிவிக்கின்றன. இளம் பொன் வணிகனார், ஏணிச் சேரிமுடமோசியார், கதுவாய்ச் சாத்தன், சல்லியன்குமரன், சிறுகந்தன்; பல்காயன், மருத்துவன் தாமோதரன், முடவன், முதுகண்ணன், சாத்தன், முதுகூத்தன், முதுகொற்றன், இவர் களே அப் புலவர்கள்.

புலவர் பெருமக்களின் வாழிடமாக விளங்கிய உறையூரில், உலகமக்களுக்கு உய்யும் நெறி காட்டும் அருகனை வழிபட்டு அறமுரைக்கும் சமணச் சான்றோர் களும் வாழ்ந்திருந்தனர். மதுரை நோக்கிச் செல்லும் கோவ லனுக்கும் கண்ணகிக்கும் வழித் துணையாய் வந்த கவுந்தி அடிகள் எனும் மூதாட்டியார், அவர்களோடு உறையூரில் ஒரு நாள் தங்கியபொழுது, ஆங்கிருந்த நிக்கந்தன் கோயிலுக்குச் சென்று, ஆங்குக் கோயில் கொண்டிருக்கும் அருகனை வணங்கிய பின்னர், ஆங்கிருந்த சமண முனிவர்களுக்குத் தாம் அறிந்த சில சமய உண்மைகளை உணர்த்தினார் எனச் சிலப்பதிகாரம் கூறுவது அறிக.

உறையூர், அறிவன அறிந்த ஆன்றோர்களும், அறம் உரைக்கும் சமணச் சான்றோர்களும் வாழும் இடமாய் விளங்கினமையால், அவ்வூர் மக்கள், அறவுள்ளமும் வாய்க்கப் பெற்று விளங்கினர். ஆங்குள்ள அறங்கூர் அவைகள், நீதி

வழங்குவதில் நெறி பிறழாவாயின. உறையூர் அவைக்குச் சென்றால், குறை தீர்க்கப்படும்; முறை வழங்கப்பெறும்; ஆங்கு அறமுறை கெடாது என மக்கள் மனதார நம்பினர்; நம்பியதோடு அதை நாடறியக் கூறி, அவ் அவைகளை நாவாரப் பாராட்டினர்.

அழிக்கலாகா அரண், போர் வல்ல பெரும்படை, பெரிய பெரிய மாளிகைகள் நீர்வளம், நெல்வளம், நல்ல பல தொழில் வளம், இவ்வளங்களால் பெறலாம், பொன்வளம், ஆன்றோர் வாழ்வு, அறங்கெடா அவை எனப் பல நலம் பெற்று விளங்கினமையால், உறையூரின் புகழ் உலகெலாம் பரவிற்று; "கெடலரும் நல்லிசை உறந்தை." "செல்லா நல்லிசை உறந்தை" என்றெல்லாம் புலவர்கள் அதன் புகழ் பாடிப் பாராட்டியுள்ளனர்..

## சான்றெண் விளக்கம்

1. சிறுபாணாற்றுப் படை : 49—50; 65—67; 82—83
2. சிலம்பு—8: 3-4
3. "முறம் செவி வாரணம் முன்சமம் முருக்கிய
   புறஞ்சிறை வாரணம் புக்கனர்"

   "யானையைக் கோழி முருக்கலால் கோழியென்று பெயராயிற்று; யானையைச் சயித்த கோழி தோன்றின விடம் வலிவுடைத்தென்று கருதி அவ்விடத்தை அதன் பெயராலேயே சோழன் ஊர்காண்கின்ற பொழுது, "முற்காலத்து ஒரு கோழி யானையைப்போர் தொலைத் தலான் அந்நிலத்திற் செய்த நகர்க்குக் கோழி என்பது பெயராயிற்று"

—சிலம்பு : 10 : 24 7-48; அரும்பத, அடியார்க்கு நல்லார் உரைகள்.

4. காடுகொன்று, நாடாக்கிக்
குளம்தொட்டு, வளம் பெருக்கிப்
பிறங்குநிலை மாடத்து உறந்தை போக்கிக்
கோயிலொடு குடி நிறீஇ,
வாயிலொடு புழை அமைத்து,
ஞாயில்தொறும் புதைநிறீஇப்,
பொருவேம் எனப் பெயர்கொடுத்து
ஒருவேம் எனப் புறக்கொடாது
திருநிலைஇய பெருமன் எயில்"
பட்டினப் பாலை : 283—291

5. "கடலந்தானைக் கைவன் சோழர்
கெடலரும் நல்லிசை உறந்தை" —அகம் : 369

"கைவல் நாலைக் கடுந்தேர்ச் சோழர்
காவிரிப் படப்பை உறந்தை" —அகம் : 365

"யானை, நெடுநர் வரைப்பில் படுமுழா ஓர்க்கும்
உறந்தை" —புறம் : 69

6. "நொச்சிவேலித் தித்தன் உறந்தைக்
கல்முதி புறங்காட்டன்ன பன்முட்டின்று"

7. அகம் : 93; நற்றிணை : 400

8. சோழ நன்னாட்டு படினே, கோழி
உயர்நிலை மாடத்துக் குறும்பறை அசைஇ
வாயில்விடாது கோயில் புக்கு" —புறம்—67

"பிறங்குநிலை மாடத்து உறந்தை" புறம்—69

9. "குடதிசை கொண்டு கொழும்புனல் காவிரி
வடபெரும் கோட்டு மலர்பொழில் நுழைந்து
காவதம் கடந்து"

"காரணி பூம்பொழில் காவிரிப் பேரியாற்று
நீரணி மாடத்து நெடுந்துறை போகி
மாதரும் கணவனும் மாதவத் தாட்டியும்
தீதுநீர் நியமத் தென்கரை எய்தி"

சிலம்பு : 10 : 34—36; 214—217

10. காவிரிப்படப்பை உறந்தை"
"உறந்தையாங்கண்
கழைநிலை பெறாக் காவிரி நீத்தம்"

11. வெண்ணெய் வேலி உறந்தை"
"பிண்டநெல்லின் உறந்தை"

12. உறந்தை அன்ன
நிதியுடை நன்னகர்" —அகம் : 369

"உறந்தை அன்ன
பொன்னுடை நன்னகர்" —அகம் : 385

13. "கோதைதாழ் பிண்டிக் கொழுநிழல் இருந்த
ஆதியில் தோற்றத்து அறிவினை வணங்கிக்
கந்தன்பள்ளிக் கடவுளர்க்கு எல்லாம்
அந்தில் அரங்கத்து அகன்பொழில் அகவயின்
சாரணர் கூறிய தகைசால் நன்மொழி
மாதவத் தாட்டியும் மாண்புற மொழிந்து"

—சிலம்பு : 11 : 3-8

"அறங்கெழு நல்லவை உறந்தை"

—அகம் : 93

"உறந்தை அவையத்து
அறம்கெட அறியாது" —நற்றிணை : 400

"உறந்தை அவையத்து
அறம் நின்று நிலையிற்று" —புறம் : 39

"அறம் துஞ்சு உறந்தை" —புறம் : 58

அகம் : 369; புறம் : 395

# இ. பழந்தமிழர் சமயநிலை

வழிபடாதாரை வருத்தும்; ஆகவே வழிபடல் வேண்டும் என்ற அச்சம், வழிபட்டால் இது கிடைக்கும் என்ற ஆசை; இது வழங்கிற்று; ஆகவே வழிபடல் வேண்டும் என்ற நன்றி உணர்வு என இம் மூன்று காரணங் களை அடிப்படையாகக் கொண்டே, உலகெங்கும் உள்ள மக்கள், கடவுள் வழிபாடு மேற்கொண்டுள்ளனர். அச்சம், ஆசை, நன்றியுணர்வு என வழிபாட்டுக் காரணம் மூன்றா யினும், அச்சம் காரணமான வழிபாட்டு முறையே முதலாவ தாகும். "அஞ்சி ஆகிலும் அன்பு கொண்டாகிலும், நெஞ்சம் வாழி! நினை நின்றி யூரனை" என்ற நாவரசர் வாக்கில், அச்சமே முன் வைக்கப்பட்டுள்ளது உணர்க. இது தமிழகத்திற்கும் பொருந்தும்.

"ஞாயிறு போற்றுதும்": "திங்களைப் போற்றுதும்"; "மாமழை போற்றுதும்" என்ற சிலப்பதிகாரக் கடவுள் வாழ்த்துப் பாடல்களை நோக்க, ஞாயிறும், திங்களும், மழையும் நல்கும் நலம் கருதி அவற்றை வழிபடும் வழக்கம் பிற்காலத்தே உருவாகி விட்டது எனத் தெரிகிறது என்றாலும் அவற்றை ஆதிகால மக்கள், அச்சம் காரண மாகவே வழிபட்டனர் என்பது தெளிவு. அரவு வழிபாடும் அச்சங்காரணமாக வந்ததே ஆகும்.

கடும் வெய்யிலும் கொடு மழையும் தங்களைத் துன்புறுத்தும்போது, அவை தம்மைத் தாக்காவாறு

ஆல்வேம்பு போலும் மரங்கள் தடுத்து உதவக் கண்ட மக்கள், அவ்வாறு காக்கும் பணியை, அம்மரங்களில் உறையும் கண்காணாக் கடவுள்களே ஆற்றின என நம்பி, அம்மரங்களில் உறையும் கடவுள்களை வழிபடும் நினைவில், அம்மரங்களையே வழிபடலாயினர். இவ்வகை யால், மரங்களை வழிபட்டுப் பழகிய மக்கள், அம்மரங்கள் இல்லாத இடங்களில், அம்மரங்களின் துண்டுகளையே நட்டு வழிபட்டனர். அதுவே கந்தறி எனப் பெயர் பெற்றது. கந்து என்ற சொல்லுக்குத் தெய்வம் உறையும் தறி எனப் பொருள் கூறுவர்.

செய்த உதவிக்கு நன்றி தெரிவிக்கும் முகத்தான், ஞாயிறு, திங்கள், மழை என இம்மூன்றையும் வழிபட்டதைப் போலவே, கொடு விலங்கு, கள்வர், பகைவர் முதலாயி னோரிடமிருந்து, தம்மையும், தம் உடைமைகளையும் காத்து. காக்கும் அப்பணியில் உயிர் விட்ட வீரர்களையும் வழிபடத் தலைப்பட்டனர். அவ்வாறு வந்ததே வீரக்கல் அல்லது வீரக்கல் வழிபாடு. வீரர்களை வழிபட எழுந்த அப்பண்டை வழக்கமே, சிலப்பதிகாரக் காலத்தில், கண்ணகிக்குச் சிலை அமைக்கும் பத்தினி வழிபாடாகவும், இக்காலை, அறிவு, அரசியல், சமயம், சமூகம் ஆகிய துறைகளில் ஆக்கப் பணி புரிந்த பெரியார்களுக்குச் சிலை அமைக்கும் வழக்கமாகவும் மலர்ந்து விட்டது.

அரும்பெரும் பணிகள் ஆற்றி மறைந்த முன்னோர் களை வழிபட, வருவார்க்கெல்லாம் வயிறு புடைக்க உணவு வழங்கிய பெருஞ்சோற்றுதியன் சேரலாதனைத் "துறக்கம் எய்திய தொய்யா நல்லிசை முதியார்ப் பேணிய உதியன்" எனப் புகழ்மிகு பெயர் சூட்டிப் பாராட்டியுள்ளனர்.

கடவுள்களைப் பெயர் சூட்டாதும், இனம் பிரிக்காதும் வழிபட்ட முறை தொல்காப்பியர் காலத்திலேயே மாறி விட்டது. நிலங்களில் தட்ப, வெப்ப நிலைகளுக்கு ஏற்பவும்,

ஆங்கு நிலவும் மரம், செடி, கொடி, மாவினங்களுக்கு ஏற்பவும், அந் நிலங்களை நால் வகையாகவும், ஐவகை யாகவும் பிரிக்கக் கற்றுக் கொண்ட நிலையில் ஒவ்வொரு நிலத்திற்கும் ஒவ்வொரு கடவுள் எனக் கடவுள் நிலையிலும் வேறுபாடு கொண்டனர். காடுறை கடவுள் மாயோன்; மலையுறை கடவுள் சேயோன்; வயல் உறை கடவுள் வேந்தன்; கடல் உறை கடவுள்வருணன்; பாலைக்கு உரியவள் கொற்றவை எனக் கூறும் தொல்காப்பியர் கூற்றும் காண்க. ஒரு நிலத்துக்கு உரியவன் என்ற குறுகிய வரம்புக்கு அகப்படாமல் எல்லா நிலத்தும் உரியவனாய் நிலங்கடந்த நெடியோனாக விளங்கியதனாலோ, என்னவோ தொல்காப்பியர் சிவனைக் கூறவில்லை எனினும், சங்ககால மக்கள் அவனை அறிந்தே இருந்தனர். சிவனே அல்லாமல், வாலியோன், பிரம்மன், காமன், யமன், இருக்குமி போலும் கடவுள்களையும் சங்ககால மக்கள் அறிந்து வழிபட்டனர்.

ஊர் நடுவே நிற்கும் மரத்தடிகளையே கடவுள் உறையும் இடமாகக் கருதி வந்த நிலை மாறிக் கடவுள் களுக்குக் கோயில், கோட்டம் என்ற பெயரில் தனிக் கட்டிடம் எழுப்பும் வழக்கமும் பண்டே இடம் பெற்று விட்டது. எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும், சிலம்பும், மேகலையும் அக்கோயில்களின் வகை வனப்புகளை விரிவாக எடுத்துக்கூறி விளக்கியுள்ளன, "நுதல்விழி நாட்டத்து இறையோன் கோயில்" என்பது போலும் தொடர்களைக் காண்க.

கடவுள்களை நீராட்டி, மலர்சூட்டி, பாலும், பழமும், பல்வகை உணவும் படைத்து வழிபட்டமக்கள், அக்கடவுள் களுக்கு உளநிறைவு உண்டாக்குவான வேண்டி, பல்வேறு வேள்விகளை எடுக்கவும் கற்றிருந்தனர். அத்தகைய வேள்வி களை முன்னின்று நடத்திப்புகழ் கொண்ட வேந்தர்களைப் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, இராசசூயம்

வேட்ட பெருநற்கிள்ளி எனப்பட்டம் சூட்டிப் பாராட்டவும் முனைந்தனர்.

இவ்வாறு கடவுள் வழிபாட்டு உணர்வினராய் விளங்கிய தமிழர்களிடையே, நல்வினை, தீவினை; துறக்கம், நாசம், உம்மை, இம்மை; மறுமை; பேய் பிசாசு: காக்கை கரையின் விருந்தினர் வருவர்; காரி கரையின் பகைவர் வருவர்! ஆந்தை அலறின் ஆகும் கொடுமை' நற்சொல் கேட்பின் நலம் விளையும்; கறவை கண்களில் நீர் மல்கினும், பால் உறையாது நிற்பினும், தீங்குகள், வந்துறும்; விண்மீன் வீழ்ச்சி வேந்தர்க்குத் தீங்கு; மகளிர்க்கு இடக்கண்ணும், ஆடவர்க்கு வலக்கண்ணும் துடிக்கின் இன்பம்; மாறித் துடிக்கின் துன்பம்: தீக்கனாத் தீங்குசெய்யும் என்பன போலும் நம்பிக்கை உணர்வுகளும் இடம் பெறலாயின.

இவ்வாறு, சிவனையும், திருமாலையும், முருகனையும், பலராமனையும். கொற்றவையையும், திருமகளையும், மக்கள் வழிபட்டனராயினும், ஆவேறு உருவின ஆயினும், ஆபயந்த பால் வேறு உருவினதாகாது ஓர் உருவே ஆகும் என்ற உணர்வுடையராய், அக்கடவுள்களிடையே வேறுபாடு காணாமல், ஏற்றத்தாழ்வு புகுத்தாமல், ஓர் உணர்வின் பல்வேறு வடிவங்களாகவே மதித்து வழிபட்டனர்.

# ஈ. குதிரைமலை அஞ்சி

சேரநாடு, முழுவதும் மலைகளே மலிந்து, பொதுவாக மலைநாடு என்றே வழங்கப்படும் என்றாலும், அம்மலை நாட்டுள்ளும் சிறப்புடைய மலைகள் குதிரையும், கொல்லியும். கோடையும் ஆகும். அவற்றுள், "ஊராக்குதிரை" எனப் புலவர்களால் அழைக்கப்பெறும் குதிரைமலை, மழை மேகங்கள் வந்து தங்குமளவு மிக உயர்ந்த முடிகளைக் கொண்டது; நால்வேறு திசைகளிலும் நறுமணத்தை வாரி வழங்கும் கருநீல மலர்கள் கவின் பெறக் காட்சி தரும் ஆழ்ந்த பெரிய சுனைகள் பல கொண்டது. ஓவெனும் பேரொலி ஓயாது எழ உருண்டோடும் எண்ணிலா அருவிகளைக்கொண்டது. மிளகும் மூங்கிலும் மலிய வளர்ந்து நிறை பயன் தருவது. மலைச்சாரல் விளைநிலங்களில் மகளிரின் முன் கை போல மலர்ந்திருக்கும் காந்தள் மலர்க் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

அக்காந்தட் கிழங்குகளை உண்ணும் விருப்போடு இராக்காலத்தே, காட்டுப் பன்றிகள் கூட்டங் கூட்டமாய் வந்து, மண்ணைக் கீழ்மேலாகக்கிளற, அதனால் ஏர்கொண்டு உழ வேண்டாதே புழுதிபட்ட புன்செய்களில் மலைக்குறவர் தினை விதைத்துப் பயன் கொள்வர் அவ்வாறு பயன் கொண்ட அக்குறமக்கள், அப்பயனைத்தாம் மட்டுமே தனித்திருந்து நுகர எண்ணாது, முற்றி விளைந்த செந்தினை அரிசியையும், காட்டுப்பசுக்கள் பால் கறந்து கொண்ட பாலைக் கலந்து ஆக்கிய சோற்றைத் தம் மனை நோக்கி

வரும் விருந்தினர்க்கெல்லாம், வாழை இலை படைத்து இட்டு மகிழ்வர்.

குதிரை மலைக்கும், அக்குதிரை மலைவாழ் மக்களுக்கும் உள்ள இம்மாண்பினைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார் புலவர் கருவூர்க்கந்தப்பிள்ளை சாத்தனார்.

குதிரைமலையின் பெருமை அம்மட்டோடு நின்றுவிடவில்லை; நீர்வள, நிலவளங்களோடு, நிறைநவமணிகளும் நிறையப்பெற்றிருந்தது அம்மலை விளைந்து கதிர் ஈன்று காட்சிதரும் ஐவனம் என்ற மலைநெற்பயிரைக் காத்துக் கிடக்கும் கானவர், காட்டு விலங்குகள் தொலைவில் இருக்கும் போதே அவைகண்டு அஞ்சி ஓடிவிடுமாறு, ஆங்காங்கே மூட்டிவிடும் காவல் தீ, காற்றாலோ, மழையாலோ அவிந்து போய்விட்டால், அக்காலை அத்தீயின் பணியைக் குறைவற நிறைவேற்றி வைக்குமாம், ஆங்காங்கே மண்டிக்கிடக்கும் மாணிக்க மணிகளிலிருந்து வெளிப்படும் பேரொளி. குதிரை மலைநாட்டு மண்ணில் கிடைக்கும் மாணிக்கங்களின் மாண்பினை வாயாரப் பாராட்டியுள்ளார், நவமணி வாணிகத்தில் வல்ல புலவர் வடம வண்ணக்கன் தாமோதரனார்.

இவ்வாறு. மழையாலும், மழைதரு வளத்தாலும், மாணிக்க மணிகளாலும் மாண்புற்ற குதிரை மலையை ஆட்சி புரிந்தவரில் அஞ்சி என்பான் சிறப்புடையவனாவன். பெரும்புலவர் பரணரும், பெருஞ்சித்திரனாரும், தம்முடைய அகப்புறப் பாடல் வரிகளால் குதிரை மலை, அஞ்சிக்குரியது எனச் சான்று பகர்ந்துள்ளனர்.

தமிழ் நாடாண்ட அரச இனத்தவருள், சேரர், சோழர், பாண்டியர் என்ற பேரரச மரபினர் மட்டுமேயல்லாமல், அதியர், ஆவியர், மலையர், வேளிர் போலும், வேறு சில சிற்றரசர் மரபினரும் இருந்தனர்; அவருள் அதியர் என்பார், சேலம் மாவட்டத்தில், இன்று தர்மபுரி என வழங்கும்

தகடூரைத் தலைநகராகக் கொண்டு, அம்மாவட்டத்தின் வடபகுதியை ஆண்டு வந்தவராவர். தேவர்களை வழி பட்டும், அவர்களுக்கு வேள்வி எழுப்பி ஆவுதி அளித்தும், பெறுதற்கு அருமையுடையதும், அமிழ்தம் நிகர் சுவை யுடையதும் ஆகிய கரும்பைத் தமிழகத்துக்கு முதற்கண் கொண்டுவந்த பெருமை வாய்ந்தது அதியர் இனம் என அதன் பெருமை பாராட்டியுள்ளார் ஔவையார்.

மலைநாடாண்ட மன்னர்களாம் சேர இனத்தவரோடு அதியர், ஒரு வகையில் உறவுடையவராவர். அதனால் "போந்தை வேம்பே ஆர் எனவரூஉம் மாபெருந்தானையர் மலைந்த பூ" எனக் கூறியவாறு சேர அரசர்க்கு உரியது எனக் கூறப்பட்ட பனந்தோட்டு மாலையை அதியர்க்கும் உரிமையாக்கிக் கூறியுள்ளார்கள் புலவர்கள். கடைச்சங்க காலமாகிய கி. பி. இரண்டாம் நூற்றாண்டில், தமிழக அரசியலில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்த அதியர், கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் பேரரசு நடாத்திய விசயா லயன் வழிவந்த சோழர் காலத்திலும் சிறந்து விளங்கினர்; அச்சோழப் பேரரசுக்கும் படைத்துணை போகுமளவு பெரு வாழ்வு வாழ்ந்திருந்தனர் எனச் சோழர் காலக் கல்வெட்டு கள் பலவும் சான்று பகர்கின்றன.

குதிரை மலைக்கு உரியவராகிய அதியர் இனத்தவர் இருந்து ஆண்ட இடம் தகடூராகும். இன்றைய தர்மபுரியே அன்றைய தகடூராகும் என்பதற்குத் தர்மபுரியை அடுத்திருக் கும் சிற்றூர்களின் பெயர்கள் அதியமான் கோட்டை, அதகப்பாடி என அமைந்திருப்பதே போதிய சான்றாகும். போரில் வெற்றி அல்லது தோல்வி காணா வில்வீரர் பலர் காத்து நிற்கும் காவற்காட்டான் சூழப்பெற்றது தகடூர்க் கோட்டை; அக்கோட்டைக்குள் அதியர் புகழ் பாடிவரும் புலவரும் இரவலரும் நுழைதல் இயலுமே யல்லது, படை கொண்டு பகைத்து வருவார் எவரும் நுழைய இயலா அரிய காவல் அமையப் பெற்றது.

தகடூரைத் தலைநகராகக் கொண்டு அரசோச்சிய அதியர் அறவழி ஆட்சிபுரிந்து வந்தனர். அந்நாட்டு ஆனிரைகள், காலையில் காடு புகுந்து மாலையில் மனை திரும்பும் வழக்கம் உடையவை அல்ல; காடுகளில் தமக்குக் கேடு செய்யும் கொடு விலங்குகள் இன்மையால், காடு புகுந்து மேயும் அவ்வானிரைகள், மனை புகும் மனம் இலவாகித் தம் கன்றுகளோடு, இரவிலும் அக்காட்டிலேயே இருந்துவிடும். வாணிகம் கருதியும், வேறு சில காரணம் குறித்தும் ஊர் ஊராகச் சென்றுவரும் வழிப்போக்கர்கள், வழி ஆறலை கள்வர் அற்று விளங்குவதால், இரவு வந்துற்றதும் அரண்மிக்க இடம் தேடி ஓடாமல், தாம் விரும்பும் இடங்களில் இருந்து இளைப்பாறிச் செல்வர். நாடு வளம் மிக்கது ஆகவே, நெல் முதலாம் உணவுப் பொருள்களைக் களவாடக் கனவினும் கருதார் ஆதலின், உழவர்கள் தாம் அறுத்து அடித்துக் குவித்த நெல் முதலாம் விளைபொருட் குவியல்களைக் காவல் இன்றிக் களத்துமேடுகளிலேயே விட்டு வைப்பர், என அதியர் ஆட்சி நலப்பெருமையைப் பாராட்டியுள்ளார் பெரும்புலவர் அரசில்கிழார்.

தகடூர் ஆண்ட அதியருள், அஞ்சி என்பான், தான் பிறந்த அதியர் குடிக்குப் பீடும் பெருமையும் தேடித் தந்த பேரரசனாவன். அதனால், வேளாளர் குடியில் வந்தவர் அனைவருமே கிழார் என அழைக்கப்படுவர் என்றாலும், அக்குடிப் பிறந்த அனைவருள்ளும் சிறந்து விளங்கினமையால் பெரிய புராண ஆசிரியர் ஒருவர் மட்டுமே, சேக்கிழார் என அக்குடிப் பெயரான் அழைக்கப்படுதல் போல், அஞ்சி ஒருவன் மட்டுமே அதியமான் என அக்குடிப் பெயரான் அழைக்கப்பட்டான். அவன் பெயர், அதியமான் நெடுமான் என, அவன் குடிப் பெருமை மேலும் தோன்ற அழைக்கப் பெறுதலும் உண்டு; ஒரோவழி, குடிப்பெயரோடு, இயற்பெயரும் இணைய அதியமான் நெடுமான் அஞ்சி என வழங்கவும் பெறும்.

இவ்வாறு, அதியமான் எனவும், அதியமான் நெடுமான் எனவும், அதியமான் நெடுமான் அஞ்சி எனவும், நெடுமான் அஞ்சி எனவும், அஞ்சி எனவும் அவன் பெயரைப் பல்வேறு வகையாகவும் வழங்கி மகிழும் புலவர் பெருமக்கள், அவனை எழினி எனும் பிறிதொரு எழில்மிகு பெயராலும் அழைத்துள்ளனர்.

தகடூரை அரசிருக்கையாகக் கொண்டு குதிரை மலை நாட்டை ஆண்டவன் அஞ்சி.

# உ. களப்பிரர்

கடைச் சங்க காலத்திற்கும், கி.பி. ஆறாம் நூற்றாண்டின் கடைப் பகுதிக்கும் இடைப்பட்ட காலம், தமிழக வரலாற்றில் இருண்ட காலமாகும். வடக்கே சாதவாகனப் பேரரசின் வீழ்ச்சியாலும், பல்லவர்களின் வளர்ச்சியாலும், சமுத்திரகுப்தனின் படையெடுப்பினாலும் கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் தொண்டை மண்டலத்தில் மிகப் பெரிய அரசியல் குழப்பம் ஏற்பட்டது.

தமிழகத்தின் வடவெல்லையாகிய வேங்கடத்தைப் புல்லி என்பான் ஆண்டு வந்தான் எனவும், அவன் கள்வர் எனவும், களவர் எனவும் வழங்கப்பட்ட ஓர் இனத்தைச் சேர்ந்தவன் எனவும் சங்க இலக்கியங்கள் அறிவிக்கின்றன.

"கல்லா இளையர் பெருமகன் புல்லி
வியன்தலை நன்னாட்டு வேங்கடம்" [1]

"புடையலம் கழற்கால் புல்லிக்குன்றம்" [2]

"புல்லிய
வேங்கட விறல் வரை" [3]

"களவர்" என்ற சொல் கன்னடத்தில் "களபடு" என மாறும். அது, வடமொழியில் "களப்ரா" என மாறும்; அது மீண்டும் தமிழில் வந்து வழங்கும் போது "களப்பிரர்" என ஆகும்.

சங்க காலத்தில் தமிழ் நாடாண்ட மூவேந்தர்களும், குறுநில மன்னர்களும், தம்முள்ளே போரிட்டுப் போரிட்டு வலுவிழந்திருந்த நிலையில், வேங்கடத்தை ஆண்டிருந்த களவர் என அழைக்கப்படும் அக்களப்பிரர்கள், தமிழகத்துள் புகுந்து சோழ, பாண்டியப் பேரரசுகளை வென்று தம் ஆட்சியை நிறுவிக் கொண்டனர்.

அவ்விருண்ட காலத்தவர் எனக் கருதத் தக்கவரும் புத்த சமய வளர்ச்சி குறித்து ஈழநாடு சென்றவரும் ஆகிய புத்த தத்தர், காவிரி நாட்டைக், களப்பிரகுலத்தவனாகிய அச்சுத விக்கந்தன் ஆட்சி புரிந்தபோது, அக்காவிரிக் கரை ஊராகிய பூத மங்கலத்துப் பள்ளியில் இருந்து, "விநய வினிச்சயம்" என்ற நூலை இயற்றியதாகக் கூறியுள்ளார்.

அச்சுதக் களப்பாளன் என்னும் பெயர் கொண்ட ஒருவன், மூவேந்தர்களையும் வென்று, அம்மூவரசுகளையும் தன் ஒரு குடைக் கீழ்க் கொண்டு வந்தான் என்று, யாப்பருங் கலக்காரிகை மேற்கோள் செய்யுள் ஒன்றும், யாப் பருங்கல விருத்தி மேற்கோள் செய்யுள் ஒன்றும் கூறுகின்றன.

"கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைப் போர் வேல் அச்சுதன்"[4]

"பொருகுடை வளாகம் ஒருகுடை நிழற்றி
இரு பிறப்பாளர்க்கு ஈந்து மணம் மகிழ்ந்து
அருள்புரி பெரும்புகழ் அச்சுதக் கோவே"[5]

தொண்டை நாட்டில், களந்தை என்னும் இடத்தில் கூற்றுவன் என்ற பெயரில் ஓர் அரசன் இருந்தான்; பின்னர், கூற்றுவ நாயனார் என்ற பெயரால் அழைக்கப்பட்ட அவ்வரசன் களப்பிரர் குடியில் வந்தவனாவன் என்கின்றார் நம்பியாண்டார் நம்பிகள்.

"ஓதம் தழுவிய ஞாலமெல்லாம் ஒரு கோயில் வைத்தான்
கோதை நெடுவேல் களப்பாளன் ஆகிய கூற்றுவேனே"[6]

பாண்டியப் பட்டயங்களுள் ஒன்றான வேள்விக் குடிச் செப்பேடு, களப்ரன் என்னும் கலியரசன், பல பேரரசர்களை அறவே அழித்து, அவர்கள் நாட்டைத் தனதாக்கிக் கொண்டான் என்று கூறுகிறது.

"அளப்பரிய அதிராசரை அகலநீக்கி
அகலிடத்தைக் களப்ரனெனும் கலியரசன்
கைக் கொண்டான்"[7]

கருநாடர் காவலன் ஒருவன், கடல்போன்ற நாற்படை கொண்டு தென்னாடு போந்து, பொதிய மலைக்குரிய தமிழ் மன்னனை வென்று மதுரையைக் கைக்கொண்டான் என்று பெரிய புராணத்தில், மூர்த்தி நாயனார் புராணம் கூறுவதும், வேள்விக் குடிச் செப்பேட்டுச் செய்தியை உறுதி செய்கிறது.

"கானக்கடி சூழ்வடுகக் கருநாடர் காவலன்
மானப்படை மன்னன் வலிந்து நிலம் கொள்வானாலி
யானைக் குதிரைக் கருவிப் படைவீரர், திண்தேர்
சேனைக் கடலும்கொடு தென்திசை நோக்கி வந்தான்"[8]

"வந்துற்ற பெரும்படை மண்புதையப் பரப்பிச்
சந்தப் பொதியிற்றமிழ் நாடுடை மன்னன் வீரம்
சிந்தச் செருவென்று தன்ஆணை செலுத்து மாற்றாற்
கந்தப் பொழில் சூழ் மதுரைபுரி காவல் கொண்டான்"[9]

இவ்வாறு சோழரையும் பாண்டியரையும் வெற்றி கொண்டு தமிழகத்தை ஆளத் தொடங்கிய களப்பிரர், கி. பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதியில், பல்லவன் சிம்மவிஷ்ணுவினாலும், பாண்டியன் கடுங்கோனாலும் வென்று அழிக்கப்பட்டனர்.[10]

சோணாட்டிலும், பாண்டிய நாட்டிலும், இவ்வாறு ஆற்றல் குன்றிய களப்பிரர், சோணாட்டுச் செந்தலையைச் சுற்றிய பகுதியிலும், பாண்டிநாட்டுப் புதுக் கோட்டையைச் சுற்றிய பகுதியிலும் முத்தரையர் என்ற பெயரோடு வாழ்ந்து வந்தனர்; இயல்பாகவே போர்ப் பண்பு வாய்க்கப் பெற்றிருந்த அவர்கள், வடக்கே தோன்றிய பல்லவர்க்கும், தெற்கே தோன்றிய பாண்டியர்க்கும் இடையில் நடைபெற்ற போர்களில், ஒரு கால் பாண்டியர்க்கும், பிறிதொருகால் பல்லவர்க்கும் என மாறி மாறிப் படைத் துணையாகிப் பயன் பெற்று வந்து, கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், சோழப் பேரரசை நிறுவிய விஜயாலய சோழனால் அறவே அழிக்கப் பெற்றனர்.[11]

களப்பிரர், முதலில் பௌத்தராகவும், பின்னர்ச் சமண ராகவும் வாழ்ந்தமையால், தமிழகத்தில் சைவ, வைணவங் களாகிய வைதீக சமயங்கள் மறைந்து பௌத்த சமண சமயங்கள் வாழ்வு பெற்றன.

களப்பிரரின் தாய் மொழியாகிய பிராகிருதம் செல் வாக்குப் பெற, தமிழ் புறக்கணிக்கப் பெற்றது; ஆயினும், தங்கள் சமயக் கருத்துக்களைத் தமிழ்நாட்டு மக்களிடையே புகுத்த, அம்மக்களின் தாய்மொழியாம் தமிழின் துணை வேண்டி நின்றமையால், தமிழும் ஓரளவு வளர்ச்சி பெற்றது. மதுரையில் திராவிடச் சங்கம் என்ற பெயரால் ஓர் அமைப்பு உருவாயிற்று. பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் பெரும் பாலானவை இக்காலத்தில் தான் தோன்றின; காவியங்கள் தோன்றுவதற்கும் இச்சங்கமே காரணமாயிருந்தது. முத் தரையர் கோவை என்ற நூல் ஒன்று இருந்ததாக யாப்பருங் கல விருத்தி உரையால் உணர்கிறோம்.

## சான்றெண் விளக்கம்

1. அகம் : 83
2. அகம் : 295
3. புறம் : 385
4. யாப்பருங்கலக் காரிகை. மேற்கோள்—83, 86 சூத்திரங்கள்.
5. யாப்பருங்கல விருத்தி மேற்கோள் — விளக்கத்தார் கூத்து.
6. நம்பியாண்டார் நம்பி—திருத்தொண்டர் திருவந்தாதி 47.
7. வேள்விக் குடிச் செப்பேடு.
8. பெரிய புராணம் : மூர்த்தி நாயனார் புராணம்: 11
9. மேலது : 12
10. பாண்டியர் செப்பேடுகள் பத்து—வேள்விக்குடிச் செப்பேடுகள்—வரிகள் 39-36; தளவாய்புரச் செப்பேடுகள் வரிகள்—97-102

    பல்லவர் செப்பேடுகள் முப்பது; காசக்குடி செப்பேடுகள் : சுலோகம் 20

    கூரம் செப்பேடுகள் : சுலோகம் 4.
11. K.A. Nilakanta Sastri Pandyan Kingdam. P—84-85.

# 2. பல்லவர் காலம்

# அ. பல்லவர்கள் தோற்றம்

பல்லவர்கள் யார்? எந்த இனத்தைச் சார்ந்தவர்கள்? எங்கிருந்து வந்தவர்கள் என்ற ஆராய்ச்சி இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலம் தொட்டுப் பல்வேறு வரலாற்றுப் பேராசிரியர்களால் நடைபெற்று வருகிறது என்றாலும், எல்லோரும் ஒரு சேர ஒப்புக் கொள்ளத் தக்க முடிவு இன்று வரை உருவாக வில்லை.

## திரு. வெங்கய்யா

"மேற்கிந்தியாவைச் சேர்ந்த பாரசீக மரபினராகிய பஹ்லவரும் பல்லவரும் ஒருவரே; ருத்ரதாமன் கீழ்ப்பணி புரிந்திருந்த பஹ்லவர், அவன், ஆந்திர அரசன் கௌதமீ புத்ர சதகர்ணியோடு நடத்திய போரின் விளைவாக மேற்குக் கரையிலிருந்து கிழக்குக் கரைக்கு வந்தவராதல் வேண்டும்" என்று திரு. வெங்கய்யா அவர்கள், கல்வெட்டு ஆய்வுகளின் 1906 ஆம் ஆண்டு அறிக்கையில் கூறியுள்ளார்![1]

## திரு. எஸ். ரைஸ்

"மேற்கு இந்தியாவைச் சேர்ந்தவர்களும், கௌதமீ புத்ர சதகர்ணியால் அழிக்கப்பட்டவரும், 'பார்த்தியன்' எனப் பொருள்படும் பிராகிருத சொல்லாகிய பஹ்லவர் என்ற சொல்லால் குறிப்பிடப் படுபவரும் ஆகிய மக்களும், தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்களும், பல்லவர் என்ற சொல்லால் குறிப்பிடப்படுபவரும் ஆகிய மக்களும் ஓர்

இனத்தைச் சேர்ந்தவரே" என்று, 'கல்வெட்டுக்களில் மைசூரும், குடகும்' என்ற நூலில் திரு. எஸ். ரைஸ் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.[2]

## பேராசிரியர் திரு. துப்ராய்

பல்லவர்களைப் பாரசீக மரபினர் எனச் சொல்வதற்கு இல்லை. தென்னிந்தியா மீது பாரசீகப் படையெடுப்பு நிகழ்ந்தது என்பதற்கான சான்று எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. ருத்ரதாமன் காலத்தில் நாகர்களுக்கும், சூட்டு நாகர்களுக்கும் அண்மையில் வாழ்ந்த ஓர் இனத்தவரே பல்லவர். நாகர் மகளை மணந்துக் கொண்டதன் வாயிலாகக் காஞ்சி அரசுரிமை பெற்ற சிவஸ்கந்த நாகனே 'முதற் பல்லவன் என்று பேராசிரியர். திரு, துப்ராய் அவர்கள் தென்இந்தியாவின் பழைய வரலாறு' என்ற நூலில் கூறியுள்ளார்.[3]

## வின்செண்ட் ஸ்மித்

"இந்தியாவின் பழைய வரலாறு" என்ற நூலை எழுதிய வின்செண்ட் ஸ்மித் அவர்கள், 1904ல் வெளிவந்த அந்நூலின் முதற்பதிப்பில், "பல்லவர்களின் குலமூலம் நிலையாக உறுதி செய்யும் வரை, பல்லவர்களும், பஹ்லவர்களும் ஒருவரே எனக் கருதலாம்" என்றவர், 1908ல் வெளிவந்த இரண்டாம் பதிப்பில், "அவர்கள் சென்னை மாநிலத்தின் வடபகுதியாகிய வேங்கி நாட்டைச் சேர்ந்த ஓர் இனத்தவராகலாம்" எனத் தம் முன்னைய கருத்தைச் சிறிதே மாற்றிக் கூறி, மூன்றாம் பதிப்பில், "பல்லவர், பஹ்லவர் என்ற சொற்களுக்கிடையே நிலவும் எழுத்து ஒருமைப்பாடு, வரலாற்றுப் பேராசிரியர்கள் பலரையும், பாரசீக நாட்டவராகிய பஹ்லவரையும், காஞ்சி நாட்டவராகிய பல்லவரையும் ஓர் இனத்தவராகக் கருதுமாறு செய்து விட்டது. ஆனால், தொடர்ந்து மேற்கொண்ட ஆய்வு, அக்

கொள்கையை அரண் செய்ய வில்லை. மாறாக, பல்லவர்கள் தென்னிந்தியப் பழங்குடியினர் என்பதையே உறுதி செய்கின்றன" என முடித்துள்ளார்.[4]

## இராஜ சேகரர்

கூர்ஜர மன்னர் அவைக்களப் புலவராக இருந்து இந்தியப் பெருநாடு முழுதும் சுற்றிப் பார்த்து எழுதிய தம்முடைய நிலநூலில், பல்லவர்களைத் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்களாகவும், பஹ்லவர்களைச் சிந்துநதிக்கு அப்பாற்பட்டவர்களாகவும் காட்டியுள்ளார்.

பஹ்லவர், பல்லவர் என்ற சொற்களுக்கிடையே நிலவும், எழுத்து ஒருமைப்பாடு ஒன்றே கொண்டு, இருவரையும் ஓர் இனத்தவராகக் கருதுவது முறையாகாது ஆதலானும், மேற்கிந்தியாவைச் சேர்ந்த பஹ்லவர், கிழக்கு நோக்கிக் குடி பெயர்ந்ததற்கான சான்று எதுவும் இல்லை, பல்லவர் பட்டயம் எதிலும் அத்தகைய குடி பெயர்ச்சி குறிப்பிடப்படவில்லை ஆதலானும், ருத்ரதாமனின் அமைச்சன் சுவிசாகன் என்பதும், அவன் பஹ்லவர் இனத்தைச் சார்ந்தவன் என்பதும் உண்மையே என்றாலும், அவனோ, அவன் மரபினரோ, தென்னிந்தியப் பல்லவர் களோடு தொடர்புடையவராவர் என்பதை உறுதிச் செய்யும் சான்று எதுவும் இல்லை.

பல்லவர் பட்டயங்களில் கூறப்படும் பல்லவர் முன்னோர் பட்டியலில், அப்பெயர் குறிப்பிடப்படவில்லை ஆதலாலும், பஹலவ குலச் சிற்றரசன் ஒருவன் நாகர் மகளை மணந்து கொண்டான் என்பதற்கான சான்று எதுவும் இல்லை ஆதலாலும், பஹ்லவ குலச் சிற்றரசன் ஒருவன் நாகர் மகளை மணந்து கொண்டான் என்பதற்கான சான்று எதுவும் இல்லை ஆதலாலும், பல்லவர் பட்டயங்க களுள் ஒன்றான வேலூர் பாளையம் பட்டயத்தில் நாகர்

குலத்தோடு கொண்ட மணத்தொடர்பு குறிப்பிடப் பட்டுள்ளது என்றாலும், அதில் கூறப்பட்டிருப்பவன் வீரக்குர்ச்சன் என்பவனே அல்லது சிவஸ்கந்தன் அல்லன் ஆதலாலும், பஹ்லவர் தென்னிந்தியாவில் குடியேறியதாகக் கூறப்படும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில், 'அங்கு, "தொண்டையர்" என்ற இனத்தவர் வாழ்ந்து வந்தனர் என்பதை, யாரும் நினைத்துப் பார்த்தாகத் தெரியவில்லை ஆதலாலும், பல்லவர்களைப் பஹ்லவராகக் கருதுவது தவறான முடிபாகும் எனக் கொள்க. திருவாளர்கள். வின்செண்ட் ஸ்மித், இராஜசேகரர் கொள்கைகளும் இம் முடிவுக்கே அரண் செய்வதும் அறிக.

## திரு. இராசநாயகம்

"இலங்கையின் வடமுனையாகிய யாழ்ப்பாணத்தை அடுத்த மணிபல்லவமே பல்லவர் பிறப்பிடம். மணிமேகலை யில் கூறப்பட்ட கிள்ளி வளவன் மணந்த, வளைவாணன் மகளாகிய பீலிவளை, நாகர் குலத்தவள்; அவள் பிறப்பிடம் இம்மணி பல்லவமே; அவள் பெற்ற மகனே முதற்பல்லவன். தொண்டைக் கொடி சுற்றி விடப்பட்டாமையால், தொண்டைமான் என்றும், கடல் அலைகளால் கரை சேர்க்கப்பட்டாமையால் திரையன் என்றும், அழைக்கப் பட்டான்; அம்மரபினரே, தம் தாயகப் பெயராகிய மணி பல்லவத்தைத் தம் பெயரில் தாங்கிப் பல்லவர் என அழைத்துக் கொண்டனர்" எனத் திரு. இராசநாயகம் அவர்கள் கூறியுள்ளார்.[5]

பல்லவர் பட்டயம் கூறும், பல்லவர் குல மூதாதையர் பெயர்ப் பட்டியலில், சோழர், நாகர் கூறப்படவில்லை ஆதலாலும், "கங்கை நீரில் பிறந்த க்ருதாசி என்ற நீரர மகளுக்கும், பாரத் வாஜ முனிவருக்கும் பிறந்தவர் துரோணர்; துரோணரின் மகன் அசுவத்தாமன்; அசுவத்தாமனுக்கும், மதனி என்ற அர மகளுக்கும்

பிறந்தவன் பல்லவன்'' எனப் பல்லவர் கூறிக்கொள்ளும் பாரத்வாஜ கோத்திரம் தமிழ் மன்னர்கள் அறியாதது ஆதலாலும், பல்லவர் பட்டயங்கள் அனைத்தும் பிராகிருத மொழியிலும், வடமொழியிலும் உள்ளனவே ஒழிய, தமிழில் ஒன்று கூட இல்லை ஆதலாலும், பல்லவர் அரசவையில், வடமொழிப் புலவர்கள் வீற்றிருந்தனரே அல்லது, தமிழ்ப் புலவர் ஒருவர் கூட இடம் பெறவில்லை ஆதலாலும், ''சோழர்களின் கடல் போன்ற பெரும் படையைப் பாழ் செய்யும் வடவைத் தீ எனத் தம்மைக் கூறிக் கொள்வதன் மூலம், பல்லவர்கள், தமிழரசர்களைத் தம் பகைவர்களாகவே கருதினார்கள் எனப் புலப்படுவதாலும், நாகர் மகள் மணத் தொடர்பு, பல்லவர் பட்டயங்களில் கூறப் பட்டிருந்தாலும், அது வட அரசர்களோடு கொண்டதாகக் கூறப்பட்டுள்ளதே அல்லது இலங்கை அரசர்களோடு கொண்டதாகக் கூறப்படவில்லை ஆதலாலும், பல்லவர் என்ற பெயர், சங்க கால இலக்கியம் எதிலும் இடம் பெற வில்லை ஆதலாலும், பல்லவர்களைத் திரையன் மரபின ராகக் கொள்வதும் பொருந்தாது.

வடபெண்ணை, தென் பெண்ணை ஆறுகளுக்கு இடைப் பட்ட தொண்டை மண்டலம், பண்டு, அருவாநாடு, அருவா வடதலைநாடு என்ற பெயர்களால் வழங்கி வந்தது; அந் நாட்டும் பழங்குடியினர் குறும்பர் என அழைக்கப் பெற்றனர்; தொண்டை மண்டலத்தை இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரித்து ஆண்டவர் என மதிக்கப் பெற்றவர்; அவர்கள் தொழில் ஆடு, மாடு மேய்ப்பதாம். அதனால், அவர்கள் ''பாலவர்'' [பால்+அவர் பால் அளிப்பவர் அல்லது பால் கறப்பவர்] என்று அழைக்கப் பெற்றனர். ''பாலவர்'' என்பது காலப் போக்கில் 'பல்லவர்' எனத் திரிந்து வழங்கலாயிற்று; ஆகவே தொண்டை நாட்டுப் பழங்குடியினராம் குறும்பரே பல்லவராவர் எனக் கொள்வர் திருவாளர்களாகிய, எலியட் செவேல் போலும் வரலாற்றுப் பேராசிரியர்கள்.[6]

கடைச் சங்க காலமாம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில், சோழர் அரியணையில் இருந்த, திருமா வளவன் என அழைக்கப்படும் கரிகாற் பெருவளத்தான், இவ்வருவாளர் முதலாம் வடவரசர் பலரை அழித்தான் எனப் பட்டினப்பாலை கூறுகிறது.

“தொல் அருவாளர் தொழில் கேட்ப,
வடவர் வாடக், குடவர் கூம்ப”

“தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேண், பூழி
பன்றி, அருவா, அதன் வடக்கு நன்றாய
சீதம், மலாடு, புனல்நாடு. செந்தமிழ் சேர்
ஏதமில் பன்னிருநாட்டு எண்”

என்ற வெண்பா உணர்த்துமாறு, பன்னிரண்டு உள்நாடு களாகப் பிரிக்கப் பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த, அருவா, அருவா வடதலை ஆகிய அவ்விரு உள்நாடுகளை, அப்போது ஆண்டு கொண்டிருந்த ஆந்திரச் சாதவாகனப் பேரரசே கரிகாலனால் அழிக்கப் பெற்ற அரசாதல் வேண்டும்.

கரிகாலனை அடுத்துக் கிள்ளி வளவன் என்ற சோழர் குலத்தவனுக்கும், நாகநாட்டு வளைவாணன் மகளாகிய பீலிவளைக்கும் பிறந்த தொண்டைமான் இளந்திரையன், காஞ்சிக் கோட்டையில் கோலோச்சியிருத்தல் வேண்டும். அவனுக்குப் பின், சோழர் குலத்தில், நலங்கிள்ளி, நெடுங் கிள்ளி போலும் உடன்பிறந்தார்களுக்கிடையே, அரசுரிமை காரணமான போர், சோழநாட்டு மண்ணில் தலைவிரித் தாடத் தொடங்கி விட்டமையால் சோழர், காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட தொண்டை மண்டலத்தில் கருத்து செலுத்த இயலாத நிலை ஏற்பட்டு விட்டது,

இவ்வாறு ஆந்திரப் பேரரசும் அழிந்து போக, சோழப் பேரரசும் வலுவிழந்து போக, அச் சூழ்நிலையில், ஆந்திரப் பேரரசர்களின் கீழ்க், குறுநிலத் தலைவர்களாகவும் ஆட்சி

அலுவலர்களாகவும் பணிபுரிந்து வந்த ஓர் இனத்தலைவர், தொண்டை மண்டலத்தைக் கைக்கொண்டு, தாமே அரசாளத் தொடங்கியிருத்தல் வேண்டும்; அம்மரபினரே பல்லவராதல் வேண்டும் என்று கொள்வதற்கே, கிடைத்துள்ள வரலாற்றுச் சான்றுகள் துணை நிற்கின்றன.

## சான்றெண் விளக்கம்


1. Archaeological Survey of India ; Annual Reports For 1906-7
2. Mysore and Coorg From Inscriptions-P. 53
3. Ancient History of Deccan.
4. Early History of India. I Edn P-348, II Edn- P 423
5. Indian Antiquary, Vol III PP.75-80
6. Rea's 'Pallava Architecture'- P. 2.

# ஆ. சிம்ம விஷ்ணு

புகழ்பெற்ற பிற்காலப் பல்லவருள் முதல்வன் சிம்ம விஷ்ணு. அவன் மகனான மகேந்திரவர்மன் இயற்றிய 'மத்த விலாசத்தில், "சிம்ம விஷ்ணு, பல்லவ குலம் என்ற உலகைத் தாங்கும் மலை போன்றவன்; பல நாடுகளை வென்றவன்' எனச் சிறப்பிக்கப் பட்டுள்ளான். வேலூர் பாளையம் பட்டயம், "காவிரி பாயும் வளமான சோழநாட்டைக் கைப் பற்றினான்" எனக் கூறுகிறது. காசக்குடிப் பட்டயம், "சிம்ம விஷ்ணு, களப்பிரர், மழவர், சோழர், பாண்டியர்களை வெற்றி கொண்டான்" எனக் கூறுகிறது. "பல்லவர் மரபில் தோன்றிய சிம்மவிஷ்ணு, கற்றவர் கூட்டத்தினின்று இறுதிப் பகையை அறவே நீக்கினான்" என வரும் அவந்தி சுந்தரி கதா சாரத் தொடரில் உள்ள "கற்றவர் கூட்டம்" என்ற சொல்லுக்கு வரலாற்றுப் பேராசிரியர்கள் காஞ்சி என்ற பொருள் கொண்டனர்.

காஞ்சியிலிருந்து பட்டயம் விட்ட பல்லவ அரசர்களுள் இவனே முதல்வன். கும்பகோணத்தை அடுத்த கஞ்சனூரில் கண்டெடுக்கப்பட்ட பட்டயத்தில், சிம்மவிஷ்ணு சதுர்வேதி மங்கலம் என்ற தொடர் காணப்படுகிறது. இவற்றால், காவேரி வரை பரவியிருந்த தமிழ்நாட்டைக் கைப்பற்றி காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட பல்லவப் பேரரசை நிறுவிய பெருமை சிம்ம விஷ்ணுவையே சாரும் என்பது புலனாகிறது.

சிம்ம விஷ்ணு, வைணவன் என்பது, அவன் பெயராலேயே புலப்படுவதோடு, உதயேந்திரப் பட்டயத்தில் வரும் 'பக்தி ஆராதித்த விஷ்ணு, சிம்ம விஷ்ணு' என்ற தொடராலும் புலப்படும்.

அஜந்தாவிலும், கிருஷ்ணை ஆற்றங்கரையிலும், வடநாட்டரசர்கள், கற்பாறைகளைக் குடைந்து கோயில்கள் அமைத்திருப்பதைப் போன்றே, சிம்மவிஷ்ணு, அத்தகைய கோயில்களைத் தமிழ் நாட்டில் உருவாக்கினான். தமிழ் நாட்டில், குகைக் கோயில் கண்ட முதல்வன், சிம்ம விஷ்ணுவே; சிங்க உருவங்கள் அமைந்த சீயமங்கலம் குகைக் கோயிலும், சிம்ம விஷ்ணு, அவன் மனைவியர், அவன் மகன் மகேந்திரன். அவன் மனைவியர்களின் உருவங்கள் செதுக்கப்பட்ட மாமல்லபுரம் ஆதிவராகர் கோயிலும் சிம்ம விஷ்ணுவால் வெட்டப்பட்டன வாதல் வேண்டும்.

சிம்ம விஷ்ணு சிறந்த புரவலன்; கீழைச் சளுக்கிய அரசவையிலும், கங்கநாட்டு அரசவையிலும் சிறந்து விளங்கிய வடமொழிப் புலவராம் பாரவியின் பாடல் ஒன்றை அவர் மனைவி பாடக் கேட்டு, அப்பாடலின் சொல் நயம் பொருள் நயங்களால் ஈர்க்கப்பட்டு, அவரை வரவழைத்துத் தன் அவைக்களப் புலவராக்கி மகிழ்ந்தான் எனத் தண்டி ஆசிரியர் இயற்றிய அவந்தி சுந்தரி கதை கூறுகிறது.

மேலைச் சாளுக்கிய இரண்டாம் புலிகேசியும், கீழைச் சாளுக்கிய விஷ்ணுவர்த்தனனும், கங்கநாட்டுத் துர்வினீதனும், பாண்டியன் மாறவர்மன் அவனி சூளாமணியும் சிம்மவிஷ்ணுவின் சமகால அரசராக விளங்கினர்.

# இ. மகேந்திரவர்மன்

சிம்ம விஷ்ணு வழிவந்த பிற்காலப் பல்லவருள் மிகச் சிறந்து விளங்கியவன் மகேந்திரவர்மன். நூற்றைம்பது ஆண்டுக் காலம் தொடர்ந்து நடைபெற்றப் பல்லவர்—சாளுக்கியர் போர், கொடுமையின் எல்லையைத் தொட்டது இவன் காலத்தில்தான்; சமணம் உயர்நிலை பெற்றதும், பல்லவ வேந்தர், சமணத்தைக் கைவிட்டுச் சைவனாக மாறியதும், அதற்குத் துணை நின்ற நாவரசர் வாழ்ந்ததும் இவன் காலத்தில்தான்; பாறைகளைக் குடைந்து குகைக் கோயில் கட்டும் பணி சிறந்ததும் இவன் காலத்தில்தான். சங்ககால மறைவு முதல், ஐந்து நூற்றாண்டுக் காலம் வரை ஓயாப் போரால் அமைதியிழந்திருந்த தமிழகத்தில் அமைதி நிலவச் செய்தவன் இவனே; சிற்பம், ஓவியம், இசை நடனம் முதலாம் நுண்கலைகளுக்கு உயிர் ஊட்டியவனும் இவனே.

வாதாபியைத் தலைநகராகக் கொண்ட மேலை சாளுக்கிய மரபில் வந்த இரண்டாம் புலிகேசி, காஞ்சி மீது படையெடுத்தான்; அவன் படைப்பெருமை முன் நிற்க மாட்டாத மகேந்திரவர்மன், பகைவன் படைபலம் குறைய வும், தன் படை பலம் பெருகவும் வாய்ப்புடைய காலம் வரும் வரை காத்திருப்பதே சிறந்த போர் முறையாம் என அறிந்து, தன் படையுடன் காஞ்சிக்கோட்டையுள் புகுந்து சிலகாலம் அடங்கி இருந்து, பின்னர் புள்ளலூர் எனும் இடத்தில், சாளுக்கியர் படையைத் திடுமெனத் தாக்கி

அழித்துத் துரத்தினான். "புலிகேசியின் படை எழுப்பிய தூளி, பல்லவவேந்தனின் ஒளியை மங்கச் செய்தது; கடல் போல் பரந்த சாளுக்கிய படைமுன் நிற்க மாட்டாது, பல்லவன் காஞ்சிக்கோட்டையுள் அடங்கிக் கொண்டான்; சாளுக்கியன் படையைச் சேர்ந்த யானைகளின் மதநீர் பாய்ந்து காவிரி நீர் கலங்கிவிட்டது. பல்லவப் பனி போக்கும் கதிரவனாய் சாளுக்கியன் உலா வருவது கண்டு சேர, சோழ, பாண்டியர் களிப்புற்றனர்" எனச் சாளுக்கியப் பட்டயங்களும், "மகேந்திரன், தன் பகைவரைப் புள்ள லூரில் அழித்தான்" என இரண்டாம் நந்திவர்ம பல்லவன் வெளியிட்ட காசக்குடி பட்டயமும் கூறுவதால், இப்போரின் போக்கை ஒருவாறு உணரலாம்.

பல்லவர் பேரரசிற்கு வடமேற்கில் மேலைச் சாளுக்கி யரும், வடக்கில், சோழர் வழிவந்த, ஆந்திர நாட்டில் குடியேறிய, ரேநாண்டுச் சோழர் எனப்படும் தெலுங்குச் சோழரும், வடகிழக்கில் கீழைச் சாளுக்கியரும், மேற்கில், கதம்பர், கங்கர்களும், தெற்கில் சோழர், களப்பிரர்களும், பாண்டியர்களும் ஆட்சிபுரிந்து வந்தனர்.

சமணனாக அரியணை ஏறிய மகேந்திரவர்மன், அப்ப ரால் சைவனாக மாறினான். அவ்வரலாற்றைப் பெரிய புராணம் பரக்கக் கூறுகிறது. அது, "லிங்கத்தை வழிபடும் குணவரன் எனும் பெயர் கொண்ட அரசன், இந்த லிங்கத் தினால், புறச்சமயத்திலிருந்து திரும்பிய ஞானம், உலகத்தில் நின்று நிலை பெறுமாக" எனவரும் திருச்சி மலைக் கோயில் கல்வெட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சங்க காலத்தின் இறுதியில் களப்பிரர் வரலால், தமிழகத்துள் இடம் பெற்று சிறந்து விளங்கிய சமணம் அழிவுப் பாதை நோக்கி அடியிட்டது இவன் காலத்தில்தான். சைவனாக மாறிய மகேந்திரவர்மன், திருப்பாதிரிப் புலியூரில் இருந்த சமணப் பள்ளியை இடித்துக் கொணர்ந்த கற்களைக் கொண்டு, திருவதிகையில் சிவன் கோயில் கட்டு

மளவு சைவ சமயத்தில் ஆழ்ந்து போய் விட்டான். என்றாலும், அவன் வெட்டிய குகைக் கோயில்களில், சில சமணக் கோவில்களாகவும், சில சிவன் கோயில்களாகவும், சில பெருமாள் கோவில்களாகவும் காணப்படுவது, அவன் காலத்திய சமய நிலையை ஒருவாறு உணரத் துணை புரிவதாகும்.

கடைச் சங்க காலத்தில், கோவில்கள் பல இடம் பெற்றிருந்தன என்றாலும், அவையெல்லாம், சுண்ணாம்பும் செங்கல்லும் கொண்டு கட்டப் பெற்றனவே ஒழிய, பாறைகளையும், மலைகளையும் குடைந்து அமைத்த கோவில்கள் தமிழகத்தில் மகேந்திரவர்மன் காலத்தில்தான் முதன் முதலில் இடம் பெற்றன. கிருஷ்ணை ஆற்றங்கரையில் ஆட்சி புரிந்திருந்த விஷ்ணுகுண்டர் என்ற மரபினர் ஆங்கு அமைத்த குகைக் கோவில்களைப் பார்க்கும் வாய்ப்பினைப் பெற்ற மகேந்திரவர்மன், அத்தகைய கோவில்களைத் தமிழகத்தில் பல இடங்களிலும் அமைத்தான்.

சென்னைக்கு அடுத்த பல்லாவரம், செங்கற்பட்டு பகுதியில், திருக்கழுக்குன்றம் சாலையில் உள்ள வல்லம், காஞ்சிக்கு அருகில் உள்ள மாமண்டூர், வந்தவாசிக்கு அருகில் உள்ள சீயமங்கலம், சோளிங்கர் என வழங்கும் சோழசிங்க புரத்திற்கு அணித்தான மகேந்திர வாடி, தளவானூர், புதுவைக்கு அடுத்த மண்டகப்பட்டு, திருச்சி மலைக்கோயில், நாமக்கல் மலைக் கோயில் ஆகிய இடங்களிலும், மாமல்லபுரத்திலும், மகேந்திரவர்மன் வெட்டிய குகைக் கோயில்களைக் காணலாம். மண்டகப்பட்டுக் குகைக் கோயிலில்தான் "கல், மரம், உலோகம், சுண்ணாம்பு இல்லாமல் பல்லவன் கோவில் அமைத்தான்" என்ற தொடர் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது.

மகேந்திரவர்மன் அமைத்த குகைக் கோயில்களின் சிறப்பு இயல்புகள் சில வருமாறு :-

1. உள்ளறையில் லிங்கம் இருக்கும்; லிங்கங்கள் உருண்டை வடிவினவாகும். சில குகைகளில், திருமாலும் சமண முனிவரும் இருப்பர்.
2. வணக்கம் தெரிவிக்கும் கையினராகவோ, தடிமீது வைத்த கையினராகவோ வாயிற்காவலர் காட்சி அளிப்பர்.
3. தூண்கள் எல்லாம் சதுரத் தூண்கள்: மேலும் கீழும் நான்கு பட்டைகளாகவும், இடையில் எட்டு பட்டைகளாகவும், சதுரப் பகுதியில் தாமரை பொறிக்கப் பெற்றும் நிற்கும்:
4. தூண்களில் கல்வெட்டுக்களும், அரசன் பட்டப் பெயர்களும் காணப்படும்.
5. கோயிற் சுவர்களில், புராணக் கதைகளைக் குறிக்கும் நிகழ்ச்சிகள் சிலைகளாக வடிக்கப் பட்டிருக்கும்.

மகேந்திரவர்மன் சிறந்த இலக்கியப் புலவனாவன் வடமொழியில் அவன் இயற்றிய மத்த விலாசப் பிரகசனம் என்ற நூலே அதற்குச் சிறந்த எடுத்துக் காட்டு. அது காபாலிகன் ஒருவன் செயலைக் கூறுவதாக, அக்காலத்தே நிலவிய காபாலிக சமயம், பாசுபத சமயம், பௌத்த சமயம் போலும்சமயங்களின் தமிழகத்து நிலையையுணர்த்துகிறது.

மகேந்திரவர்மன், இசை, நடனம், நாடகம், சிற்பம், ஓவியம் போலும் கவின் கலைகளிலும் சிறந்தவன்; அவற்றைப் பாராட்டி வளர்த்தவன். இது சித்தன்னவாசல் குகைக் கோயிலில் உள்ள ஆரைச் சுவர்கள் மீது வரையப் பெற்ற வண்ணக் கோலங்களாலும். "இக் கல்வெட்டு, இசை மாணவர் நன்மைக்காக இசை மாணவனாகிய அரசனால் வெட்டப்பட்டது" எனக் கூறும், குடுமியா மலைக் கல்வெட்டாலும், ஸ்வரம், வண்ணம் போலும் இசை நுணுக்கம் பற்றிக் குறிப்பிடும் மாமண்டூர் குகைக்கல் வெட்டாலும் நன்கு புலப்படும்.

# ஈ. பல்லவர்-சாளுக்கியர் போர்

மேலைச் சாளுக்கிய அரியணையில் கி.பி. 610ல் அமர்ந்த இரண்டாம் புலிகேசி, பல்லவ நாட்டின் வட எல்லைக் கண் விளங்கிய கங்க, கதம்ப, கீழைச் சாளுக்கிய நாடுகளை வென்று தனதாக்கிக் கொண்ட பின்னர்ப், பல்லவ நாட்டின் மீது போர் தொடுத்தான். இப்போர் பற்றிக் கூறும் சாளுக்கியர் கல்வெட்டு "புலிகேசியின் படைகள் எழுப்பிய தூளி, பல்லவ வேந்தனின் ஒளியை மங்கச் செய்தது; புலிகேசியின் படைப் பெருமை கண்டு காஞ்சி அரசன் காஞ்சிக் கோட்டைக்குள் ஒளிந்து கொண்டான். சாளுக்கியன் நாற்படையுள் இருந்த யானைகளின் மதநீர் பாய்ந்து, காவிரி கலங்கி விட்டது; புலிகேசிப் பல்லவப்பனி போக்கும் கதிரவனாய்க் காட்சி தந்து, சேர சோழ, பாண்டியனைக் களிப்புறச் செய்தான்" என்கிறது. ஆனால், பல்லவர்க்குரிய காசக்குடிப் பட்டயம், "மகேந்திரன் தன் பகைவரைப் புள்ளலூரில் அழித்தான்" எனக் கூறுகிறது.

இவ்விரு கூற்றுக்களையும் ஒருங்கு வைத்து நோக்கிய வழி, பெரும் படையோடு வரும் புலிகேசியை, எதிர் சென்று போரிட்டுத் துரத்த எண்ணுவது போர்த் தந்திரமாகாது, அவனைத் தமிழகத்துள் நுழையவிட்டு, அவன் ஆங்குப் பல இடங்களுக்கும் சென்று பல காலம் தங்க, அவன் படைவலம் குறையப் பண்ணி, இறுதியில் அழிப்பதே போர் நுணுக்கமாம் என அறிந்த மகேந்திரவர்மன், புலிகேசி, பல்லவ நாட்டுள் புகுந்ததும், தன் படையோடு காஞ்சிக் கோட்டைக்குள்

அடங்கி இருந்தான்; எதிர்ப்பார் இல்லாமையால் புலிகேசியும், காவிரியாறு வரையும் சென்று திரும்பினான்; தங்கள் பகைவனாம் மகேந்திரவர்மன் அறவே அழியவில்லை எனினும், புலிகேசியைக் கண்டு ஓடி ஒளிந்து கொண்டதே அவனுக்குத் தோல்வியாம் என்ற உணர்வால், சேர, சோழ, பாண்டியர் மகிழ்ந்தனர்; இறுதியில், புலிகேசி தன் சாளுக்கிய நாடு நோக்கித் திரும்பியதும், மகேந்திரவர்மன் காஞ்சிக் கோட்டையினின்றும் வெளிப்பட்டு, காஞ்சிக்கு வடக்கே இப்போது பள்ளூர் என வழங்கும் புள்ளலூரில் புலிகேசியை வளைத்துப் போரிட்டு வென்று துரத்தினான்' என்ற வரலாற்று நிகழ்ச்சி புலப்படுகிறது.

மகேந்திரவர்மனால், புள்ளலூரில் தோல்வி கண்ட புலிகேசி அப்பழியைத் துடைத்துக் கொள்வதற்கான காலத்தை எதிர்நோக்கி இருந்தான். மகேந்திரன் மறைய, அவன் மகன் நரசிம்மவர்மன் பல்லவ அரியணையில் அமர்ந்தான்: பல்லவ நாட்டை அழிப்பதற்கு அதுவே ஏற்புடைய காலம் என எண்ணிய புலிகேசி, முன்னினும் பெரிய படையோடு பல்லவ நாட்டில் புகுந்து விட்டான். தன் நாட்டுள் புகுந்த புலிகேசி, காஞ்சி வரை வருக எனக் காத்திருந்தான் நரசிம்மவர்மன்; சாளுக்கியர் படை காஞ்சிக் கோட்டையை அணுகி விட்டது என்பதை அறிந்த உடனே நரசிம்மவர்மன், பல்லவர் குலத்து வந்த ஒரு சிற்றரசனும், மானவர்மன் என்னும் இலங்கை அரசனும் துணைவரச் சென்று சாளுக்கியர் படையைத் தாக்கினான்: பரியலம், மணிமங்கலம், சூரமாரம் ஆகிய இடங்களில் கடும்போர் நடைபெற்றது; ஒவ்வொரு களத்திலும் தோல்வியே கண்ட புலிகேசி, தன் நாடு நோக்கி ஓடத் தலைப்பட்டான்.

பல்லவ நாட்டு எல்லைவரை அவனை விடாது பின் தொடர்ந்து வந்த நரசிம்மவர்மன், சாளுக்கியர் படையை மேலும் துரத்தி அடிக்கும் பணியைத் தன் படைத் தலைவரும், பிற்காலத்தே சிறுத்தொண்டர் என அழைக்கப்

பட்டவருமாகிய பரஞ்சோதியார்பால் ஒப்படைந்தான்; படைத்தலைமை ஏற்ற பரஞ்சோதியார், சாளுக்கியர் படையை அவர் தலைநகரம் வாதாபி வரையும் துரத்திச் சென்று, வென்று, வாதாபியைக் கைக்கொண்டு, ஆங்கு, நரசிம்மவர்மன் புகழ்பாடும் பாக்கள் பொறிக்கப் பெற்ற வெற்றித்தூண் நாட்டிக் காஞ்சி வந்து சேர்ந்தார்.

இப்போர் பற்றிய நிகழ்ச்சிகளை, "பரியலம், மணி மங்கலம், சூரமாரம் முதலிய இடத்துப் போர்களில் புலிகேசி தோற்று ஓடியபொழுது, வெற்றி என்னும் மொழியை அவன் முதுகாகிய பட்டயத்தின் மீது எழுதிய நரசிம்மவர்மன்" எனக் கூரம் பட்டயமும், "நரசிம்மவர்மன் வாதாபியை அடக்கிய அகத்தியனைப் போன்றவன்; வல்லப அரசனை வென்றவன்; வாதாபியை அழித்தவன்" என உதய சந்திர மங்கலம் பட்டயமும், "நரசிம்மவர்மன், பகைவரை அழித்து, வாதாபியில் வெற்றித்தூண் நாட்டினான்" என வேலூர்ப் பாளையம் பட்டயமும், "புலிகேசி பகைவர் மூவரால் தோல்வியுற்றான்; வாதாபி கோவில்கள் வருவாய் இழந்து தவித்தன" என, புலிகேசியின் மகனான விக்கிரமாதித்தனின் பட்டயமும், தெளிவாக உணர்த்துகின்றன; இவற்றுள் முன்னைய மூன்றும் பல்லவப் பட்டயங்கள்; நான்காவது, சாளுக்கியப் பட்டயம்.

"மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாபித்
தொன்னகரம் துகளாகத் துளை நெடுங்கை
வரையுகைத்தும்
பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும்
பரித்தொகையும்
இன்னன எண்ணிலகவர்ந்தே இகலரசன் முன்
கொணர்ந்தார்"

என்ற பெரியபுராணச்செய்யுள், வாதாபி கொண்டதில் பரஞ்சோதியார் பங்கைத்தெளிவுற உணர்த்தி நிற்கிறது.

புலிகேசிக்குப் பிறகு சாளுக்கிய அரியணையில் அமர்ந்த அவன் மகன் விக்கிரமாதித்தன், பல்லவர் கையில் தன் தந்தை அடைந்த இழிவையும், தன் தலைநகர் அடைந்த அழிவையும் போக்குவது தன் கடன் எனக் கருதினான்; பல்லவ நாட்டின் மீது படையெடுத்தான்; அப்போது பல்லவநாட்டு ஆட்சிப்பொறுப்பு, பரமேசுவரவர்மன் கையில் இருந்தது; இப்போர் குறித்துச் சாளுக்கியர் பட்டயங்கள் கூறும் செய்தியும், பல்லவர் பட்டயம் கூறும் செய்தியும் முரண்பாடாகவே உள்ளன.

"ஸ்ரீவல்லபனாகிய விக்கிரமாதித்தன், நரசிம்மவர்மனது பெருமையை அழித்தான்; மகேந்திரன் செல்வாக்கை அழித்தான்; ஈசுவரபோத்தரசனை வென்றான்; இவன் மகாமல்லன் மரபை அழித்தமையால் "இராசமல்லன்" எனும் விருதுப்பெயர் கொண்டான்; தென்நாட்டின் ஒட்டியாணமாக விளங்கும் காஞ்சியைக் கைப்பற்றினான் என்றும் "பல்லவர்கோவைத் தோற்கடித்த பிறகு விக்கிரமாதித்தன் காஞ்சியை அடைந்தான்" என்றும், "தமிழரசர் அனைவரும் கூடி விக்கிரமாதித்தனை எதிர்த்தனர்" என்றும் சாளுக்கியர் பட்டயங்கள் கூறுகின்றன.

"பரமேசுவரவர்மன் பிறர் உதவி இன்றி, பல இலக்கம் வீரரைக்கொண்ட விக்கிரமாதித்தனைக், கந்தையைச் சுற்றிக்கொண்டு ஓடும்படிச் செய்தான்" என்றும் "பரமேசுவரவர்மன், பெருவளநல்லூரில் நடந்த பெரும் போரில் வல்லபன் படையை முறியடித்தான்" என்றும், "பரமேசுவரவர்மன் சாளுக்கிய அரசனது பகைமையாகிய இருளை அழிக்கும் பகைவனாக இருந்தான்" என்றும் பல்லவர் பட்டயங்கள் பாடுகின்றன.

இவ்விருவேறு சான்றுகளையும் கண்ட வரலாற்று ஆசிரியர்கள், விக்கிரமாதித்தன் காஞ்சியைத் தாக்கி அதைக் கைப்பற்றிக்கொண்டு, காவிரி வரை சென்று உறையூரில் தங்கினான்; அவ்வாறு தங்கி இருந்தவன் வாளா இராது,

காவிரிக்கு வடக்கே உள்ள பாண்டியநாட்டின் மீது போர் தொடுத்தான். அப்போது பாண்டி நாட்டு அரசனாக விளங்கிய நெடுமாறன், சாளுக்கியர் படையெடுப்பு பொறாது விக்கிரமாதித்தனை எதிர்த்தான்: நெல்வேலியில் நடந்த போரில் சாளுக்கியனிடம் தோற்றான்: இதற்கிடையில், காஞ்சியில் சாளுக்கியனிடம் தோற்ற பரமேசுவர பல்லவன், தன் படைவலியைப் பெருக்கிக்கொண்டு வந்து, உறையூர்க்கு அருகில் உள்ள பெருவள நல்லூரில், விக்கிரமாதித்தனை எதிர்த்துப் போரிட்டு வென்றான். பாண்டியர் படையால் முன்பே வலிவிழந்து போன சாளுக்கியன் பல்லவர் தாக்குதலைத் தாங்கமாட்டாது தாயகம் நோக்கி விரைந்தனன் என்ற இப்போர் முடிவிற்காக வந்துள்ளனர்.

தன் தந்தையும், தானும் பல்லவர் கையில் தோல்வியுற்றதை எண்ணி எண்ணி மனம் புழுங்கிய சாளுக்கிய விக்கிரமாதித்தன், இறக்கும் தருவாயில், தன் மகன் விநயாதித்தனை அழைத்துப் பல்லவரால், சாளுக்கியர் குடிக்கு நேர்ந்திருக்கும் இழிவைத் துடைக்குமாறு பணித்தான். "விநயாதித்தன் தன் தந்தை கட்டளைப்படி, திரையராச பல்லவனது முழுப்படையையும் கைப்பற்றினான்"⁹ எனச் சாளுக்கியப்பட்டயம் ஒன்று கூறுகிறது.

சாளுக்கிய அரியணையில், விநயாதித்தன் வீற்றிருந்த போது, பல்லவஅரியணையில், இராசசிம்மன் வீற்றிருந்தான். இராசசிம்மன் கல்வெட்டுக்கள், அவன் வீரம், போர்த்திறம் முதலாயினபற்றி விரிவாகக் கூறுகின்றன என்றாலும், அவன் யாருடன் போரிட்டான்; எங்கு நடந்தது அப்போர் என்பன போலும் விளக்கங்களை அளிப்பன அல்ல. ஆகவே, விநயாதித்தன், இராசசிம்மன் காலத்தில் நடந்த சாளுக்கியர் பல்லவர் போர் பற்றிய விளக்கங்களை அறிவதற்கு வாய்ப்பு இல்லை.

பல்லவர் அரியணையில் இரண்டாம் நந்திவர்மனும் சாளுக்கியர் அரியணையில் இரண்டாம் விக்கிரமாதித்தனும்

அமர்ந்ததும், பல்லவர் சாளுக்கியர் போர் மீண்டும் தலை தூக்கலாயிற்று. தெற்கே புதிய பொலிவோடு புத்துயிர் பெற்ற பாண்டியர்களோடு நந்திவர்மன் போரிட்டுக் கொண்டிருக்கும் போது, சாளுக்கிய விக்கிரமாதித்தன் பல்லவ நாட்டுள் புகுந்து காஞ்சியைக் கைப்பற்றிக் கொண்டு ஆங்குள்ள மக்கள் மகிழத்தக்க வகையில் நல்லபல அறப்பணி களை ஆற்றிக்கொண்டிருந்தான். தெற்கே பாண்டியரோடு போரிட்டுக் கொண்டிருந்த நந்திவர்மன், அப்போர்த் தலைமையைத் தன் படைத்தலைவன் உதயசந்திரன் பால் ஒப்படைத்து, வடக்கு நோக்கி வந்து தலைநகர் காஞ்சியில் தங்கியிருக்கும் விக்கிரமாதித்தனை வென்று துரத்தினான் அஃது அறிந்து, விக்கிரமாதித்தன் மகன் கீர்த்திவர்மன் பெரும்படையோடு வந்து, நந்திவர்மனை வளைத்துக் கொண்டான்; அந்நிலையில், பாண்டியரை வெற்றி கொண்ட பல்லவர் படைத்தளபதி உதய சந்திரன், தன் அரசனுக்கு நேர்ந்த தோல்வி அறிந்து, விரைந்து காஞ்சி அடைந்து, சாளுக்கியர் படையைப்பல்லவ நாட்டு எல்லைக்கு அப்பாலும் விரட்டி வெற்றி கொண்டான்.

சாளுக்கிய கீர்த்திவர்மன், பல்லவர், படைத்தலை வரால் சாளுக்கியர் படைக்கு நேர்ந்த தோல்வியாலான இழிவைத்துடைக்கத் துணிந்தான்; உடனே பெரும் படையுடன் மீண்டும் பல்லவ நாட்டின் மீது பாய்ந்தான்; இம்முறை, கங்கரும், பாண்டியரும் பல்லவநந்திவர்மனுக்குத் துணை நின்றனர். வெம்பை என்ற இடத்தில் போர் நடை பெற்றது. போரில் கீர்த்திவர்மன் இறந்தான்.

இவ்வாறு, மகேந்திரவர்மன் காலத்தில், கி. பி. 610 அளவில் தொடங்கிய பல்லவ சாளுக்கிய போர், இரண்டாம் நந்திவர்மன் காலத்தில், கி. பி. 787 அளவில், ஏறத்தாழ 100 ஆண்டுகள் நடைபெற்று, கீர்த்திவர்மன் மறைவோடு முடிவுற்றது.

# உ. பல்லவர் அரசியல்

பல்லவர்கள் வடநாட்டிலிருந்து வந்தவர்களாதலின், அவ்வட நாட்டு அரசர்கள் பின்பற்றிய, கௌடல்யரின் அர்த்த சாஸ்திரமும், காமந்தகரின் நீதி சாஸ்தரமும், சுக்ர நீதியும் காட்டும் அரசியல் நெறிகளே, பல்லவர் காலத்தமிழகத்திலும் இடம் பெற்றிருந்தன.

வடநாட்டு வழக்கை யொட்டித் தங்கள் நாட்டைப் பல இராட்டிரங்களாகவும், இராட்டிரங்களைப் பல விஷயங் களாகவும் பகுத்துக் கொண்ட பல்லவர், தமிழகத்துள் தாம் புகுவதன் முன்னர் நிலை பெற்றிருந்த, கோட்டம், நாடு, ஊர் எனும் பிரிவுகளையும் போற்றி வந்தனர். பல்லவர் வருகைக்கு முன் இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்த தொண்டை நாடு, பல்லவர் காலத்திலும் அவ்வாறே பிரிப்புண்டுக் கிடந்தது.

தந்தைக்குப் பிறகு மூத்த மகன் என்பதே பல்லவர் அரசமுறை. அரசுக்கு ஏற்ற மகன் இல்லாத காலத்தில், அரசனுடைய உடன் பிறந்தான் மகன் அரசுரிமை பெறுவன். அரசன் மகப்பேறு இல்லாமல் இறந்து போகும் போது, அரசியல் பொறுப்பு வாய்ந்த அமைச்சர் முதலியோர், அரச மரபில் வல்லவன் ஒருவனைத் தேர்ந்து முடிசூட்டுவர். இரண்டாம் பரமேசுவர வர்மனுக்குச் சித்திரமேயன் என்ற மகன் இருப்பவும், அவன் நனி இளையன், சூழ்ந்து நிற்கும் பகை ஒழித்துப் பல்லவ நாட்டைக் காக்கும் வலுவற்றவன் என்பதால் அவனை அரியணையில் அமர்த்தாது, பல்லவ

மரபில் வேறு ஒரு கிளையைச் சேர்ந்த இரண்யவர்மனை வேண்டி, அவன் மகன் இரண்டாம் நந்திவர்மனை அரியணையில் அமர்த்தியது காண்க.

அரசியல் துறையில், தமக்கு அறிவுரை வழங்கவல்ல அமைச்சர்களைப் பல்லவ வேந்தர்களும் பெற்றிருந்தார்கள். கல்வெட்டுக்களில் அவர்கள் ஆமாத்யர் என அழைக்கப் பெற்றனர். மகேந்திரவர்மன், அப்பரை அழைத்துவரத் தன் அமைச்சரையே அனுப்பினான் என பெரிய புராணம் கூறுகிறது. அமைச்சர்களைக் குறிக்கும் சொற்றொடர் களாக, 'பிரம்மஸ்ரீ ராஜன்', "நம்பன் இறையூர் உடையான்", "தமிழ்ப் பேரரையன்" என்பன போல்வனவற்றைப் பட்டயங்களும், கல்வெட்டுக்களும் அறிவிக்கின்றன.

அமைச்சர்களே அல்லாமல், அவர்களுக்குத் துணையாக "உள்படு கருமத் தலைவர்" எனப்படும் நேர்முகத் தனிச் செயலாளர், "வாயில் கேட்பார்" எனப்படும் செயலாளர், "கீழ் வாயில் கேட்பார்" எனப்படும் துணைச் செயலாளர் உள்ளிட்ட குழுவும் பல்லவர் அரசியலில் இடம் பெற்று இருந்தது.

வலியரான் நலிவெய்தி முறை வேண்டி நிற்பார்க்கு, அது வழங்கும் அறங்கூர் அவைகள் பல்லவக் காலத்தில் சிறந்து விளங்கின. சிற்றூர்களில் அமைந்திருக்கும் அறங்கூர் அவைகள் "கரணங்கள்" எனவும், ஆங்குத் தலைமை தாங்கி முறை வழங்குவார். "அதிகாரிகள்" எனவும், பேரூர் அவைகள் "அதிகரணங்கள்" எனவும், ஆங்குத் தலைமை தாங்குவார், "அதிகரணப் போசகர்கள்" எனவும், இவை களுக்கெல்லாம் மேலாக, அரசனே அமர்ந்து முறை வழங்கும் அவை "தருமாசனம்" எனவும் வழங்கப் பெற்றன என்பது கல்வெட்டுக்களால் புலனாகிறது.

ஆட்சி, ஆவணம், அயலார் காட்சி என்ற இம் மூன்று சான்றுகளையும் துணை கொண்டு முறை வழங்கினர். ஆட்சியாவது, நீண்ட காலமாகப் பின் பற்றி வரும் வழக்கம்;

ஆவணமாவது, ஓலை, சுவடி போலும் எழுத்துச் சான்றுகள்; அயலார் காட்சியாவது, நேரில் கண்டார் கூற்று. ஆட்கொள்ள வந்த பெருமான், சுந்தரர் மீது வழக்கு தொடுத்த திருவெண்ணெய் நல்லூர் அறங்கூர் அவை பற்றிப் பெரிய புராணம் கூறும் விளக்கம், பல்லவர்கால அறங்கூரவை நிலையைப் படம் பிடித்துக் காட்டுவதாக உளது.

முறை வழங்கும் அறங்கூரவைகளேயல்லாமல் பல்லவ நாட்டின் பேரூர்கள், சிற்றூர்கள் தோறும், ஆட்சி நிறுவின அவைகளும் இடம் பெற்றிருந்தன. அவ்வவைகளில் உறுப்பினராக இருந்து பணி புரிவார், "ஊரார்" என்றும் "நாட்டார்" என்றும் "ஆள்வார்" என்றும், "பெருமக்கள்" என்றும் அழைக்கப்பட்டனர். அவை உறுப்பினர்கள் கூடி எடுக்கும் முடிவைச்செயல்படுத்துவார், "ஆளும் கணத்தார்" என அழைக்கப் பெற்றனர். கோயில் காரியங்களைக் கண்காணிப்பார் "அமிர்த கணத்தார்" எனப்பட்டனர். ஊரவை உறுப்பினர்கள், தாம் ஆற்ற வேண்டிய பணி நிலைகளுக்கு ஏற்ப, பல குழுக்களாகப் பிரிந்திருந்தனர். அக்குழுக்கள் வாரியம் என வழங்கப்பட்டது; ஏரி வாரியம், தோட்ட வாரியம் என்ற தொடர்களைக் காண்க.

பல்லவர் காலத்தில், அரசுப் பண்டாரங்களை நிறைவிக்கும் வருவாயில், வரி பெரும்பங்கு வகித்தது; விளை பொருள், செய் பொருள், செய்தொழில் இவற்றின்மீது விதிக்கப்பட்ட வரிகளின் வகைகளைக் கல்வெட்டுக்கள் மூலம் அறியலாம். தென்னை, பனை வளர்க்கவும், அவற்றில் சாறு இறக்கவும், சாற்றிலிருந்து பாகு பிடிக்கவும் வரி விதிக்கப்பட்டது: செங்கொடி, கருசராங்கண்ணி முதலாம் செடிகளைக் கொண்டு மருந்து செய்வார் முறையே "செங்கொடிக் காணம்", "கண்ணிட்டுக் காணம்" என்ற வரிகளைச் செலுத்தியுள்ளனர். கருங்குவளை, செங்குவளை முதலாம் மலர்களை விற்க, "குவளைக் காணம்" என்ற வரி கட்டியாக வேண்டும்.

உண்பொருள் விற்போர், உடை நெய்வோர், விற்போர் குயவர், கொல்லர், வலைஞர், வண்ணார் முதலிய தொழிலாளர் பலர்க்கும் வரி விதிக்கப்பட்டது.

பல்லவர் ஆட்சிக் காலத்தில், நாட்டின் நிலம் எல்லாம் நன்கு அளக்கப் பெற்று நான்கு எல்லைகளும் தெரிய கல்லும், கள்ளிச் செடியும் நடப்பட்டன; மறையவர்க்காக விடப்பட்ட நிலம், "பிரம்மதேயம்" கோவில்களுக்கு விடப்பட்ட நிலம் "தேவ தானம்"; பள்ளிகளுக்கு விடப்பட்ட நிலம் "பள்ளிச் சந்தம்" ஏரிகளைப் பழுது பார்க்க விடப்பட்ட நிலம் "ஏரிப்பட்டி" வருவாயில் பாதி, நில உடைமையாளர்க்கும், பாதி நிலத்தை உழுவார்க்கும் உரிமை என வரையறுக்கப்பட்ட நிலம் "பயல் நிலம்" அரசர்க்குரிய வரி செலுத்துவதற்காக விடப்பட்ட நிலம் "அடைநிலம்" இவ்வாறு நிலங்கள் வகைப்படுத்தப் பட்டன.

காடு கொன்று நாடாக்குவார், குளம் தொட்டு வளம் பெருக்குதல் வேண்டும் என்ற அரசியல் உண்மையைக் காடு வெட்டிகளாகிய பல்லவர் உணராதிரார். அதனால், பாசன வசதி தரும் பெரிய பெரிய ஏரிகளை நாடெங்கிலும் அமைத்திருந்தார்கள். "திரளய தாடகம்" எனும் தென்னேரி, "சித்திரமேக தாடகம்" எனும் மாமண்டூர் ஏரி "பரமேசுவர தாடகம்" எனும் கூரம் ஏரி" "வைரமேக தாடகம்" எனும் உத்திரமேரூர் ஏரி, காவேரிப்பாக்கம் ஏரி, மருதாடு ஏரி என்பன அவற்றுள் சிறப்புடையன. ஏரிகளை அமைத்ததோடு நில்லாமல், அவ்வேரிகளுக்கு ஆற்று நீரைக் கொண்டு சென்று நிரப்பும் கால்வாய்களையும் வெட்டி வைத்தனர். வைரமேகன் வாய்க்கால் காவிரியில் வெட்டப்பட்டது. பெரும்பிடுகு வாய்க்கால், மகேந்திரவாடி வாய்க்கால், கோவிந்தவாடி வாய்க்கால் முதலியன பாலாற்றில் வெட்டப்பட்ட வாய்க்கால்களாகும்.

பல்லவர் காலத்தில் பரப்பளவு, நீட்டல் அளவை, நிறுத்தல் அளவை, முகத்தல் அளவை முதலாம் பல்வேறு

அளவைகளும் சிறந்து விளங்கின; ஒரு கலப்பை கொண்டு குறிப்பிட்ட ஒரு நேரத்தில் ஒருவன் உழுது முடிக்கும் நிலத்தின் அளவு "கலப்பை" எனப்பட்டது; ஒருவன் குறிப்பிட்ட ஓர் இடத்திலிருந்து புறப்பட்டு குறிப்பிட்ட நேரத்தில் சுற்றி வந்து புறப்பட்ட இடத்தை அடைய அவனால் வளைக்கப் பட்ட நில அளவு, "நிவர்த்தனம்" எனப்பட்டது; ஓர் ஆட்டை குறிப்பிட்ட ஓர் இடத்தில் குறிப்பிட்ட நீளம் உள்ள கயிற்றில் கட்ட அவ்வாடு சுற்றி வரும் நிலப்பகுதி "பட்டிகா" அல்லது "பட்டி" எனப்படும்.

நாலு சாண்கோல், பன்னிரு சாண்கோல், பதினாறு சாண்கோல் என நீட்டல் அளவை பலவகைப்பட்டன. கழஞ்சும், மஞ்சாடியும் பல்லவர்கால நிறுத்தல் அளவைகளாம். நாழி, உறி, சோடு, மரக்கால், பதக்கு குறுணி, காடி, கலம் என்பன அக்கால வழக்கிலிருந்த முகத்தல் அளவைகளாம்.

பொருள் கொடுத்துப் பொருள் வாங்கும் காலம் கடந்து பொன் கொடுத்துப் பொருள் வாங்கும் காலத்தில் வாழ்ந்தவர் பல்லவர். ஆதலின் அவர்கள் செம்பாலும், வெள்ளியாலும் பொன்னாலும் செய்யப்பட்ட காசுகளை நாட்டில் நடமாட விட்டிருந்தனர். அக்காசுகளின் ஒரு பக்கத்தில், சிலவற்றில் நந்தி இலச்சினையும், சிலவற்றில் பாய்மரக் கப்பல் இலச்சினையும் பொறிக்கப் பெற்றிருக்கும். மறு பக்கத்தில், சங்கு, சக்கரம், வில், மீன், குடை, கோவில், விளக்கு, குதிரை, சிங்கம், நண்டு, ஆமை போன்றவை பொறிக்கப் பெற்றிருக்கும்.

நாடு வளமெல்லாம் பெற்றுத் திகழினும், அந்நாட்டின் நான்கு எல்லைகளும் பகைவர் தாக்குதலுக்கு உள்ளாகி விடின், நாட்டில் அமைதி இராது என்பதை உணர்ந்த பல்லவர்கள் நாடு காக்கும் படைத் துறையிலும் சிறந்தே விளங்கினர். வாதாபியைக் கைப்பற்ற வல்ல தரைப் படையும், ஈழத்தை வெல்ல வல்ல கடற் படையும் பல்லவரிடத்தே சிறந்து விளங்கின.

# ௩. பல்லவர் காலச் சமயநிலை

கடைச்சங்க காலம் வரை சிறப்போடு விளங்கிய வைதீக சமயங்களாம் சைவ, வைணவ சமயங்கள், கடைச்சங்க காலத்தை அடுத்துத், தமிழகம் புகுந்து ஆளத் தொடங்கிய களப்பிரர்கள் தம்மோடு கொண்டு வந்த பௌத்த, சமண சமயங்களால் அழிக்கப்பட்டு, வலி குன்றி விட்டது.

வைதீக சமயங்களாம் சைவ, வைணவ சமயங்களின் வழி காட்டியாக விளங்கியவர்கள், மக்களிடையே பிறப்பின் அடிப்படையில் உயர்வு தாழ்வு கற்பித்தும், சமய வழிபாடு உயர்சாதியினர்க்கே உரித்து என்றும், மக்கள் ஒவ்வா வழி களைக் காட்டி வந்தனர். அதனால், அச்சமயங்கள்பால் மக்களின் பற்று குறையலாயிற்று, அதே நேரத்தில் பௌத்த சமண் சமயங்களின் தலைவர்கள், மக்களிடையே உயர்வு தாழ்வு கருதாமல், எல்லோரையும் ஒரு சேர மதித்தனர். நாடெங்கிலும் கல்வி நிலையங்களை அமைத்து கல்வி அறிவு புகட்டினர். மக்களுக்கும் விலங்கினங்களுக்கும் மருத்துவ மனைகளை அமைத்தனர். அறச்சாலைகளை அமைத்து உடல் ஊனமுற்றோர்க்கு உணவும், உடையும், உறையுளும் அளித்தனர். இவ்வறச் செயல்களால் ஈர்க்கப்பட்ட மக்கள் சமண, பௌத்த சமயங்களைப் போற்றி ஆதரிக்கத் தலைப் பட்டனர்.

இந்நிலை பல்லவர்காலத் தொடக்கத்தில் மாறத் தொடங்கியது. சைவ, வைணவ சமயங்களாகிய வைதீகச் சமயங்களின் காவலர்களாய் வாழ்ந்து வந்த பெரியவர்கள்,

ஏழை எளிய மக்களை ஈர்க்க, சமணர்கள் அறச்சாலைகளையும், கல்விக் கூடங்களையும் நிறுவியது போலவே, அடியார்கட்கு அன்னம் அளித்தல், வழிப் போவர்க்கு எனத் தண்ணீர்ப் பந்தல் அமைத்தல், மடங்கள் அமைத்துச் சமயக் கல்வியும், சமுதாயக் கல்வியும் வழங்குதல், புதிய கோயில்கள் கட்டுதல், பழைய கோவில்களுக்குத் திருப்பணி செய்தல் போலும், அறப்பணிகளை ஆற்றி வந்தனர்.

சமயக்கல்வி பெற்ற அறவோர்கள், ஆண்டவன் அருள் பெறச், சமணர்கள் கூறுமாறு, உண்டி சுருக்க வேண்டுவது, உடல் வருத்தக் கடுந்தவம் ஆற்றுவது போல்வன தேவையில்லை; இறைவன் புகழை, உளத் தூய்மையோடு, வாயாரப் பாடி வழிபட்டால் அதுவே போதும், இறையருளைப் பெற்று விடலாம் என்பன போலும் எளிய நெறிகளைச் சமயநெறிகளாகக் கூறி வந்தமையாலும், நல்லாறு தெரிந்துணர, நம்பன் அருளாமையினால், கொல்லாமை மறைந்துறையும் சமண சமயம் புகுந்தவர்கள், மெல்ல மெல்ல அச் சமயத்தைக் கை விட்டு மீண்டும் சைவர்களாகவும், வைணவர்களாகவும் மீளத் தொடங்கினர்.

இந்நிலை, பல்லவப் பெருவேந்தன் மகேந்திரவர்மன் காலத்திலேயே உருவாகி விட்டது. பல்லவர், சமண சமயம் பிறந்த வடநாட்டினின்றும் வந்தவராதலாலும், அவர்கள் தமிழகம் புகுந்த காலை, ஆங்கும் சமணமே பெருவரவிற்றாய்த் திகழ்ந்தமையாலும், பல்லவர் சமண சமயத்தையே சார்ந்திருந்தார்கள். சைவ—வைணவப் பெரியார்களின் சமயநெறி விளக்கங்களின் பயனாக, நாட்டு மக்கள், சமணத்தை நழுவ விட்டுச் சைவராகவும், வைணவராகவும் மாறியது கண்ட பல்லவக் குடியினரும் தங்கள் சொந்தச் சமயமாம் சமணத்தைக் கைவிட்டு, சைவ—வைணவ சமயங்களைத் தழுவிக் கொண்டனர்.

ஆனால், இச்சமய மாற்றத்திற்குச் சமணர்கள் எளிதில் இடம் கொடுத்தார்கள் அல்லர்; சமயம் மாறிய பெரியவர்

களும், தொல்லைகளுக்கு ஆளாகாமல் விடப்பட்டார் அல்லர். சைவராகப் பிறந்து, சமண சமயம் புகுந்து, பின்னர், தமக்கையார் திலகவதியார் அருளால் மீண்டும் சைவராகி விட்ட நாவுக்கரசரை, நீற்றறையில் இட்டும், நஞ்சு கலந்த உணவு அளித்தும், கொல்யானைக் காலடியில் இட்டு மிதிக்கச் செய்தும், கடைசியில், கல்லில் கட்டிக் கடலில் பாய்ச்சியும் செய்த கொடுமைகளும், மதுரையில் சம்பந்தர் தங்கியிருந்த மடத்திற்குத் தீயிட்ட கொடுமை களும், சமணர்களின் தீச்செயல்களுக்கு எடுத்துக்காட்டாய் அமைந்தனவாம்.

இத்துணைக் கொடுமைகளையும் அமைதியோடு தாங்கிக் கொண்டு சைவராக மாறிய அச்சமயப் பெரியாரின் பெருமையைக் கண்ட அளவே, பிறவியிலேயே சமணனான மகேந்திரவர்மன் சைவனாக மாறிச் சைவ சமயத்திற்கும் புத்துயிர் ஊட்டினான். சமண சமயச் சார்புடையனாக இருந்தபோது, சமயவெறி காரணமாக, சமணர்கள், நாவுக்கரசர்க்கு இழைத்த கொடுமைக்களுக்கெல்லாம் துணையாக நின்ற அவன், சைவனாகமாறியதும், அதே சமய வெறிகாரணமாக, சமணர்க்கும் கேடு விளைவிக்கத் துணிந்து விட்டான். திருப்பாதிரிப்புலியூரில் இருந்த சமணப்பள்ளி களையும், பாழிகளையும், கல்லூரிகளையும் அழித்து அவற்றின், சிதைவுகளிலிருந்து பெற்ற கற்களைக் கொண்டு திருவதிகையில், தன் பெயரில் குணதர ஈச்சுரம் என்ற சிவன் கோயிலைக் கட்டினான்.

இச்சமய மாற்றம் பல்லவ நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருந்த அதே காலத்தில், பாண்டிநாட்டில், திருஞான சம்பந்தர், பாண்டிய மன்னன் நெடுமாறன் நோய் தீர்த்தும் சமணர்களோடு வாதிட்டு வென்றும், சைவம் வளர்க்கும் சமயப் பணியாற்றி வந்தார்.

கொல்லாமை, புலால் உண்ணாமை, பிற உயிர்க்குத் தீங்கு எண்ணாமை போலும் அருள் நெறியினைப் பின்பற்று பவர் எனக் கூறிக் கொள்ளும் சமணர்கள், தங்கள் சமயத்தை அழிக்கத் துணியும் பிற சமயத்தவர்களை நீற்றறையில் இடுதல் போலும் மறச் செயல்களைத் துணிந்து மேற் கொண்டது போலவே, அன்பே சிவம் எனக் கூறிக் கொள்ளும் சைவர்களும் வைணவர்களும் தங்கள் சமய அழிவிற்குக் காரணமாயிருந்த சமணர்களைக் கழுவேற்றல் போலும் வன்செயல்களைத் துணிந்து மேற் கொண்டனர். சைவனாக மாறிய மகேந்திரவர்மன், திருப்பாதிரிப்புலியூர் சமணப் பள்ளியை அழித்துத் திருவதிகையில் சிவன் கோயில் கட்டியது போலவே திருமங்கை ஆழ்வார், நாகப்பட்டி னத்துப் பௌத்த விகாரத்தில் இருந்த, பொன்னால் ஆன புத்தர் சிலையைக் கவர்ந்து வந்து, அதை அழித்துக்கொண்ட பொருளால் வைணவக் கோவில்கள் பலவற்றிற்குத் திருப் பணிகள் செய்ததைக் குருபரம்பரை கூறுகிறது.

> "கோதை வேல் தென்னன் தன் கூடல் குலநகரில்
> வாதில் அமணர் வலிதொலையக் — காதலால்
> புண்கெழுவு செம்புனல் ஆறு ஓடப் — பொருதவரை
> வன்கழுவில் தைத்த மறையோனை" —

என்ற நம்பியாண்டார் நம்பி வெண்பாவும்,

> "வெறுப்பொடு சமண முண்டர் விதியில் சாக்கியர்கள் நின்பால்
> பொறுப்பரியனகள் பேசில் போவதே நோயதாகி
> குறிப்பெனக் கடையுமாகில் கூடுமேல், தலையை ஆங்கே
> அறுப்பதே கருமம் கண்டாய் அரங்கமா நகர் உளானே"

என்ற தொண்டரடிப்பொடி ஆழ்வார் பாடலும், சமணர் கழுவேற்றப்பட்ட நிகழ்ச்சிக்குச் சான்று பகர்கின்றன.

பல்லவ வேந்தர்கள் சைவம், வைணவம் ஆகிய இரு சமயங்களையும் ஒப்ப மதித்துப் போற்றி வந்துள்ளனர்: மகேந்திரவர்மனும், பரமேசுவர வர்மனும், இராச சிம்மனும் சைவர்களாகவும், சிம்ம விஷ்ணுவும், நரசிம்ம வர்மனும், இரண்டாம் நந்திவர்மனும் வைணவர்களாகவும் காணப் படுவது, சமயத்துறையில், பல்லவர் கடைபிடித்த சமரச நிலையினை உறுதி செய்யும்.

இவ்வாறு, பல்லவர் காலத்தில், சமணம் அழிய, சைவ, வைணவ வைதிக சமயங்கள் புத்துயிர் பெறத் தொடங்கிய போது, சைவத்தோடு தொடர்புடைய சமயம் என்ற உரிமையோடு, பாசுபத சைவம், காபாலிக சைவம், காளா முக சைவம் போலும், சில வடநாட்டுச் சைவநெறிகளும் தமிழகத்துள் நுழைந்து விட்டன.

தம் இல்லத்தில் விருந்துண்ண வந்த காபாலிகச் சிவனடி யார், உணவாகப் பிள்ளைக்கறி வேண்ட, தம் மகனையே அறுத்துச் சமைத்து விருந்தளித்த சிறுத்தொண்டர், வாதாபி கொண்ட பல்லவர் படைத் தளபதி ஆவர். அவர் பின்பற்றிய சமயம், பைரவர்க்குப் பலியிட்டு வழிபாடு செய்யும் காபாலிகச் சைவ மரபாகும்.

தமிழகம் தொன்றுதொட்டுப் பின்பற்றி வந்த அன்பு வழிச் சமய வழிபாட்டின் முன், அருள் நெறியே தம் நெறி எனக் கூறி வந்த சமண சமயமே நிற்கமாட்டாது அழிந்து விட்டது என்றால், உயிர்கொலை விரும்பும் காபாலிகர் சமயம் போன்றன நிலைக்க மாட்டாது மறைந்து போனதில் வியப்பில்லையன்றோ! சமணம் மறைய, நாயன்மார்களும், ஆழ்வார்களும் வழிபட வளர்ந்த வைதிகச் சமயமே பல்லவர் காலச் சமய நிலையாகும்.

# எ. பல்லவர்கால இலக்கியம்

ஏறத்தாழ அறுநூற்று ஐம்பது ஆண்டு காலம் நின்று நிலவிய பல்லவர் ஆட்சிக் காலத்தின் தொடக்கம் வடமொழி வளர்ச்சிக்கு உரியதாக விளங்கிற்று என்றால், இறுதி, தமிழ் மொழி வளர்ச்சிக்கும் துணை நின்றது எனலாம். பல்லவர் வடநாட்டினின்றும் வந்தவராதலின், அவர் அரசவையில் வடமொழி கொலுவீற்றிருந்தது என்பதில் வியப்பில்லை. பிற்காலப் பல்லவர் மரபின் முதல்வனான சிம்ம விஷ்ணு, சாளுக்கிய நாட்டில் தன் புகழ் பரப்பி, கங்க நாடு வந்திருக்கும் வடமொழிப் புலவராம் பாரவியைத் தூதுவர் போக்கிப் பல்லவ நாட்டிற்கு வரவேற்றுச் சிறப்பித்தான் எனப், பல்லவர் காலப் பிறிதொரு வடமொழிப் புலவராம் தண்டி என்பார், தம்முடைய அவந்தி சுந்தரி கதையில் கூறியிருப்பதும், மத்த விலாசப் பிரகசனம் என்ற வடமொழி நூலின் ஆசிரியனாக, மகேந்திரவர்மனே விளங்குவதும், பெருவள நல்லூர்ப் போர் பற்றிய விளக்கங்களைக் கூறும் கூரம் பட்டயம், பல்லவர் வரலாறு விளங்கப் பெருந்துணையாக நிற்கும் காசகுடிப்பட்டயம் போலும் பல்லவர் பட்டயங்கள் எல்லாம் சிறந்த வடமொழிப் புலமை வாய்ந்தவனா கவிளங்குவதும், காஞ்சி கைலாசநாதர் கோயிலிலும், மாமல்லபுரத்திலும் உள்ள கல்வெட்டுக்கள், இலக்கியச் செறிவோடு கூடிய வடமொழியில் விளங்குவதும், பல்லவர் ஆட்சியில், வடமொழியும், வடமொழிப் புலவர்களும் பெற்றிருந்த சிறப்பிடத்தைப் புலப்படுத்துவனவாம்.

கடைச்சங்க காலத்துத் தமிழ், தூய தனித் தமிழ்நடை உடையதாகப், பதினோறாம் நூற்றாண்டில் எழுதப் பெற்ற, பெரிய புராணம், கம்பராமாயணம், கலிங்கத்துப் பரணி போலும் நூல்களில், வடமொழி பெருவரவிற்றாய் காணப்படுவதற்குக் காரணம், பல்லவர் காலத்தில்: தமிழகத்தில் வடமொழி, கோலோச்சிக் கொலு வீற்றிருந்ததேயாம்.

பல்லவர்க்குப் பிற்பட்ட காலத்தே எழுதப் பெற்ற யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கல விருத்தி போலும் யாப்பிலக்கண உரையாசிரியர்கள், ஆங்காங்கே குறிப்பிட்டுச் செல்லும், எண்ணற்ற யாப்பு நூல்கள் அனைத்தும், வட மொழி யாப்பிலக்கண மரபை ஒட்டிய செய்யுள்கள். எழுந்து விட்டகாரணத்தால், பல்லவர் காலத்தில் எழுதப்பட்டனவே ஆம். அவையெல்லாம், வடமொழி மரபுப்படி எழுதப் பட்டனவேனும், தமிழிலேயே எழுதப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

வடமொழி வழங்கும் வடநாட்டிலிருந்து வந்த காரணத் தினால் பல்லவர்கள், வடமொழிக்குச் சிறப்பளித்தனர் என்றாலும், தாம் வந்து வாழும் நாட்டில் வழங்கும் மொழியை வளர்த்தாலல்லது, தாம் வாழ இயலாது என்ப தால், தமிழ் வளர்க்கும் பணியை மெல்ல மெல்ல மேற் கொண்டார்கள். பல்லவ வேந்தர்கள் வடமொழி வல்லுநர் கள் என்ற நிலை மாறி, அவர்கள் தமிழ் அறிந்தவர்கள், தமிழ்ப் புலவர்களும் போற்றும் பெரும் புலமை படைத்தவர்கள் என்ற நிலையும் உருவாகி இருந்தது. ஐயடிகள் காடவர்கோன் எனச் சேக்கிழாரால் பெயரிட்டு அழைக்கப்படும் மூன்றாம் சிம்மவர்ம பல்லவன் சிறந்த தமிழ்ப் புலவனாய், "சிவத்தளி வெண்பா" என்ற சீரிய தமிழ் நூலை இயற்றி உள்ளான்.

தேவாரம் பாடிய மூவருள் முதல்வராகிய நாவுக்கரசர், மகேந்திரவர்மனைச் சமணத்தைக் கைவிட்டுச் சைவம்

தழுவச் செய்தவராவர். அவரும், அவரைத் தொடர்ந்து திருஞானசம்பந்தரும், சுந்தரரும் பாடிய தேவாரங் களெல்லாம் பல்லவர் காலத்தில் பாடப்பட்டனவே. திருமூலர் திருமந்திரம், காரைக்கால் அம்மையார் பதிகம், நம்பியாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர்த் தொகை, சேரமான் பெருமாள் பாடிய பொன்வண்ணத்து அந்தாதி, மும்மணிக்கோவை, ஞானஉலா, கைலைபாதி காளத்திபாதி, அந்தாதி முதலாம் சைவ சமய வழிபாட்டுப் பாடல்கள். அனைத்தும் பாடப் பெற்றதும் இப்பல்லவர் காலத்தில் தான்.

சம காலத்தவர்களாகிய பேயாழ்வார், பூதத்தாழ்வார், பொய்கை யாழ்லார் நீங்க, எஞ்சிய ஆழ்வார்கள் பாடிய திவ்விய பிரபந்தங்களாகிய வைணவ இலக்கியங்கள் எழுந்ததும் இக்காலத்தில்தான்.

தேவார—திவ்விய பிரபந்தம் போலும் வழிபாட்டுப பாடல்களே அல்லாமல், சிறந்த இலக்கியங்களும் பல்லவர் காலத்தில் எழுந்தன. அவற்றுள் தலையாய சிறப்புடையன. நந்திக் கலம்பகமும், பாரத வெண்பாவும் ஆம். நந்திக் கலம்பகம், மூன்றாம் நந்திவர்மன் புகழ் பாடுவது; கலம் பகங்களுள் முதலாயது; தலையாயது.

"வானுறு மதியை அடைந்தது உன் வதனம்; வையகம் அடைந்தது உன் கீர்த்தி; கானுறு புலியை அடைந்தது உன் வீரம்; கற்பகம் அடைந்தது உன் கரங்கள்; தேனுறு மலராள் அரியிடம் சேர்ந்தாள்; செந்தழல் புகுந்தது உன் மேனி; யானும் என் கவியும் எவ்விடம் புகுவேம்! எந்தையே! நந்தி நாயகனே!" அக் கலம்பகத்தின் இறுதியில் காணப்படும் கையறுநிலைச் செய்யுள் இது.

வெண்பா, அகவல், விருத்தம் என்ற மூவகைப்பாக் களால், இடையிடை உரைநடை இடம் பெற. உரை நடை

இட்டபாட்டுடைச் செய்யுளாகப், பாரதம் பாடிய பெருந் தேவனாரால் பாடப்பெற்றது. இது, மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் பாடப்பெற்றது. தெள்ளாற்று வெற்றியைப் பாராட்டுவது.

"வண்மையால் கல்வியால், மாபலத்தால் ஆள்வினையால்
உண்மையால் பாராள் உரிமையான்—இன்மையால்
தேர்வேந்தர்வான்ஏறத் தெள்ளாற்றில் வென்றானோடு
யார் வேந்தார் ஏற்பார் எதிர்"

அவர் பாக்களுள் ஒன்று இது :

கடைச் சங்க காலத்திற்குப் பிறகு, தமிழகத்துள் களப்பிரர் நுழைவால், சங்கமும் அழிந்து, சங்கப் புலவர்கள் ஆக்கிய பாக்களும் சிதறிவிட்டுப் போய்விடவே, அஃது அறிந்து, அப்பாக்களை எல்லாம் அரிதின் திரட்டி, அப்பாக்கள் கூறும் பொருள் கருதி, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு என்றும், பாவினம் கருதி பரிபாடல், கலி என்றும், பெரிய பாடல்களின் எண்ணிக்கை கொண்டு பத்துப்பாட்டு என்றும், வகுத்துத் தொகுத்தவரும் இவரே

இவ்வாறு வடமொழி, தென்மொழிகளாகிய இரு தொன் மொழிகளின் வளர்ச்சிக்கும் தொண்டு புரிந்த பெருமை, தொண்டை நாடாண்ட பல்லவர்க்கு உரித்து.

# ஏ. பல்லவர் காலத்தில் ஓவியமும் சிற்பமும்

நாகரிக வாழ்க்கையின் நற்சான்றுகளாய நுண்கலை வகையினவாகிய ஓவியமும் சிற்பமும் பல்லவர் காலத்தில் மிகச் சிறந்த இடம் பெற்று மிளிர்ந்தன. பல்லவர் கால ஓவிய வளத்தினை, உலகு பாராட்ட உறுதுணையாக நிற்பது சித்தன்ன வாசல்.

புதுக்கோட்டை மாவட்டத்தில், நாரத்தா மலைப் புகை வண்டி நிலையத்திற்கு அணித்தாக உள்ள சித்தன்ன வாசல் குன்றின் மீது வெட்டப்பட்ட குகைக்கோயிலின் தூண்களிலும், மேற்கூரைகளிலும் வரையப்பட்டிருக்கும் வண்ண ஓவியங்கள், காண்பார் கண்களுக்குப் பெருவிருந்தாம். முன் மண்டபத் தூண்கள் இரண்டிலும் வரையப்பட்டிருக்கும் நடனமாதர் ஓவியங்கள், அக்காலை, மாதர்கள் அணியும் ஆடை அணிகள், அவர் தம் கூந்தல் ஒப்பனை ஆகியவற்றை அழகுறப் படம் எடுத்துக் காட்டுவனவாய் உள்ளன; வலப் புறத்தூணின் உட்புறத்தில் தீட்டப்பட்டிருக்கும் அரசன் அரசியர் ஓவியம், அக்கால அரசர் தம் மணிமுடி அழகு, ஆடவர். மகளிர் தம் தோற்றப் பொலிவுகளைப் புலப் படுத்துகிறது.

முன் மண்டபக் கூரையில் தீட்டப்பட்டிருக்கும் தாமரைக் குளம், சித்தன்னவாசல் ஓவியங்களுக்கெல்லாம் முத்தாப்பு வைத்தது போன்றதாகும்; பச்சிலைகளுக்கிடையே மலர்ந்

திருக்கும் செந்தாமரை மலர்கள், அவற்றின் இடைஇடையே காட்சி அளிக்கும் கயல்மீன்கள், கவின்மிகு அன்னங்கள், நீரில் நீந்தி மகிழும் யானைகள், எருமைகள், இடக்கையில் பூக்கூடை தாங்கி வலக்கையால் மலர் பறிக்கும் சமணத் துறவி, ஆகிய இக்காட்சிகளை இயற்கை எழில் சொட்டச் சொட்டத் தீட்டப் பட்டிருக்கும் அழகே அழகு.

அதுபோலவே, உள்ளறையின் மேற்கூரையில், ஸ்வஸ்திக், சூலம், வட்டம், தாமரை முதலாம் ஓவியங்கள் இடம் பெற வரையப் பெற்றிருக்கும் வண்ணக்கோலத்தின் வனப்பு, வார்த்தைகளால் விளக்கக் கூடியதன்று. சுவர்களில் சுண்ணச் சாந்து பூசி, மஞ்சட் கிழங்கு, மஞ்சள், சிவப்பு, வெள்ளை, கறுப்பு, நீலம், பச்சை ஆகிய நிறம் தரும் பச்சிலைகள் ஆகிய வற்றைப் பயன்படுத்தி, அன்று தீட்டிய அவ்வண்ண ஓவியங்கள், இன்றும் தம் பொலிவு கெடாமல் காட்சி அளிப்பது, அக்கால மக்களின் ஓவியப் புலமையை உலகுக்குப் பறைசாற்றி நிற்கிறது.

தாம் விரும்பும் எழில் மல்கும் இயற்கைக் காட்சி களையும், ஏற்றமிகு மக்கள் உருவ நலங்களையும், இவ்வாறு சுவர்களில் ஓவியங்களாகத் தீட்டி மகிழ்ந்த மக்கள், அவ்வண்ண ஓவியங்கள், காலம் செல்லச் செல்ல மங்கி மறைந்து போகவும் கூடும் என்ற அச்சத்தால் அவற்றைப் பாறைகளிலும், பெருங்கோயில்களிலும் சிற்பங் களாகச் செதுக்கியும் விட்டுச் சென்றுள்ளனர்.

திருச்சி மலைக் கோவிலில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள் கண்ணையும் கருத்தையும் ஈர்க்கும் கவின் உடையவாகும். சடை முடியிலிருந்து விழும் கங்கையை வலக்கையில் தாங்கி, மார்பில் மாலையாக அணிந்த அரவின் தலையைப் பிறிதொரு வலக்கையில் இறுகப் பற்றி கண்மணி மாலையை ஒரு இடக்கையில் தாங்கி, மற்றொரு இடக்கையை இடுப்பில் ஊன்றி நிற்கும் கங்காதரன், அவனை

வணங்கி நிற்கும் அடியார்கள், தலைக்கு மேலே, வானில் மிதக்கும் யாழோர்—ஆகிய காட்சிகளைக் காட்ட அழகுறச் செதுக்கப்பட்டிருக்கும் சிற்பங்களின் சிற்றுளி வேலைப் பாட்டைக் கண்டு வியக்காதவரே இல்லை எனலாம்.

சிற்பக் கலைக்கு உயிர் ஊட்டியவன் மாமல்லன் நரசிம்மவர்மன். வாதாபி வென்ற நரசிம்மவர்மன், அவ்வாதாபி குகைக் கோயில் சுவர்களில் சாளுக்கியர் தம் கைவண்ணம் கண்டு, அவற்றை அவ்வாறே மாமல்லபுரத்துக் குகைக் கோயில்களில் செதுக்கி வைத்தான். மகிடாசுர மண்டபத்தில், துர்க்கை, சிங்கத்தின் மீது அமர்ந்து, எருமைத் தலை அரக்கன் மீது அம்புகளைப் பொழிய, அவரவர்க்குரிய இரு படைகளும் அவரவர்களைச் சுற்றி நின்று அவர்களுக்கு அரண் செய்ய அமைந்த சிற்பங்களின் சிறப்பு பல்லவர்க்கே உரியது இக்காட்சியினும், மாமல்ல புரத்துக்கு மாண்பு தருவது, கற்பாறைகள் மீது செதுக்கி வைத்திருக்கும் சிற்பங்களே.

கோவர்த்தன மலையைத் தாங்கிக் கண்ணன் நிற்க, அவன் அருகே பலராமனும் பிறரும் குழுமி நிற்க, அவர்களுக் கிடையே, கன்றை அன்பொழுக நக்கும் பசுவின் மடியில் கைவைத்துப் பால் கறக்கும் இடையர்களின் நடைபெறும் இனிய காட்சியையும், மலையிலிருந்து பாய்ந்து விழும் ஆறு, அதன் நடுவில் மகிழ்ந்து விளையாடும் நாகர், நீர் நிறைந்த குடத்தைத் தோள் மீது சுமந்து செல்லும் ஓர் அந்தணன், ஆற்று நீர் உண்ணவரும் ஒரு மடமான்; ஆற்று நீரில் பாய்ந்து நீராட நிற்கும் அன்னப் பறவைகள், ஆற்றங் கரையில் ஓர் அழகிய கோவில், அதைச் சுற்றிலும் தவ நிலையில் நிற்கும் முனிவர்கள், அம் முனிவர்களைப் பார்த்துத் தானும் தவம் புரியும் பூனை, பூனை தவம் மேற் கொண்டதால், அச்சம் அற்று ஆடி மகிழும் எலிகள் ஆகிய இவையனைத்தையும் கொண்ட, அர்ச்சுனன் தவம் என

அழைக்கப் பெறும் அழகிய தவக் காட்சியையும் செதுக்கி வைத்திருக்கும் சிற்பநலம் கண்டு சிந்தை மகிழாதவரும் உளரோ?

இராசசிம்மன் கட்டிய காஞ்சி கைலாசநாதர் கோவில் சிற்பங்களைக் குறிப்பிடாமல் விடுவது முறையாகாது. இறைவன் ஆடிய ஊர்த்துவ நடனம், யானைக் கை நடனம் முதல், அக்கால மக்களிடையே பெருவழக்காயிருந்த பல்வேறு நடன வகைகளும் அழகிய சிற்பங்களாக வடிக்கப் பட்டுள்ளன. அம்மை அப்பர் சிற்பங்களும், அவர்களைச் சுற்றி நின்று வழிபடும் நான்முகன்—நாமகள், திருமால்—திருமகள் சிற்பங்களும் காணத்தத்கனவாம். சுருங்கக் கூறின், கயிலாச நாதர் கோவில், பல்லவர் போற்றிய சிற்பக் கலையை, உலகிற்கு உணர்த்த எழுந்த சிற்பக் கலைக் கூடம் என்றே கொள்ளலாம்.

# ஐ. பல்லவர் காலத்தில் இசையும் நடனமும்

நாகரிக வாழ்க்கையின் நல்ல எடுத்துக்காட்டாய் விளங்குவனவற்றுள் இசையும் நடனமும் முதலிடம் பெறுவனவாம். சங்க காலத் தமிழர் வாழ்க்கையில் அவை சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்தன என்பது சங்க இலக்கியங்களால் இனிது உணரப்படும். சங்க காலத்தை அடுத்து ஏறத்தாழ அறுநூற்றைம்பது ஆண்டுகள், தமிழகத்தில் பெருவாழ்வு வாழ்ந்தவர்கள் பல்லவர்கள். அவர்கள் காலத்தில் இசையும் நடனமும் மேலும் சிறப்புற்றன.

அரசன் எவ்வழி, அவ்வழி குடிகள். மன்னவன் சொன்னவாறே சொல்வது வழக்காறு அன்றோ! இது உலகியல். பல்லவர் காலத்தில் இசையும் நடனமும் தமிழகத்து மக்களிடையே, பிரிக்க இயலாப் பெருநிலை பெற்றிருந்தன என்றால், அது அக்கால அரசாண்ட பல்லவவேந்தர்களும் அக்கலைகளில் வல்லவர்களாய், அவற்றைப் பேணி வளர்ப்பவர்களாய்த் திகழ்ந்ததின் விளைவே ஆகும்.

மகேந்திரவர்மன் சிறந்த இசைப்பேரறிஞனாக் விளங்கினான். "சங்கீரணம்" என்ற தாள வகையை அதன் ஒழுங்குகளை அமைத்ததனால், அவன் 'சங்கீரணசாதி' என அழைக்கப்பட்டான் எனக் கூறுகிறது பல்லாவரம் குகைக் கோயில் கல்வெட்டு. "சித்தம் நமசிவாய" என்று தொடங்கும் குடுமியாமலைக் கல்வெட்டு "மகேந்திரன் வகுத்த பண்கள் எட்டு நரம்புகளைக் கொண்ட வீணைக்கும் பயன்

படும்; ஏழு நரம்புகளைக் கொண்ட வீணைக்கும் பயன் படும்'' எனக் கூறுகிறது.

மகேந்திரன் வெட்டிய மாமண்டூர்க் கல்வெட்டு, இசைச் சிறப்பை, "ஊர்வசி கந்தர்வ சாத்திரம்'' எனும் பெயர் சூட்டிப் பாராட்டுகிறது. மகேந்திரன், தான் இயற்றிய மத்த விலாசப்பிரகசனத்தில், "இசை எனது செல்வம்'' என வாயாரப் பாராட்டியுள்ளான். "பொன் நரம்புகள் கொண்ட பரிவாதினி'' என்ற வீணையை, "வீணை வல்ல நங்கையர் ஒரு பெண் தன் ஆருயிர்த் தோழியை அணைத்துக் கொண்டு படுப்பது போல், அணைத்துக் கொள்வர்'' எனப் புத்த சரித்திரத்தில் புகழப்படும் "பரிவாதினி'' வீணையில், மகேந்திரவர்மன் வல்லவன்.

இராசசிம்மன் விருதுப் பெயர்களாக, இசைக்கருவிகளை இயக்குவதில் வல்லவன் எனும் பொருள்படும் "வாத்ய வித்யாதரன்''; ஆதோத்யம் என்ற வீணை வாசிப்பதில் தும்புருக்கு நிகரானவன் எனும் பொருள்படும் "ஆதோத்ய தும்புரு''; வீணையில் நாரதருக்கு நிகரானவன் எனும் பொருள்படும் "வீணா நாரதன்'' என்பன காணப்படு வதால் இவனுடைய இசை உள்ளமும் புலனாதல் அறிக.

நாடாளும் அரசர்கள், இவ்வாறு இசை ஆர்வம் உடைய வர்களாய் விளங்கவே, நாட்டு மக்களும் இசை வெள்ளத்தில் ஆழ்ந்து கிடந்தனர். பல்லவர் காலத்து நாயன்மார்கள் மூவரும், பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய வழிபாட்டுப் பாடல்களை, ஏழிசைச் சிறப்பு விளங்க ஆக்கி அருளினார்கள். ஈசன் எந்தை இணையடி நீழல், மாசில் வீணை போன்றது என, இசை இன்பம், இறை இன்பத்திற்கு நிகரானது எனக் கொண்டார்கள்.

சம்பந்தர் பாடிய பாக்களைத் திருநீலகண்ட யாழ்ப் பாணர், தம் யாழில் இசைந்து மகிழ்ந்த வரலாறும், அவர் யாழிலும் இசைத்துப் பாடமாட்டா நுண்ணிய இசை அமைந்த "யாழ்மூரிப்பண்'' பாடுவதில் சம்பந்தர் சிறந்து

விளங்கிய வரலாறும், பல்லவர்கால இசை வளத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாம்!

ஆடலும், பாடலும், பிரிக்க இயலாவாறு இரண்டறக் கலந்த கலைகளாதலின், இசைக்கு அளித்த சிறப்பிடத்தில் சிறிதும் குறையாத சிறப்பினை நடனத்திற்கும் அளித்துப் போற்றினார்கள் பல்லவர்கள். மகேந்திரவர்மன் காலத்துச் சித்தன்ன வாசல் ஓவியங்களில் நாதாந்த நடன நிலையிலும், லதாவிரிசிக நடன நிலையிலும், தீட்டப் பெற்றிருக்கும் இரு நடனமாதர்களின் ஓவியங்களும், காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோவிலில் உள்ள சிற்பங்களில், ஆடவன் ஒருவன், தன்னை அழகாக அணிசெய்து கொண்டு, அழகிய இரு நங்கையர் இடைநின்று நடம் புரிவதாகவும், நடிகன் ஒருவன் இசை முழங்கியவாறே முன்னே செல்ல, அவனைத் தொடர்ந்து, ஆடவர் அறுவரும், பெண்டிர் இருவருமாகிய நடிகர் எண்மர் செல்ல, அந்நடிகர் குழாம் அரசவை புகுவதாகவும் செதுக்கப்பட்ட சிற்பங்களும், பல்லவர் காலத்து நடனக்கலைச் சிறப்பிற்கு நல்ல எடுத்துக்காட்டுக்களாம்.

பல்லவர் காலத்துக் கோவில்களில், நடனம் ஆடுவதற்கென்றே அழகிய மங்கையர் பலர் இருந்தனர்; இறைவன் ஆடிய தாண்டவ நடனம், நாதாந்த நடனம், முதலாம் நடனங்களை ஆடிக் காட்டி, அக்கால மக்களிடையே சமய உணர்வை ஊட்ட உறுதுணையாக நின்ற அம்மடவார்களை நாயன்மார்களும் பாராட்டி உள்ளார்கள்.

"வலம் வந்த மடவார்கள் நடம் ஆட, மழை
என்று அஞ்சிச்
சில மந்தி அலமந்து மரமேறி முகில் பார்க்கும்
திருவை யாறே"

இறைவன் ஆடிய பல்வேறு நடனங்களையும், காஞ்சி கைலாச நாதர் கோயிலில் சிற்பங்களாக வடித்துப், பல்லவர் காலத்து நடனக் கலைக்கு அழியா நினைவுச் சின்னம் அமைத்து விட்டார்கள் பல்லவப் பேரரசர்கள்.

# 3. சோழர்-பாண்டியர் காலம்

# அ. தமிழகத்தின் பரப்பும் பழமையும்

"நீலத் திரைகடல் ஓரத்திலே நின்று
நித்தம் தவம்செய் குமரி எல்லை—வட
மாலவன்குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக்கிடக்கும் தமிழ்நாடு"

எனப் பாரதியார் பாடிப் பரவுதற்கேற்ப, தமிழ்நாட்டிற்கு இவ்விருபதாம் நூற்றாண்டின் எல்லைகளாக விளங்கும் வேங்கடம்—குமரிகளே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகத்தின் வட தென் எல்லைகளாகவும் நின்று காத்திருந்தன. ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனாரின் ஒரு சாலை மாணவராய் மாண்புற்று, அவர் தம் தொல்காப்பியத்திற்குப் பாயிரம் பகர்ந்தருளிய ஆசிரியர் பனம்பாரனார் அவர்களின் "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்"[1] என்ற பாவில், அவ்விரு எல்லைகளே கூறப்பட்டுள்ளமை உணர்க.

தொல்காப்பியர் காலத்துத் தமிழகம், இவ்வாறு வேங்கடம் குமரிகட்கு இடைப்பட்ட சிறு நாடாய்க் குறுகி காட்சி அளித்தது என்றாலும், அவர்க்குப் பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் அது, வெண்பனி தவழும் இமயப் பெருமலையைவட எல்லையாகவும், தென்கடல் அலைமோதும் குமரிக் கோட்டினைத் தென் எல்லையாகவும் கொண்ட பெருநிலப் பரப்பாகவே இருந்தது.

கடைச் சங்ககாலப் பாண்டியருள் பழையோனாகிய பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடிய புலவர் காரிகிழார் அவர்கள், தமிழகத்தின் எல்லை கூறுங்கால், இமயம் குமரிகளையே வடதென் எல்லைகளாகக் கூறியுள்ளார்.

"வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடல் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்"[2]

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாடிய புலவர் மாங்குடி மருதனாரும், தம்முடைய மதுரைக் காஞ்சியில் அவ்விரு எல்லைகளையே கூறியுள்ளார்.

"தென்குமரி வடபெருங்கல்
குணகுட கடலா எல்லை"[3]

இமயம் முதல் குமரி வரைப் பரவிய பெருநாடாய்த் திகழ்ந்த தமிழகம், வேங்கடம் முதல் குமரி வரைக் குறுகிய சிறு நாடாகச் சிதைந்துவிட்ட சங்ககாலத்திலும், தன் பண்டைய பேரெல்லையை அது ஒரோ வழி அடையப் பேரரசு செலுத்திய அரசர்களும் இருந்தனர்.

தம்மைப் பெற்றெடுத்த பெருமைக்கு உரியோனாகிய இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனைத் தாம் பாடிய சிலப்பதிகாரத்தில் பாராட்டப்புகுந்த இளங்கோவடிகளார்,

"குமரியொடு வட இமயத்து ஒருமொழி வைத்து
உலகாண்ட சேரலாதன்"[4]

எனப்பாராட்டி சேரர்குலத்து வந்தான் ஒருவன் இமயம் வரை ஆண்ட சிறப்பிற்குச் சான்று பகர்ந்துள்ளார்.

"மூவேந்தர்களையும் ஒருசேர மதிக்கும் மாண்புடைமையால் மூவர் வரலாறு விளங்கும் சிலம்பினைப் பாடும் உரிமை தங்களுக்கே உரித்தாகுக" என்ற சாத்தனார் சொல்லுக்குச் சான்று பகர்வார்போல் மூவேந்தர் வரலாறுகளையும் முறை கெடாவாறு பொழிந்தருளிய இளங்கோவடிகளார்,

"திங்கள் மாலை வெண்குடையான் சென்னி,
செங்கோல் அது வோச்சிக்,
கங்கைதனைப் புணர்ந்தாலும், புலவாய் வாழி
காவேரி"[5]

என்ற தொடரில், சோழர் குலத்து வந்தானொருவன் இமயம் வென்ற சிறப்பினைப் பாராட்டியுள்ளார்.

பாண்டியர் குலத்து வந்த பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, இமயப்பெருமலை வரையும் ஆணை செலுத்தினான் என்பது முன்னர்க் காட்டிய காரிகிழார் செய்யுளால் காணக்கிடப்பதாகும்.[6]

பண்டைய தமிழகம், பரந்து அகன்ற இப்பேரெல்லைப் பெருமை ஒன்று மட்டுமே உடையதன்று, "உலகப் பெருநாடுகளுள் அறிவாற்றல்களிலும், செல்வச் செழுமையிலும் நாகரிக நல்வாழ்விலும் நனி சிறந்து விளங்கும் நாடு எங்கள் நாடே" என்று இன்று இறுமாந்து கூறும் இன்றைய நாடுகளெல்லாம், உலக மக்களின் உணர்வுள்ளும் இடம்பெறலாகா அத்துணை இருள் செறிந்த இருண்ட நாடுகளாய் மறைந்து கிடந்த அத்துணைப் பழங்காலத்திலேயே, உலக மக்களுக்கு உணவும் உணர்வும் ஒருங்கே ஊட்டவல்ல ஒப்புயர்வற்ற நாடாய் நின்று புகழ்பெற்றிருந்தது நம் தமிழகம்.

வடவேங்கடம் தென்குமரிகட்கு இடைப்பட்ட அப்பெரு நிலப் பரப்பினைச் சங்ககாலப் புலவர் பலரும், "வையக வரைப்பில் தமிழகம்"[7], "இமிழ் கடல் வரைப்பில் தமிழகம்"[8], "சம்புத் தீவினுள் தமிழகம்"[9] எனத் "தமிழகம்" என்ற பெயரினாலேயே அழைத்துள்ளனர் என்றாலும், ஆசிரியர் தொல்காப்பியனார், அதை, மூவேந்தர்க்குரிய முதுபெரும் நாடாகவே மதித்துள்ளார். அவர் தமிழகத்தை "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு"[10] என்றே வழங்குவது காண்க.

சேர சோழ பாண்டியர்களாகிய அம்மூவேந்தர் ஆட்சி, வரலாற்றுக் காலத்துக்கு அப்பாற்பட்ட முதுபெரும் பழமையும் பெருமையும் உடையதாகும். இவ்வரசுகளைத் தோற்றுவித்தவர் இன்னார், தோற்றுவித்த காலம் இது என வரையறுத்துக் கூறிய வரலாற்று ஆசிரியர் ஒருவரும் இலர். இவ்வரசுகளின் பழமை பற்றிக் கூற வந்த ஆசிரியர் ஒருவர், "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றி மூத்தகுடி"[11], என்று கூறுவதோடு நின்று விட்டார். பிறிதோராசிரியர், "சேர சோழ பாண்டியர் குடிகள் போலப் படைப்புக் காலம் தொடங்கி மேம்பட்டு வரும் குடிகள்"[12] என்று கூறி முடித்தார்.

வடமொழி இராமாயண ஆசிரியர் வான்மீகியாராலும், அவ்வடமொழிக்கு முதல் இலக்கணம் வகுத்த பேராசிரியர்

காத்தியாயனராலும் பெருமைக்கு உரியவராகப் பாராட்டப் பெற்ற பழமை வாய்ந்தன இப்பேரரசுகள் மூன்றும். மேற்கே சிறந்து விளங்கிய முதுபெரும் அரசாகிய உரோமானியப் பேரரசும், கிழக்கே சிறந்து விளங்கிய சீனப் பேரரசும் கண்டு அஞ்சத்தக்க அளவு, அந்நாடுகளோடு கடல் வாணிகம் புரிந்த பழமையும் பெருமையும் அம்மூவேந்தர் ஆட்சிக்கே உரியவாம்.

இமயம் முதல் குமரி வரைப் பரவியுள்ள இந்தியப் பெரு நிலப் பரப்பில் நனிமிகப் பழங்காலத்தே தோன்றி நாடாண்ட அரசுகள் பலவற்றுள்ளும், வேங்கடம் குமரிகட்கு இடைப்பட்ட தென்னாடாண்ட தமிழரசுகளே தன்னே ரில்லாச் சிறப்புடையவாம் என்பது வரலாற்று ஆசிரியர் அனைவர்க்கும் ஒத்த ஒருமைப்பாடுடைய உண்மையாகும், தென்முனை தமிழகம் நீங்கிய இந்தியாவிலும், இந்தியா விற்கு அப்பாற்பட்டும் தன் ஒரு குடையே நிழல் செய்ய உலகாண்ட உரவோனாகிய மவுரியர் பெருமரபில் வந்த மன்னர் மன்னன் அசோகனால், "தன்னோடு ஒத்த பெருமைக்கு உரியவர் தமிழரசர்; அவர் ஆட்சிக்கு உட்பட்ட அரசு, தன் ஆட்சிக்கு அடி பணியாது தனித்து நின்று ஆள வல்ல பேரரசாம்"[13] எனப் பாராட்டப் பெற்ற பழமையும் பெருமையும் உடையன நம் பண்டைத் தமிழரசுகள் மூன்றும்.

## சான்றெண் விளக்கம்


1. தொல்காப்பியம் ; பாயிரம்
2. புறநானூறு. .பா.6.
3. மதுரைக் காஞ்சி—வரிகள் 70-71
4. சிலப்பதிகாரம் : உரைப்பாட்டு மடை
5. சிலப்பதிகாரம் : 7:2
6. புறநானூறு. பா. 6.
7. புறநானூறு, பா. 168.
8. சிலப்பதிகாரம் : 3:37
9. மணிமேகலை ; 17:62
10. தொல்காப்பியம் : பொருள் பா :79
11. புறப்பொருள் வெண்பா மாலை—14
12. திருக்குறள் : பரி ; உரை
13. Edicts of Asoka.

# ஆ. கடைச் சங்க காலத்திற்கும் விஜயாலயன் காலத்திற்கும் இடைப்பட்ட காலச் சோழர் நிலை

கடைச சங்க காலம் எனக் கருதப்படும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழகத்தில் நுழைந்த களப்பிரர்களால், சேர, சோழ, பாண்டியப் பேரரசுகள் அழிவுற்றன. அந்நாள் தொட்டு, அக்களப்பிரர் ஆட்சியை அழித்து விட்டு, தொண்டை நாட்டில் பல்லவர்களும், பாண்டி நாட்டில் பாண்டியர்களும் அமைத்த பல்லவ பாண்டியப் பேரரசுகள் செல்வாக்கிழந்து போக, சோழப் பேரரசுக்கு விஜயாலயன் அடிகோலிய கி. பீ. 850 வரை சோழர் வரலாற்றில் இருள் சூழ்ந்தே கிடந்தது. இந்த எழு நூறு ஆண்டுகாலச் சோழர் வரலாற்றை அறிய துணை புரியவல்ல வரலாற்றுச் சான்று எதுவும் கிடைத்திலது. சோழர்களைப் பற்றிப் பல்லவர் பாண்டியர் பட்டயங்களும் பெரிய புராணமும் ஆங்காங்கே குறிப்பிடும் ஒரு சில குறிப்புகள் மட்டும் கிடைத்துள்ளன.

புத்த தத்தர் காலத்தவனான அச்சுதக் களப்பாளன், சேர, சோழ, பாண்டியரை வென்றான். அச்சுதக்காப்பாளன் ஆட்சி புரிந்து கொண்டிருந்த போது, காவிரிக் கரையில் பூத மங்கலம் எனும் இடத்தில் இருந்து தம்முடைய விநயவிநிசயம், அபிதம்மாவதாரம் என்ற இருநூல்களையும் இயற்றியதாகக் கூறும் புத்ததத்தர், தம்முடைய பிறப்பிடம் உறையூர் என்று கூறியிருப்பதோடு, காவிரிப் பூம்பட்டினத்தின் சிறப்பையும் வாயாறப் புகழ்ந்துள்ளார்.

கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆட்சி புரிந்த புத்தவர்மன், கடல் போன்ற சோழர்படைக்கு வடவைத் தீ போன்று விளங்கினான் எனக்கூறுகிறது, வேலூர்ப் பாளையப் பட்டயம். மகேந்திரவர்மன் தந்தையாகிய சிம்ம விஷ்ணு, காவிரி பாயும் சோழ நாட்டை வென்றான் எனக் கூறப்படுகிறது. மகேந்திரவர்மன் சோழரை வெற்றி கொண்டான் என்றும், திருச்சிராப்பள்ளி மலை, சோழ நாட்டின் மணி முடியாம் என்றும் மகேந்திர வர்மன் காலத்துக் கல்வெட்டொன்று கூறுகிறது.

சாளுக்கியப் புலிகேசி, பல்லவரை வென்று சேர, சோழ, பாண்டியர்க்கு மகிழ்ச்சி அளித்தான் என்றும் காவிரிக்கரை உறையூரில் பாசறை கொண்டான் எனவும் கூறப்படுகிறது. மேலே கூறிய குறிப்புகளால், தமிழகத்துள் புகுந்த களப்பிரர்களையும், பல்லவர்களையும், புகவொட்டாது தடுத்து நிறுத்த சேரர்களும், பாண்டியர்களும் மேற்கொண்ட போர் முயற்சிகளில் சோழர்களும் அவர்களுக்குத் துணையாக நின்று களப்பிரர்களையும், பல்லவர்களையும் எதிர்த்துப் போராடினர் என்றும், ஆனால் அம் முயற்சியில் சேர, பாண்டியர்களுக்குக் கிடைத்த தோல்வியே சோழர்களுக்கும் கிடைத்தது என்றும் தெளிவாகின்றன.

அடுத்து கூறப்படும் சான்றுகள் இரண்டாலும், பல்லவர் முன் நிற்க மாட்டாது தோல்வி கண்ட சோழர்கள், இனி அவர்களைப் பகைப்பதில் பயனில்லை; தங்களுக்கும் காலம் வரும் வரை அவர்களோடு நட்புபூண்டு வாழ்வதே அறிவுடைமையாகும் என உணர்ந்து செயல் பட்டனர் என்பது தெளிவாம்.

தந்திவர்மன் காலத்தில், திருச்சானூர் இளங்கோயில் பெருமானுக்குச் சோழ நாட்டுச் சோழனார் உலகப் பெருமானார் என்பவர், திருவிளக்கிற்காக, முப்பதுகழஞ்சு பொன் அளித்தார் எனக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது.

கும்பகோணம் போரில் ஸ்ரீமாற ஸ்ரீவல்லப பாண்டியனிடம் தோற்ற பல்லவனுக்குத் துணையாக வந்தவருள் சோழர்களையும் குறிப்பிடுகிறது சின்னமனூர்ப் பட்டயம்.

பனிரெண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாயினும், பல்லவர் காலத்து நிகழ்ச்சிகளைத் தெளிவாக எடுத்துக் கூறும் பெரிய புராணம், திருஞான சம்பந்தரால், சைவனாக மாறிய பாண்டிய மன்னனின் மனைவியாகிய மங்கையர்க்கரசி, சோழர் குலத்தில் பிறந்தவள் (வளவர்கோன் பாவை) என்றும், புகழ்ச் சோழ நாயனார் எனும் பெயர் கொண்ட ஒரு சோழ அரசன் அதிகனை வென்றான்; கருவூரைக் கைப்பற்றினான் என்றும், ஏயர்கோன் கலிக்காம நாயனார் சோழர் படைத் தலைவராவர் என்றும்,சுந்தரரும்,சேரமான் பெருமாளும் பாண்டிய நாடு அடைந்த போது அவர்களை வரவேற்றவர்களுள், பாண்டியன் மகளை மணந்து பாண்டியன் அவையில் இருந்த சோழர் குலச் சிற்றரசனும் ஒருவன் என்றும், பழையாறை வடதளிப் பெருமானை வழிபட வந்த திருநாவுக்கரசர் வேண்டிக் கொள்ள பழையாறை ஆண்டு கொண்டிருந்த சோழ மன்னன் ஒருவன் அப்பெருமானுக்கு விமானமும் எடுத்து நாள் வழிப்பாட்டிற்கும் வகை செய்தான் என்றும் கூறுகிறது.

அரங்கப் பெருமானை அல்லது வேறு அரசனை மணவேன் எனச் சூளுரைத்து உயர்ந்த உறையூர் நாச்சியார், உறையூர் ஆண்ட தர்மவர்மன் என்ற சோழ மன்னன் மகளாவர் என்றும், திருமங்கை ஆழ்வார், சோழப் படைத் தலைவர் என்றும், திவ்வியசூரி சரிதமும், குருபரம்பரையும் கூறுகின்றன.

மேலே கூறிய வரலாற்றுச் சான்றுகளால், தமிழக வரலாற்றின் இருட்காலம் எனக் கூறப்படும் அக்காலத்தில், சோழர்கள் தம் அரசிருக்கையாகிய உறையூரை விட்டு வெகு தொலைவு சென்று விடாது, அதைச் சுற்றி உள்ள இடங்களையே இருப்பிடமாகக் கொண்டு, காலம் வரும் வரை காத்திருக்கும் கருத்தோடு, சில காலம் பல்லவர்க்குத்

துணையாய் நின்று பாண்டியரை எதிர்த்தும், சில காலம் பாண்டியர்க்குத் துணை நின்று பல்லவரை எதிர்த்தும், அவ்விரு இனத்தவரோடும் மாறி மாறி நட்புறவும் மண உறவும் கொண்டு காலம் கழித்து வந்தனர் என்பதும், அந்நிலையிலும் சைவத்தையும், வைணத்தையும் பேணி வளர்க்கும் பணியை விடாது மேற்கொண்டிருந்தனர் என்பதும் தெளிவாகின்றன.

நாவரசர் வந்தபோது, பழையாறையில், சோழ மன்னன் இருந்தான் எனப் பெரிய புராணம் கூறுவதாலும், விஜயாலயன் வழி வந்த சோழப் பேரரசின் இரண்டாவது தலை நகராகப் பழையாறை விளங்கியதாலும், சோழப் பேரரசர் பலரும் அப் பழையாறையில் வாழ்ந்திருந்தமையாலும், ஆங்கு ஒரு பேரரசு நடைபெற்றது என்பதை உறுதி செய்ய வல்ல நினைவுச் சின்னங்கள் இன்றும் காணப்படுவதாலும், இடைக் காலச் சோழர்கள், பழையாறை நகரையே தம் வாழ்விடமாகக் கொண்டனர் எனக் கொள்ளலாம்.

இஃது இங்ஙனமாக, கி. பி. ஏழாம் நூற்றாண்டில் தமிழகம் வந்து சுற்றிப் பார்த்து விட்டுத் திரும்பிய சீன வழிப் போக்கனாகிய யுவான் சுவாங், சோழ நாடு, காஞ்சிக்கு வடமேற்கில் இருப்பதாகக் கூறியிருக்கும் குறிப்பைக் கொண்டும், கடப்பை, கர்நூல் மாவட்டங்களில் கிடைக்கும் தெலுங்குக் கல்வெட்டுக்களும், செப்பேடுகளும் ரேணாடு 7000 என்ற நாட்டை ஆண்ட அரசர்கள், காவிரிக்குக் கரை கட்டிய கரிகாற் சோழனின் வழி வந்தவராவர் எனக் கூறுவதோடு, அவ்வரச குடும்பத்தவர் பெயர்களாக, சோழ மகாராஜா, சோழ மகா ராஜாதி ராஜா, சோழ மாதேவி, இளஞ்சோழ மாதேவி என்பன போலும் பெயர்களைக் குறிப்பிடுவதைக் கொண்டும், சோழர்களில் ஒரு பிரிவினர் தமிழகத்தைக் கைவிட்டு வடநாடு சென்று ஆங்கு வாழ்ந்திருத்தலும் கூடும் எனக் கூறுவர் சில வரலாற்று ஆசிரியர்கள்.

# இ. சோழப் பேரரசு — தோற்றமும் வீழ்ச்சியும்

## தோற்றம்

சங்ககாலத்தில் புகழ் ஓங்க அரசோச்சியிருந்த மூவேந்தர்களுள், களப்பிரர் நுழைவால், சேர—பாண்டியப் பேரரசுகள் நிலை குலைந்து போனது போலவே, சோழப் பேரரசும் நிலை குலைந்து போய் விட்டது. அரசு நிலை குலைந்து விட்டது என்றாலும், அக்குடிவந்த சோழர்கள் அறவே அழிந்து விடாது, தஞ்சைக்கடுத்த பழையாறையில் குறுநிலத்தலைவர்களாய் வாழ்ந்து வந்தார்கள். களப்பிரர்களை வென்று, வடக்கே பல்லவர்களும், தெற்கே பாண்டியர்களும் தங்கள் பேரரசுகளை நிறுவிய போதும் சோழர்களால் தங்கள் அரசை நிலை நிறுத்த முடியவில்லை. தமிழகத்துக்குப் புதியவர்களாகிய பல்லவர்களைத் தடுத்து நிறுத்தும் பணியில், தொடக்கத்தில் பாண்டியர்களோடு கூடிப் பல்லவர்களை எதிர்த்தார்கள் என்றாலும், பல்லவர் பகைமை, தமக்கு ஆக்கத்தினும் அழிவே விளைவிக்கும் என்பது உணர்ந்து பல்லவர்களோடு நட்புறவு கொண்டு வாழ்ந்து வந்தனர்.

சோழர் வழிமுறை கூறும், அன்பில், ஆனைமங்கலம், திருவாலங்காடு பட்டயங்கள், கடைச்சங்க காலத்தவனாகிய செங்கணான், அவன் மகன் எனக் கருதப்படும் நல்லடி ஆகியோர்க்குப் பின்னர், விஜயாலயன் பெயரையே குறிப்

பிடுகின்றன. விக்கிர சோழன் உலா, குலோத்துங்க சோழன் உலா, இராசராச சோழன் உலா என்ற மூவர் உலாக்களும் கலிங்கத்துப் பரணியும் அவ்வாறே வரிசைப்படுத்துகின்றன. ஆகவே, பலநூறு ஆண்டுகளாகத் தாழ்ந்து புகழ்குன்றிக் கிடந்த சோழ அரசை, மீண்டும் நிறுவி, உயர்நிலைக்குக் கொணர அடிகோலியவன் விஜயாலய சோழனே ஆவன்.

## விஜயாலய சோழன்

விஜயாலயன், தஞ்சையைக் கைப்பற்றித், தலைநகர் ஆக்கினான் என்றும், அத்தஞ்சையில் கொற்றவைக்குக் கோயில் எடுப்பித்தனன் என்றும் திருவாலங்காடு செப்பேடு கூறுகிறது. தஞ்சைக்கு அடுத்த செந்தலையில் வாழ்ந்தவரும், பல்லவர்க்கு அடங்கிய சிற்றரசர்களாய் அவர்களுக்குத் துணையாய்ப் பாண்டியர்களோடு போரிட்டு, வந்தவரும் ஆகிய முத்தரையர் என்பார், "தஞ்சைக்கோன்" "தஞ்சை நற்புகழாளன்" என்று பட்டப் பெயர்களை மேற்கொண்டிருந்தனர். அதனால், செந்தலையைத் தம் தலைநகராகக் கொண்டிருப்பினும், முத்தரையர், தஞ்சையையும் கைப்பற்றி ஆண்டு வந்தனர் எனத் தெரிகிறது—ஆகவே, விஜயாலயன் தஞ்சையைக் கைப்பற்றினான் என்றால், அவன் அத்தஞ்சையை முத்தரையரிடமிருந்தே கைப்பற்றியிருத்தல் வேண்டும்.

வடக்கே சாளுக்கியரோடும், தெற்கே பாண்டியரோடும் ஓயாப் போர் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாகிவிட்ட பல்லவரால், தஞ்சைத் தரணி, முத்தரையர் கையிலிருந்து சோழர் கைக்கு மாறியதைத் தடுத்து நிறுத்த இயலவில்லை. மேலும் முத்தரையர், சோழர் இருவருமே தம் நண்பர்களாகவே, ஒரு நண்பன் கையிலிருந்து வேறொரு நண்பன் கைக்கு மாறியதை அவர்கள் பெரிதாக பொருட்படுத்தவில்லை போலும்.

பாண்டியர் வெற்றி கொள்ள, பல்லவர் தோல்வி கண்ட குடமூக்குப் போரிலும், பல்லவர் வெற்றி கொள்ள பாண்டியர் தோல்வி கண்ட அரசிலாற்றுப் போரிலும், பல்லவ வேந்தனாகிய நிருபதுங்கனுக்குத் துணையாக இருந்து போரிட்டவன் விஜயாலயனே. இவ்வாறு பல்லவ நண்பர்க்குப் படைத் துணையாகவும், தளர்ந்து வீழ்ந்து போன தம் அரசை மீண்டும் நிலை நிறுத்தவும், விஜயாலயன் தன் வாழ் நாளெல்லாம் ஓயாது போரிட்டமையால், அவன் மார்பு, விழுப்புண்களின் வாழிடமாகி விட்டது. அவன் மார்பில் பெற்ற புண்களின் எண்ணிக்கை தொண்ணூற்றாறு என எண்ணிக் காட்டிப் புகழ்கின்றன மூவர் உலாக்களும்.

"மீதெல்லாம்
எண்கொண்ட தொண்ணூற்றின் மேலும் இருமூன்று
புண்கொண்ட வென்றிப் புரவலன்"

"அடுத்தடுத்துச்
சீறும் செருவில் திருமார்பு தொண்ணூறும்
ஆறும்படு தழும்பின் ஆரத்தோன்"

"புல்லார்
தொழும்புடைய ஆகத்துத் தொண்ணூறும் ஆறும்
தழும்புடைய சண்டப்பிரசண்டன்"

போரில் வெற்றி தேடித் தருவாள் கொற்றவையே எனும் உணர்வால், தாம் பெற்ற வெற்றிக்காகக் கொற்றவையே வழிபடும்மரபில் வந்தவனாதலின், தொண்ணூற்றாறு விழுப்புண் பெற்ற விஜயாலயனும், தான் வென்று கொண்ட தஞ்சையில் கொற்றவைக்குக் கோயில் எடுத்து வழி பட்டான்.

## இராசகேசரி முதலாம் ஆதித்தன்

தஞ்சையில் சோழர் பேரரசை விஜயாலயன் நிறுவி னான் என்றாலும், பகைப்பயம் ஒழிய அதை நிறுவினான்

அல்லன்; வடக்கில் பல்லவனும் வலி குன்றினான் அல்லன்; தஞ்சையில் அரசு கண்ட நிலையிலும், சோழர், பல்லவர்க்கு அடங்கிய நண்பராகவே வாழ வேண்டி இருந்தது; அது போலவே, தெற்கே பாண்டியனும், சோழரையும், அவர் நண்பராம் பல்லவரையும் நிம்மதியாக வாழ விட்டான் அல்லன். அதனால், சோழப் பேரரசை மீண்டும் புத்துயிர் பெறச் செய்தவன் விஜயாலயனே எனினும், அதைப் பகை வர்க்குப் பணியாத் தனி அரசாக நிறுவியவன் அவன் மகன் ஆதித்தனே ஆவன்.

அரசிலாற்றுப் போரில் பல்லவர் கையில் தாம் பெற்ற தோல்வியாலான பழியைப் போக்கிக் கொள்வதற்கான காலத்தை எதிர் நோக்கி இருந்தனர் பாண்டியர்; பல்லவர் பேரரசனான நிருபதுங்கன் இறந்து போக, அவன் மகன் அபராஜிதன் அரியணையில் அமர்ந்தான்; விஜயாலயனும் முதுமை அடைந்து விட்டான்; பாண்டியர் ஆட்சி பொறுப் பேற்றிருந்த வரகுணன், தான் வெற்றி கோடற்கு அதுவே ஏற்புடைய காலம் என எண்ணிப் பல்லவன் மீது போர் தொடுத்தான்.

கி.பி. 880-ல், கும்பகோணத்திற்கு வடமேற்கில் ஐந்துகல் தூரத்தில் உள்ள திருப்புறம்பியம் எனும் இடத்தில் பெரும்போர் நடைபெற்றது. பல்லவனுக்குத் துணையாக, விஜயாலய சோழன் மகன் ஆதித் தனும், கங்க அரசன் பிருதிவிபதியும் வந்தமையால், போரில் பிருதிவிபதியைக் கொல்லுமளவு கடும்போர் செய்தும், பாண்டியனால் வெற்றிபெற இயலவில்லை; வரகுணன் தோற்றுவிட்டான். பிருதிவிபதி இறந்து விட்டான் இச்சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, ஆதித்தன், பகை அற்ற சோழத் தனிப் பேரரசை நிலைபெறச் செய்து விட்டான்.

சாளுக்கியரோடும், பாண்டியரோடும் போரிட்டுப் போரிட்டுப் பல்லவர்களும், பல்லவர்களோடும், இலங்கை

அரசர்களோடும் போரிட்டுப் பாண்டியர்களும், வலுவிழந்து போனமையால், தங்கள் இருநாடுகளுக்கும் இடையில் சோழப் பேரரசு கண்ட ஆதித்தனை அடக்க இயலாமல் போயிற்று. தமிழக வரலாற்றின் பொற்காலம் எனப் போற்றப்படும் சிறப்பினுக்கு உரிய சோழப் பேரரசு, இவ்வாறு ஆதித்தனால் தோற்றுவிக்கப் பட்டது.

## வீழ்ச்சி

முதலாம் ஆதித்தனால் தோற்றுவிக்கப்பட்டு; பேரரசன் இராசராசனாலும், அவன் மகன் இராசேந்திரனாலும்,

"கங்கா நதியும் கடாரமும் கைக்கொண்டு
சிங்காதனத்திருந்த செம்பியர்கோன்"

எனப் பாராட்டுமளவு புகழேணியின் உச்சிக்கே கொண்டு செல்லப்பட்ட சோழப் பேரரசின் மறைவு. மூன்றாம் இராசேந்திரன் மறைந்த கி.பி. 1219ஆம் ஆண்டில் ஏற்பட்டு விட்டது. என்றாலும், சோழப் பேரரசின் உண்மையான மறைவு, சோழர் வழிவந்த அதிராசேந்திரன் மறைய, சாளுக்கியர் வழிவந்த முதற்குலோத்துங்கன் ஆட்சிக்கு வந்த கி.பி.1070ஆம் ஆண்டிலேயே ஏற்பட்டு விட்டது என்று கொள்ளலாம்.

அதிராசேந்திரன் மகப்பேறின்றியே மாண்டுபோக, சோழர் அரியணையில் அமர அச்சோழர் குடியில் ஒருவரும் இலராகவே, கீழைச் சாளுக்கிய இராசராச நரேந்திரனுக்கும் சோழர் குலச்செல்வி அம்மங்கை தேவியர்க்கும் பிறந்த குலோத்துங்கன் சோழர் அரியணை அமர்ந்து சோழர்குல ஆட்சிக்கு முற்றுப்புள்ளி இட்டான் எனினும், தாய்வழி உரிமையால், சோழர் அரியணை அவனுக்கும் உரிமையுயுடையது ஆகவே, அவனும், அவன் வழியினரும் மேற்கொண்ட ஆட்சியும் சோழர்குல ஆட்சியே ஆம் :

பேரரசன் இராசராசன், இவன் மகன் இராசேந்திரன் ஆகியோர் ஆட்சிக்குப் பிறகு, சோழர் அரியணை ஏறியவர்கள், அவர்களைப் போல அத்துணைப் பேராற்றல் படைத்தவர்கள் அல்லர்; ஆனால், அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட சோழப் பேரரசோ, குமரி முதல் துங்கபத்திரை வரை பரவிய பேரரசு: குருவித் தலையில் பனங்காய்; சிறுகோட்டில் பெரும்பழம் என்பார்களே: அது போன்ற நிலை; ஆனால் அரியணை ஏறியவர்களோ, தம் ஆற்றல் உணராதவர்கள். அதே நிலையில் பேரரசின் பொறுப்பாளிகள் என்பதால், தம் அண்டை அரசுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டுத் தம் பேரரசின் அழிவிற்குத் தாமே வித்திட்டவராயினர்.

## ஓயாப் போர்கள்

பாண்டியநாட்டில், தாயத்தினரான, பராக்கிரம பாண்டியனுக்கும், குலசேகர பாண்டியனுக்கும், அரசாளும் உரிமை பற்றிப் பகை வளர, குலசேகர பாண்டியன் தம் துணைவேண்ட, அவனுக்கும் அவன் வழியினர்க்கும் துணையாய் நின்று, பராக்கிரம பாண்டியனோடும் அவன் வழியினரோடும் சில காலம் போரிடவும், குலசேகரன் வழியினர், தாம் செய்த நன்றி மறந்துபோக, அதே நிலையில் பராக்கிரம பாண்டியனும், அவன் வழியினரும் தம் துணை வேண்ட, அவர்க்குத் துணையாய் நின்று, குலசேகர பாண்டியனோடும், அவன் வழியினரோடும் சில காலம் போரிடவும், தம் துணை வேண்டியவன் பகைவனுக்குத் துணைவந்தனர் என்பதால் சிங்களவரோடு பகைகொண்டு அவரோடு போராடவும், இரண்டாம் இராசாதிராசன் காலத்தில் தொடங்கி மூன்றாம், இராசேந்திரன் காலம் வரை ஓயாது போராடிப் போராடி, சோழர் பலம் இழந்து போயினர்.

## குறுநிலத்தலைவர்களின் தனி ஆட்சி

சோழப்பேரரசு கண்ட ஆதித்த சோழன் காலம் முதல், சோழப்பேரரசுக்கு அடங்கித் திறைசெலுத்தி வந்த குறு நிலத்தலைவர்கள் பலரும், காலம் செல்லச், செல்ல சோழப் பேரரசின் பலம் குன்றக்குன்ற, அவ்வாட்சிக்கு அடிபணிவது விடுத்துத் தனி அரசு செலுத்தத்தலைப்பட்டனர். இந்நிலை மூன்றாம் குலோத்துங்கன் காலத்திலேயே தொடங்கிவிட்டது. கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த சேரர் இளையினர், திறை செலுத்த மறுத்துக்கிளர்ந்து எழுந்ததும் குலோத்துங்கன் அவர்களை வென்று அழித்ததும், அது போலவே, வடபுலத்தில். சோழ அரசுக்கு அடங்கிய சிற்றரசர் களாய் இருந்த தெலுங்குச் சோழர்கள், திறைதர மறுத்த தோடு நில்லாமல், சோணாட்டுள் புகுந்து, சோணாட்டின் வடபுலத் தலைநகராக விளங்கிய காஞ்சிமா நகரையும் கைப் பற்றிய ஆளத்தொடங்கியதும், குலோத்துங்கன், அவர்களை வென்று துரத்திக் காஞ்சியை மீட்டதும், அதுபோலவே வாரங்கல் பகுதியில் வாழ்ந்த காகதீய கணபதி என்பான், சோழர் ஆட்சிக்கு உரிமையுடையதான வேங்கியைக் கைக் கொண்டதோடு, சோணாட்டின் வடவெல்லையைத் தாக்கித் தொல்லை கொடுத்ததும், குலோத்துங்கன் அவனை வென்று ஓட்டியதும் ஆகிய இந்நிகழ்ச்சிகள், சோழப் பேரரசின் அழிவிற்குக் காரணமாயவித்துரன்றும் நிகழ்ச் சிகளே ஆகும்.

இவ்வாறு எல்லைப்புற நாடுகளில் ஆண்டு கொண்டிருந்த சிற்றரசர்கள் பலரும் சோழநாட்டு ஆட்சிக்கு அடிபணிய மறுத்து எதிர்த்து எழுந்தது ஒரு புறமாக, சோழநாட்டிற்கு உள்ளாகவே, சோழர்படை முதலிகளாகவும், சோழர் ஆட்சிக்கு அடிபணிந்த குறுநிலத் தலைவர்களாகவும் இருந்து வந்தவர்களும் ஆட்சிக்கு அடிபணிய மறுத்துத் தனி அரசு அமைக்கும் முயற்சி மேற்கொள்ளும் நிகழ்ச்சிகளும் தலை எடுக்கலாயின.

மூன்றாம் இராசராசன் காலத்தில், மகதநாட்டு வாணகோவரையர், திருமுனைப்பாடி நாட்டுக்காடவர் குலத்துக் கோப்பெருஞ்சிங்கன் போலும், தண்டத் தலைவர்கள் சோழப்பேரரசுக்கு விரோதமாகத் தமக்குள்ளே உடன்படிக்கை செய்து கொண்டதும், பேரரசுக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்ததும், பாண்டியன் பால் தோற்றுப் புகலிடம்தேடி, வட நாட்டு போசள அரசனை நாடிச் செல்லும் மூன்றாம் இராசராசனைச், சோழர்படை முதலியாகப் பண்டு பணி புரிந்த கோப்பெருஞ்சிங்கன் சிறை பிடித்துச் சேந்த மங்கலம் சிறையில் அடைத்ததும் ஆகிய நிகழ்ச்சிகள், சோணாட்டின் உள்நாட்டுக் கலவரங்களாய்ச் சோழப்பேரரசின் அழிவிற்கு அடிகோலுவன ஆயின.

## வலுவிழந்த சோழர் படை

உள்நாட்டில் எழுந்த இவை போலும் கிளர்ச்சிகளையும் அடக்கி அழிக்க முடியாத அளவு சோழர் படை வலுவிழந்து போனதும், சோழப் பேரரசின் அழிவிற்கு ஒரு காரணமாம். கங்கைக்கரை அரசுகளையும் அழிக்க வல்ல தரைப்படையையும், கடாரமும், ஈழமும் வெல்லவல்ல கடற்படையும் கொண்டிருந்த சோழர்படை மூன்றாம் இராசராசன் காலத்தில் உள்நாட்டுக் கலவரத்தை அடக்கவும், பிறநாட்டுப் படைத் துணை தேடுமளவு சீரழிந்து விட்டது; மேலே கூறிய அரசியல் குழப்பங்கள் நிகழ்ந்தபோது. அவற்றை அடக்க வந்த போசள நாட்டுப் படை, சோணாட்டின் காவல் கருதி, சோணாட்டிலேயே இடமும் பிடித்துக் கொண்டது: தன் நாட்டில், அந்நிய நாட்டுப்படை கால்கொள்ளுமளவு சோழர் படை சீரழிந்து போய்விட்டது; சோழநாட்டின் காவல் கருதி வந்த போசளர், சில நாள் கழிந்த பின்னர், சோழ மன்னனையே எதிர்த்துப் போராடிச் சோணாட்டிற்கு உள்ளாகவே தனி அரசு அமைத்து ஆளவும் தலைப்பட்டு விட்டனர்; திருச்சி மாவட்டத்தில் திருச்சி, திருவரங்கம்

உள்ளிட்ட நிலப்பரப்பு, மூன்றாம் இராசேந்திரன் காலத்தில் போசளர் உடைமை ஆகி விட்டது.

## மூன்றாம் இராசேந்திரன்

சோழப் பேரரசு, மூன்றாம் இராசேந்திரன் காலத்தில், மேலும் நிலைகுலைந்து விட்டது: எல்லைப் புற வேந்தர்களும் பகைவர்களாகி விட்டனர்: உள்நாட்டுக் குறுநிலத் தலைவர்களும் அரசுக்கு எதிராகப் போர்க்கொடி ஏந்தி விட்டனர். துணைக்கு வந்த போசளரும் துரோகம் செய்யத் தலைப்பட்டு விட்டனர்; நிலைமை உணர்ந்த இராசேந்திரன் தம் முன்னோர் அரும்பாடுபட்டுக் கொண்ட காஞ்சி நாட்டைத், தெலுங்குச் சோழ கண்ட கோபாலனுக்கு அளித்து அவன் துணை நாடவேண்டியவனானான். சரிந்து விழும் சோழப் பேரரசைக் கண்ட கோபாலனாலும் காக்க இயலாமல் போய்விட்டது; இராசேந்திரன் வாணாள் இறுதியில் சோணாட்டின் மீது படை எடுத்து வந்த, முதல் சடையவர்மன் சுந்தர பாண்டியன், சோழனுக்குப் பகைவனாகவும், நண்பர்களாகவும் சோணாட்டில் இருந்த அனைவரையும் அழித்தான் போசளனும் கொல்லப்பட்டான் கண்ட கோபாலனும் கொல்லப்பட்டான். இராசேந்திரன், பாண்டியர்க்குத் திறை செலுத்தும் சிற்றரசனாகச் சீரழிக்கப் பட்டான். பல நாட்டு மன்னர்களும் பணிந்து நின்று திறை செலுத்தப் பேரரசு நடத்திய சோழப் பேரரசு. இறுதியில் பாண்டியர்க்குத் திறை செலுத்தும் சிற்றரசாகிச்சீர்குலைந்து விட்டது. அவ்வாறு சீர்குலைந்த இராசேந்திரனுக்கு மகப் பேறும் இல்லாது போகவே, விஜயாலயன் அமைத்த சோழப் பேரரசு; மூன்றாம் இராசேந்திரனோடு இல்லாமல் போய் விட்டது.

# ஈ. சோழர்—பாண்டியர் உறவு

செந்தமிழ் நாட்டின் சிறப்பிற்குக் காரணமாயிருந்தவர், அந்நாடாண்ட மூவேந்தர்களாம் சேர, சோழ, பாண்டியர் களே என்றாலும், அந்நாட்டின் சீரழிவிக்கும் அவர்களே காரணமாவர். ஒரு தாய் வயிற்று மக்கள், ஒரு மொழி பேசு வோர் எனக் கூறப்படினும், அவர்கள் ஒற்றுமையோடு உலகாண்டவர் அல்லர். மாறாக, ஒருவரோடொருவர் பகை கொண்டு ஓயாது போர் புரிந்தே வந்துள்ளனர். இந்நிலை சங்க காலத்திலேயே உருவெடுத்து விட்டது சோழர் குலச் சிறப்பிற்குக் காரணமாய் விளங்கிய கரிகாற் பெருவளத் தான் சேரரையும், பாண்டியரையும் வென்று அழித்தான். அந்நிகழ்ச்சியை,

"இரும்பனைப் போந்தைத் தோடும், கருஞ்சினை
அரவாய் வேம்பின் அங்குழைத் தெரியலும்
ஓங்கிரும் சென்னி மேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரும் ஒரு களத்து அவிய."

என விளக்குவார் முடத்தாமக் கண்ணியார்,

அதுபோலவே, பாண்டியருள் தலைசிறந்தோனாகிய தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், சேரரையும் சோழரையும் அழித்தான். அதை,

"ஆவங்கானத்து அகன்தலை சிவப்ப
சேரல் செம்பியன், சினங்கெழு திதியன்
......... ........ ........... 
எழுவர் நல்வலம் அடங்க."

எனப் பாராட்டுவார் நக்கீரனார்.

சோழர்— பாண்டியர்க்கிடையே நிலவிய இப்பகை உணர்ச்சி சங்க காலத்தோடு நின்று விடவில்லை. அது தொடர் நிகழ்ச்சியாகவே ஆகிவிட்டது. கி. பி. 880-ல் கும்பகோணத்திற்கு அணித்தாக உள்ள திருப்புறம்பியத்தில் நடைபெற்ற போர். பல்லவர்க்கும் பாண்டியர்க்கும் இடையே ஆன போரே ஆயினும், அதில் சோழன் பங்கு கொள்ளாது நின்றனல்லன். பல்லவ அபராஜித வர்மனுக்கும் பாண்டியன் வரகுணனுக்கும் நடைபெற்ற போரில், சோழர் குலத்தவனான முதலாம் ஆதித்தன் பல்லவர்க்குத் துணையாய்ப் பாண்டியனோடு போரிட்டு பாண்டியனைத் தோல்வி கண்டு தன் குலப் பகையைத் தீர்த்துக் கொண்டான்.

## முதற் பராந்தகன்

ஆதித்தனுக்குப் பிறகு சோழர் அரியணை ஏறிய முதற் பராந்தகன் ஆற்றிய முதல் அரசியல் பணி, மதுரை மீது படை எடுத்து வென்றதே ஆம். பாண்டிய மன்னனாக அப்போது விளங்கிய மூன்றாம் இராசசிம்மனை வென்று "மதுரை கொண்ட கோப்பரகேசரி" எனும் புகழ் சூட்டிக் கொண்டான். அத்தோல்வியாலாம் பழியைத் துடைத்துக் கொள்வான் வேண்டி இலங்கை வேந்தன் ஐந்தாம் காசிபன் துணை கொண்டு வந்து தாக்கிய இராசசிம்மனை மீண்டும் தோற்கடித்து ஓடி ஒளிய இலங்கைக்கே துரத்தினான் பராந்தகன்.

தோல்வி கண்டும் துவண்டு விடாது, சோழன் கைப்பட்ட பாண்டி நாட்டை மீண்டும் அடையக் காலம் நோக்கிக் காத்

திருந்தான் பாண்டியன் இராசசிம்மன். அந்நிலையில் பராந்தகன் வடக்கே வந்து தாக்கிய இராட்டிரகூடரோடு போரிட வேண்டி நேரவே அதுவே ஏற்புடைய காலமாக இழந்த தன் நாட்டை மீண்டும் தனதாக்கிக் கொண்டான்.

## சுந்தர சோழன்

சோழர் ஆட்சிப் பொறுப்பு சுந்தர சோழன் என அழைக்கப்படும் இரண்டாம் பராந்தகன்பால் வந்துற்றதும், சோழர் பாண்டியர் போர் மீண்டும் தலை எடுத்துக் கொண்டது. அப்போது ஆட்சியில் இருந்த வீரபாண்டியனை வென்று பாண்டியர் தலைநகராம் மதுரையை மீண்டும் சோழர் உடைமை ஆக்கி "மதுராந்தக சுந்தர சோழன்" எனும் பெயர் சூட்டிக் கொண்டான். இராசசிம்மனைப் போலவே வீர பாண்டியனும் இலங்கை அரசன் துணையை நாடினான். அக்காலை இலங்கை ஆண்டிருந்த நான்காம் மகிந்தன் படைத் துணை அளிக்கவே சோழனை எதிர்த்தான் இப் போரில் சோழர் படைக்குத் தலைமை தாங்கி வந்த சுந்தர சோழன் மகன் ஆதித்த கரிகாலன், வீர பாண்டிய னைக் கொன்று "வீரபாண்டியன் தலை கொண்ட கோப்பர கேசரி" எனும் புகழ் கொண்டான்.

## பேரரசன் இராசராசன்

முதல் இராசராசன் காலத்தில் சோணாட்டு அரசியல் தூதுவனைச் சிறையில் இட்டு இழிவுபடுத்திய சேர நாட்டான்மீது படையெடுத்துச் சென்ற சோழர் படையைத் தடுத்து நிறுத்திய பாண்டிய அமர புயங்கன், சோழர் பெரும் படையால் வென்று துரத்தப்பட்டான். இவ்வெற்றிக்கு அறிகுறியாக இராசராசன், "பாண்டிய குலாசனி" எனும் பட்டப் பெயர் பூண்டு பாண்டி நாட்டிற்கு ராசராச மண்டலம் எனும்பெயரைச் சூட்டினான்.

## முதலாம் இராசேந்திரன்

இராசராசனுக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பேற்ற அவன் மகன் முதலாம் இராசேந்திரன், பாண்டிய நாட்டின் மீது சோழ அரசுக்குள்ள உரிமையை நிலைநாட்டுவான் வேண்டி, மதுரை மாநகரில் ஓர் அரண்மனை அமைத்து, ஆங்குத் தன் மகன் சுந்தரசோழனுக்குச், சடையவர்மன் சுந்தரசோழ பாண்டியன் எனும் பட்டத்துடன் முடிசூட்டிப் பாண்டிய நாட்டு ஆட்சிப் பொறுப்பை அவன்பால் ஒப்படைத்தான். இவ்வாறு பாண்டிய நாட்டைச் சுந்தர சோழபாண்டியன் ஆட்சிபுரிந்து வருங்காலை தம் நாட்டைக் கைப்பற்றித் தாமே ஆளவேண்டும் என்ற எண்ணம் வலுப் பெற்ற பாண்டிய மன்னர்களாகிய மானாபரணன், வீர கேரளன், சுந்தரபாண்டியன் என்ற மூவரும் ஒன்றுபட்டு, சுந்தரசோழ பாண்டியனுக்கு எதிராகக் கிளர்ந்து எழுந் தனர். அஃதறிந்த இராசேந்திரன், தன் மூத்த மகன் இராசாதிராசனைப் பெரும் படையுடன் பாண்டி நாட்டிற்கு அனுப்பினான். இராசாதிராசனும், மானாபரணனையும், வீரகேரளனையும் வென்று, சுந்தரபாண்டியனைக் காடு புகுந்து ஒளியும் வண்ணம் துரத்திக் குழப்பத்தை அடக்கி மீண்டான்.

## வீரராசேந்திரன்

வீரராசேந்திரனும், தன் தந்தை வழியைப் பின்பற்றி, தன் மகன் கங்கைகொண்ட சோழன் என்பவனைப் பாண்டிய நாட்டில் அரசப் பிரதிநிதியாக அமர்த்தி, சோழ பாண்டியன் எனும் பெயர் சூட்டியிருந்தான். அக்காலை, முதலாம் இராசேந்திரன் காலத்தில் நிகழ்ந்தது போலவே, பாண்டியர் வழிவந்த வீரகேசரி என்பான், தன் அரசுரிமை யைப் பெறுவான் வேண்டிச் சோழ பாண்டியனை எதிர்த் துக் குழப்பம் விளைவிக்க, வீரராசேந்திரன் பாண்டிய நாடு புகுந்து, வீரகேசரியைக் கொன்று அரசியல் கலவரத்தை அடக்கினான்.

வீரராசேந்திரனுக்குப் பிறகு, சோழர் அரியணையில் அமர்ந்த அவன் மகன் அதிராசேந்திரன், சில திங்களே அரசாண்டு நோய்வாய்ப்பட்டு இறந்து போகவே, சோணாட்டில் பெருங்குழப்பம் உண்டாயிற்று. பாண்டிய நாட்டில் இருந்து ஆளத்தக்க சோழரும் இலராயினர்: இழந்த தம் பாண்டிய அரசை எவ்வாறாயினும் மீண்டும் பெற்று ஆளவேண்டும் எனும் ஆர்வம் உந்த அதற்காம் காலத்தை எதிர் நோக்கியிருந்த பாண்டியர்க்கு இது ஏற்புடைய காலம் ஆயிற்று: பாண்டியர் வழிவந்த ஐந்து அரசர்கள், பாண்டியநாட்டை ஐந்து பிரிவாகப் பிரித்துக்கொண்டு ஆளத் தொடங்கி விட்டனர். இந்நிலை கி. பி. 1081 வரை நிலவியது.

## முதற்குலோத்துங்கன்

சோழ அரியணையில் முதற்குலோத்துங்கன் அமர்ந்தான். மேலைச் சளுக்கியரோடு போராடி வெற்றி காணும் வரை, பாண்டியநாட்டின் மீது கருத்துச் செலுத்த அவனாலும் முடியவில்லை; வடக்கே வெற்றி பெற்றதும், பாண்டியநாட்டின் மீது போர் தொடுத்தான்; ஆண்டிருந்த பாண்டியர் ஐவரும், தோற்று ஓடிவிட்டனர். குலோத்துங்கன் வாகை சூடினான் என்றாலும், தம் முன்னோர்போல், பாண்டியநாட்டு ஆட்சிப்பொறுப்பினைச் சோழர் குலச் சிற்றரசன் ஒருவன்பால் ஒப்படைக்காது, ஆண்டுதோறும் தனக்குத் திறை தருமாறு பணித்து, பாண்டிய அரியணைக்கு உரியவன்பால் ஆட்சிப்பொறுப்பை ஒப்படைத்துவிட்டான்.

## இரண்டாம் இராசாதிராசன்

முதற்குலோத்துங்கன் காலம் முதல், இரண்டாம் இராசாதிராசன் ஆட்சித் தொடக்ககாலம் (கி. பி. 1163) வரை, சோழர் பாண்டியர் உறவு பற்றி எதுவும் தெரிந்திலது. இரண்டாம் இராசாதிராசன் ஆட்சிக்காலத்தில் பாண்டிய நாட்டில், பராக்கிரம பாண்டியனுக்கும், குலசேகரப்

பாண்டியனுக்கும் அரசாளும் உரிமை பற்றிப் பகைமை உண்டாயிற்று. பராக்கிரம பாண்டியன், இலங்கை வேந்தன் பராக்கிரபாகுவின் துணையை நாடினான். இலங்கைப் படைத்துணை வருவதற்குள், குலசேகர பாண்டியன், மதுரையைக் கைக்கொண்டு, பராக்கிரமபாண்டியனையும் அவன் சுற்றத்தினரையும் கொன்றுவிட்டான். காலங்கடந்து வந்த இலங்கைப்படை, குலசேகரனைவென்று துரத்திவிட்டு, மலைநாட்டில் ஒளிந்துகொண்டிருந்த பராக்கிரம பாண்டியன் மகன் வீரபாண்டியனைப் பாண்டியர் அரியணையில் அமர்த்தியது. சில காலம் கழித்துக் குலசேகர பாண்டியன் பெரும்படை திரட்டி வந்து, இலங்கைப் படையைவென்று, வீரபாண்டியனைத் துரத்திவிட்டுத்தானே அரியணையில் அமர்ந்தான். எனினும், புதுப்படை வரவால் பலம் பெற்ற இலங்கைப்படை குலசேகரனை வென்று துரத்திவிட்டு, வீரபாண்டியனைப் பண்டேபோல் அரசனாக்கிற்று.

இலங்கைப் படையைத் தனித்து நின்று வெற்றிகோடல் இயலாது என்பதை உணர்ந்த குலசேகரன், இராசாதிராசனின் துணையை நாடினான். சோழர்படை, பாண்டிய நாட்டுள் புகுந்து, சிங்களப் படைகளைவென்று ஓட்டிவிட்டு, அப்படைத்தலைவர் இருவர் தலைகளையும் கொய்துவந்து, மதுரைக்கோட்டை வாயிலில் வைத்தது. குலசேகரப் பாண்டியன் சோழர் துணையால் பாண்டிய நாட்டின் மன்னனானான்.

பாண்டிய நாட்டில், சோழர் படையால், தன் படைக்கு நேர்ந்த தோல்வி கண்டு வருந்திய இலங்கை மன்னன், குலசேகரப் பாண்டியனையும், அவனுக்குத் துணை நிற்கும் சோழனையும் எவ்வாறாயினும் வெற்றிகொள்ள வேண்டும் எனத் துணிந்தான். அதற்கான படைப்பெருக்கத்திற்கு வழி வகுக்கலாயினான். அஃதறிந்தான் இராசாதிராசசோழன், ஈழநாட்டு அரசுரிமை காரணமாகப் பராக்கிரம பாகுவோடு

பகைகொண்டு, சோழர் துணை நாடி வந்திருக்கும் சீவல்லபன் தலைமை தாங்க, சோழர்படை இலங்கை புகுந்து இலங்கைப் படைகளை அழித்து, எண்ணிலாப் பெரும் பொருளைக் கொள்ளை கொண்டு தமிழகம் மீண்டது.

இலங்கை வேந்தன் பராக்கிரமபாகுவின் சிந்தனை ஓட்டம் வேறு வகையில் திரும்பியது. ஈழநாட்டு அழிவிற்குத் தான் வீரபாண்டியனுக்குத் துணை போனதே காரணம் என உணர்ந்தான். உடனே அதை மறந்து, குலசேகரனைப் பாண்டியனோடு நட்புறவு கொண்டான். மணவுறவும் உண்டாயிற்று; குலசேகரப் பாண்டியன், சோழர் செய்த நன்மைகளையெல்லாம் மறந்தான். சோழர்படைத் தலைவர் களை நாட்டை விட்டு வெளியேற்றினான். குலசேகரப் பாண்டியனின் நன்றிகெட்ட செயல் கண்டு கொதித்து எழுந் தான் இராசாதிராச சோழன்; சோழர் படை பாண்டிய நாடு புகுந்தது. குலசேகரப் பாண்டியனைத் தலைநகரிலிருந்து துரத்திவிட்டு வீரபாண்டியனை அரியணையில் அமர்த்திப் புகழ் கொண்டது.

## மூன்றாம் குலோத்துங்கன்

இரண்டாம் இராசாதிராசனுக்குப் பின், மூன்றாம் குலோத்துங்கன் சோழர் அரியணை ஏறியதும், குலசேகரப் பாண்டியன் மகன், விக்கிரமபாண்டியன், இலங்கைப்படை ஆற்றலினும், சோழர்படை ஆற்றலே பெரிதாம்; அச்சோழர் துணை இருந்தாலல்லது, பாண்டியர் அரியணை கிடைக்காது என்ற உண்மை உணர்ந்து குலோத்துங்கனிடம் அடைக்கலம் புகுந்தான்; அதே சமயம், சோழர்படைத் துணையால் பாண்டியநாட்டு ஆட்சி உரிமைபெற்ற வீரபாண்டியனும், சோழர் செய்த நன்றியை மறந்து, சோழர்களுக்குப் பகைவனாய், இலங்கையர்க்கு நண்பனாகிவிட்டான். அது பொறாத குலோத்துங்கன், பாண்டிய நாடு புகுந்து வீர

பாண்டியன் படையையும், அவனுக்குத் துணை வந்த இலங்கையர் படையையும் அழித்து, பாண்டிய நாட்டு அரசுரிமையை விக்கிரம பாண்டியனுக்கு அளித்து மதுரையில் வெற்றித்தூண் நாட்டி மீண்டான்.

நாடிழந்த வீரபாண்டியன், இலங்கைப் படையை நம்பிப் பயனில்லை; சேரன் படைத்துணை பெருந்துணையாம் என எண்ணினான் போலும்; மலை நாடு சென்று சேரனிடம் படைத்துணை வேண்டினான். அவன் அது அளிக்கவே, அப் படை கொண்டு மதுரையைத் தாக்கினான். வீரபாண்டியனின் இம்முயற்சிகளை முன்கூட்டியே அறிந்திருந்த குலோத்துங்கன், பெரும் படையோடு வந்து சேர, பாண்டியர் இரு படைகளை எதிர்த்துப் போரிட்டு, இரு படைகளையும் ஒரு சேர அழித்தான். பாண்டியர்க்கு வழி வழி உரிமை உடையதான மணிமுடி குலோத்துங்கன் கையகப்பட்டது. வீர பாண்டியனின் அரசமாதேவியும் சிறை வைக்கப்பட்டாள். குலோத்துங்கனைப் பகைத்துக் கொண்டது பெரிய பிழையாகும் என்பதை உணர்ந்த மலை நாட்டு மன்னன், வீரபாண்டியனையும், அவன் இரு மக்களையும் உடனழைத்துக் கொண்டு சோணாடு வந்து குலோத்துங்கனிடம் அடைக்கலம் புகுந்தான். பிழை பொறுக்கும் பேருள்ளம் வாய்ந்த குலோத்துங்கன், அவர் செய்தன எல்லாம் மறந்து, வீர பாண்டியனுக்குப், பாண்டி நாட்டின் ஒரு பகுதியை உரிமையாக்கினான்.

குலோத்துங்கன் உதவியால் அரசு பெற்ற விக்கிரம பாண்டியன் இறந்த பின்னர், ஆட்சிக்கு வந்த அவன் மகன் சடையவர்மன் குலசேகர பாண்டியன், சோழர் செய்த நன்றியை மறந்து, குலோத்துங்கனுக்கு எதிராக அடாத செயல்கள் புரியத் தொடங்கினான். அது கண்டு பொறாத குலோத்துங்கன், பாண்டிய நாட்டின் மீது பாய்ந்து, குலசேகரப் பாண்டியனைத் தோற்றோடச் செய்து விட்டு

அரண்மனையை அறவே அழித்து, ஆங்கேயே சோழ பாண்டியன் எனும் பட்டமும் சூட்டிக் கொண்டு வீரமா முடியும் சூடிக் கொண்டான்.

## மூன்றாம் இராசராசன்

பாண்டிய நாட்டு மன்னனாக 1216ல் மாறவர்மன் சுந்தர பாண்டியன் முடி சூட்டப் பெற்றான். அறிவு, ஆற்றல்களில் சிறந்த அவன், தன் பாண்டிய நாடு பல்லாண்டு காலமாக, சோழர் தாக்குதலுக்கு ஆளாகி அழிந்ததை எண்ணி எண்ணித் துயர் உற்றான்; அதற்கு ஈடாகப் பழிக்குப் பழி வாங்கத் துடித்துக் கொண்டிருந்தான்! அதற்கு ஏற்ற காலமும் வாய்த்துவிட்டது. சோணாட்டில் மூன்றாம் குலோத்துங்கன் இறக்க, அவன் மகன், மூன்றாம் இராசராசன் முடி புனைந்தான்; சோழர் குல முன்னோர்கள் பால் அமைந்து கிடந்த ஆண்மையும் அறிவும் அறவே இல்லாதவன் இவன். அஃது அறிந்து கொண்டான் சுந்தர பாண்டியன். உடனே சோணாட்டுள் புகுந்து, இராச ராசனை வெற்றி கொண்டு, சோணாட்டு நாடு நகரங்களை அழித்தும், மாட மாளிகைகளை இடித்தும், பெரும் பாழ் செய்தான்.

தஞ்சையும் உறந்தையும் தரை மட்டமாயின. தோற்ற இராசராசன் உரிமைச் சுற்றத்துடன் எங்கோ ஓடி ஒளிந்து கொண்டான். வெற்றி கொண்ட சுந்தர பாண்டியன், சோழர் தலைநகரங்களுள் ஒன்றான, முடிகொண்ட சோழ புரம் எனப்படும் பழையாறை நகரில் உள்ள அரண்மனை யில் வீராபிடேகம் செய்து கொண்டான்; பின்னர் பாண்டிய நாடு திரும்பும்போது, பொன்னமராவதியில் தங்கி இருந்து, தோற்றுத் தலைமறைவாகிவிட்ட இராசராசனை அழைத்து, அவனோடு சந்து செய்து கொண்டு சோணாட்டு ஆட்சி உரிமையை அவனுக்கே அளித்து விட்டான்.

பாண்டியனுக்குத் திறை செலுத்திக் கொண்டு, அவனுக்கு அடங்கிய அரசனாய் ஆட்சி புரிவதை வெறுத்தான் இராசராசன்; பாண்டியன் ஏவலைப் புறக்கணித்தான் அவனுக்குத் திறை தர மறுத்தான். அஃது அறிந்த சுந்தரப் பாண்டியன் சோழ நாட்டின் மேல் படை எடுத்துச் சென்று, இராசராசனை வென்று துரத்தினான், தோற்ற இராசராசன் தன் நண்பனாகிய குந்தள நாட்டு அரசனிடம் படைத் துணை பெறுவான் வேண்டி வட நாடு நோக்கிச் செல்லும் வழியில் காடவர் குலத்தவனாகிய கோப்பெருஞ் சிங்கன் என்பான், இராசராசனைக் கைப்பற்றிச் சேந்தமங்கலம் சிறையில் அடைத்துவிட்டான். அஃது அறிந்த போசள நாட்டு மன்னனான வீர நரசிம்மன், படையுடன் வந்து, கோப்பெருஞ்சிங்கனை வென்று, இராசராசனைச் சிறை மீட்டு, உரிய சோணாட்டை அளித்து, ஆண்டு வருமாறு செய்தான்.

## மூன்றாம் இராசேந்திரன்

மூன்றாம் இராசராசனுக்குப் பிறகு, அவன் மகன் மூன்றாம் இராசேந்திரன் ஆட்சிக்கு வந்தான். தன் தந்தை காலத்தில், பாண்டியர் இருமுறை படையெடுத்து வந்து சோழ நாட்டுக்கு விளைவித்த கேடுகளை எண்ணி எண்ணிக் கலங்கிய இராசேந்திரன், அதற்குப் பாண்டிய நாட்டைப்பழி வாங்கத் துணிந்தான்: பாண்டியர் அரியணையில் அப்போது அமர்ந்த, மாறவர்மன் சுந்தர பாண்டியன், ஆற்றலும் வீரமும் படைத்தவன் அல்லன்; பாண்டியனின் இக்குறைபாட்டினை அறிந்து கொண்ட இராசேந்திரன், பாண்டிய நாட்டைப் படையால் அழித்து, மாறவர்மன் சுந்தர பாண்டியனை வென்று, அடிமை கொண்டு தனக்குத் திறைதரப் பணித்துவிட்டு, எண்ணிய எண்ணியாங்கு முடிக்கும் திண்ணியனாய்ப் புகழ் கொண்டான்.

ஆனால், காலம் மாறிவிட்டது: இராசேந்திரன் ஆட்சி இறுதியில். பாண்டியர் அரியணையில் முதலாம் சடைய வாமன் சுந்தர பாண்டியன் அமர்ந்தான். பாண்டிய நாட்டின் புகழைப் பண்டே போல் உயர்த்தத் துடிக்கும் உள்ளம் வாய்க்கப் பெற்றவன். அதனால் மெல்ல மெல்ல தன் படைபலத்தைப் பெருக்கிக் கொண்டு, கி.பி. 1257ல் சோழ நாட்டின் மீது படையெடுத்துச் சென்று, இராசேந்திரனை வென்று, அவனைப் பாண்டியர்க்குத் திறை செலுத்தும் சிற்றரசனாக்கிச் சீர் கொண்டான்.

இவ்வாறு, கடைச் சங்ககாலத்தில்' கரிகாலன் தொடங்கி வைத்த சோழர்—பாண்டியர் போர் — ஆயிரம் ஆண்டுப் போராய்ப் பெருகி, கடைசியில், மூன்றாம் இராசேந்திரன் காலத்தில் சோழர் அழிவோடு முடிவுற்றது.

# உ. சோழர் - மேலைச் சாளுக்கியர் உறவு

## முதலாம் இராசராசன்

முதலாம் இராசராசன் சோழர் அரியணையில் வீற்றிருந்த சமயம், மேலைச் சாளுக்கிய சத்தியாசிரயன் என்பான், இரட்டபாடி ஏழரை இலக்க நாட்டிற்கு அரசனாக விளங்கினான். ஒரு காலத்தில், மேலைச் சாளுக்கியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த நுளம்பபாடியை இராசராசன் சோழர் ஆட்சிக்கு உள்ளாக்கிக் கொண்டமையால் சத்தியாசிரயன், சோழரைப் பகைவராகக் கொண்டான். அதனால், இராசராசன் மகன் இராசேந்திரன் தலைமையில் சென்ற சோழர்படை சத்தியாசிரயனை வெற்றிகொண்டது; கடல் போன்ற சோழர் பெரும்படை கண்டு சத்தியாசிரயன் போர்க்களத்தை விட்டே ஓடி விட்டான் எனக் கூறுகின்றன, திருவாலங்காட்டுச் செப்பேடுகள். அப்போரில் கொண்ட பொன்னால், தஞ்சைப் பெரிய கோயில் பெருமானுக்குப் பொற்பூக்கள் வழங்கப்பட்டன: இப்போரின் விளைவாக துங்கபத்திரை ஆறு, சோழ நாட்டின் வடவெல்லையாகு மாறு சோணாடு பெருத்து விட்டது.

## முதலாம் இராசேந்திரன்

கங்கை கொண்ட சோழன் எனப்படும் முதலாம் இராசேந்திர சோழன் ஆட்சிக்கு வந்த எட்டாவது ஆண்டில்

மேலைச் சாளுக்கிய சயசிம்மன் என்பவன், சோழர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த வடபுல நாடுகளின் ஒரு பகுதியைக் கைப்பற்றிக் கொண்டான். அஃதறிந்த இராசேந்திரன் பெரும் படையுடன் வடநாடு சென்றான். முசங்கியில் கடும் போர் நடைபெற்றது. இறுதியில் வாகை சூடிய சோழர்படை இழந்த நாடுகளை மீட்டுக் கொண்டதோடு, பெரும் பொருட்கு வியலையும் கொள்ளை கொண்டு நாடு திரும்பியது.

கி. பி. 1042-ல் மேலைச் சாளுக்கிய சயசிம்மன் இறக்க, ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்ட அவன் மகன் சோமேசுவரன் எனப்படும் ஆகவமல்லன், துங்கபத்திரை ஆற்றுக்குத் தெற்கே, சோழர்க்கு உரியதாக இருந்த சில நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டான். அஃதறிந்த இராசேந்திரன், தன் மகன் இராசாதிராசனை, மேலைச் சாளுக்கியரை வென்று அடக்கி வருமாறு பணித்தான் அவ்வாறே, படை கொண்டு சென்ற இரசாதிராசன் சாளுக்கிய படைத்தலைவர் பலரைக் கொன்றும், ஆகவ மல்லன் மக்களைக் காடு புக ஓட்டியும், கொள்ளிப்பாக் கையை எரியூட்டியும், ஆகவமல்லனின் கொற்றம் குலையச் செய்து வெற்றித் திருமகளை மணந்து சோணாடு திரும்பினான்.

## முதலாம் இராசாதிராசன்

மேலைச் சாளுக்கியர்களை முற்றிலும் வென்று, அவர்களைத் தமக்கு அடங்கிய குறுநிலத் தலைவராகச் செய்தல் வேண்டும் என்பதே சோழர்களின் நினைவாதலின் முதலாம் இரசாதிராசன், சோழர் அரியணை ஏறிய பின்னர் கி. பி. 1046ல், சாளுக்கியர் மீது இரண்டாவது முறையாகப் போர் தொடுத்துச் சென்று, கண்டர் தினகரன் உள்ளிட்ட பல படைத் தலைவர்களை வென்று, கம்பிலி நகரத்தில் இருந்த சாளுக்கிய மாளிகையைத் தகர்த்து எறிந்துவிட்டு,

ஆங்கு வெற்றித் தூண் ஒன்றும் நாட்டிவிட்டு நாடு திரும்பினான்.

வடபுலத்து
இரு காலாவதும் பெருபடை நடத்திக்
கண்டர் தினகரன் நாரணன் கணவதி
வண்டலர் தெரியல் மதுசூதனன் என்று
எனைப் பல வரையரை முனைவயின் துரத்தி
வம்பலர் தரும்பொழில் கம்பிலி நகருள்
சாளுக்கியர் மாளிகை தகர்ப்பித்து..."

என அவன் மெய்க்கீர்த்தி கூறுவது காண்க.

நடைபெற்று முடிந்த போரில் சாளுக்கியர் படையின் ஒரு பகுதி மட்டுமே அழிவுற்றது; பெரும் பகுதி படையும், ஆகவமல்லனும் அழிவுற்றிலர் ஆகவே, அவர்களை அறவே அழிக்கும் எண்ணத்தில் கி. பி. 1048ல் இராசாதிராசன், மீண்டும் குந்தள நாடு நோக்கிச் சென்றான். கிருஷ்ணை ஆற்றங்கரையில் பூண்டூரில் நடைபெற்ற போரில், சாளுக்கிய படைத்தலைவர் பலரைக் கொன்றான்! எண்ணற்றவர் சிறை பிடிக்கப்பட்டனர்; மாளிகையை எரியூட்டி, வேங்கை பொறித்த வெற்றித் தூண் நாட்டினான் சாளுக்கியர் பேராறுகளாம், துங்க பத்திரை, கிருஷ்ணை, பீமா ஆறுகளில்தன் போர்க்களிறுகளைக் குளிப்பாட்டினான்.

ஆகவ மல்லன் ஒற்றர் சிலரைப் பிடித்து, ஆகவமல்லன் எவ்வாறு புறங்காட்டி ஓடினான் என்பதை, அவர்கள் மார்பில் எழுதி ஆகவ மல்லன் பால் போக்கினான். அது பொறாது, ஆகவமல்லன் வந்து எதிர்க்க, அப்போரிலும், இராசாதிராசனே வெற்றி கொண்டு, சாளுக்கியர் தலைநகராம் கல்யாணபுரத்தையும் கைக் கொண்டு, ஆங்கேயே வீராபிடேகமும் செய்து கொண்டான். அம்மட்டோ, அப்போர் வெற்றியின் நினைவாக, அக்

கல்யாணபுரத்திலிருந்து துவாரபாலர் படிமம் ஒன்றைக் கொண்டு வந்தான், "ஸ்வஸ்தி ஸ்ரீ உடையார் ஸ்ரீ விஜய ராஜேந்திர தேவர் கல்யாணபுரம் எறிந்து கொடு வந்தது வார பாலர்" என்ற வரிகள் அப்படிமத்தில் இன்றும் காணப்படும்.

இராசாதி ராசன் பெற்ற இவ்வெற்றிகளைக்.

"கம்பிலிச் சயத் தம்பம் நட்டதும்
கடியரன் கொள் கல்யாணர் கட்டறக்
கிம்புரிப் பணைக் கிரியுகைத்தவன்
கிரிகள் எட்டினும் புலி பொறித்ததும்..."

எனக் கலிங்கத்துப் பரணியும்,

"மும்மடி போய்க் கல்யாணி
செற்ற தனியாண்மைச் சேவகனும்"

என விக்கிரம சோழன் உலாவும் பாராட்டி உள்ளன.

கல்யாணபுரம் கொண்டும் மனம் நிறைவு பெறாத இராசாதிராசன், கி. பி. 1054ல், மீண்டும் ஆகவமல்லனோடு போர் தொடுத்தான். இம்முறைப் படையெடுப்பில், அவன் தம்பி இரண்டாம் இராசேந்திரனும் உடன் சென்றான். கிருஷ்ணை ஆற்றங்கரைக் கொப்பத்தில் போர் நடைபெற்றது. படை முழுமையும் போரில் ஈடுபடுத்துவது நல்ல போர் முறையாகாது என்பதால், படையின் ஒரு பகுதியைத், தம்பி இராசேந்திரனோடு பாசறையிலேயே நிறுத்தி விட்டு, இராசாதிராசன் போர்க்களம் புரிந்தான். போரில் வெற்றித் திருமகள் தன்னை அணுகும் நிலையில், பகைவன் அம்பொன்றிற்கு இலக்காகி, இராசாதிராசன், ஊர்ந்து சென்ற யானை மேல் இருந்தவாறே உயிர் துறந்தான்.

செய்தி கேட்டு, இராசேந்திரன் போர்க்களம் புகுந்து ஆகவ மல்லன் படைகளையும், படைத்தலைவர்களையும் அறவே அழித்து விட்டான்; எனினும் ஆகவமல்லன் எவ்வாறோ தப்பித்துக் கொண்டான். சாளுக்கியர் விட்டுச் சென்ற எண்ணிலாக் களிற்றுப் படையோடும், பிறவற்றோடும், தலைநகர் வந்து சேர்ந்தான் இராசேந்திரன் இப்போர்களின் பயனாய், "கல்யாணபுரமும் கொல்லபுரமும் எறிந்து யானை மேல் துஞ்சின உடையார் விஜயராஜேந்திர தேவர்" என்ற புகழ் இராசாதிராசனுக்கு கிடைத்தது ஒழிய, சாளுக்கியரை அறவே அழித்து விட்டனர் என்ற புகழ் சோழர்க்குக் கிடைத்திலது.

## இரண்டாம் இராசேந்திரன்

கொப்பத்துப் போரில், சோழப் பேரரசன் இராசாதிராசன் உயிரிழந்து போக, அப்போர்க் களத்திலேயே சோழப் பேரரசனாக முடி சூடிக் கொண்டு,

"ஒரு களிற்றின்மேல் வருகளிற்றை யொத்து
உலகுயக் கோளப் பொருது கொப்பையில்
பொருகளத்திலே முடிகவித்தவன்"

எனப் புகழ் கொண்ட இரண்டாம் இராசேந்திரன், தன் தமையன் உயிர் போக்கிய ஆகவமல்லனை அழிக்க வேண்டுவது தன் குலக் கடனாகும் எனக் கருதியிருந்தான். அதேபோல், ஆகவமல்லனும், கொப்பத்துப் போரில் பெற்ற தோல்வியால் ஆன அவமானத்தைத் துடைத்துக் கொள்வதாயின், சோழர்களை முறியடித்தாக வேண்டும் என்ற முடிவோடிருந்தான்.

அதன் பயனாய்க் கிருஷ்ணை ஆற்றங்கரை முடக்காற்றில் கடும் போர் நடைபெற்றது. கொப்பத்துப் போரில்தான் உடன் செல்லாமையினாலேயே தன் தமையன்

உயிர் இழக்கநேர்ந்தது என்பதை உணர்ந்திருந்தமையால், இம்முறை, இராசேந்திரன், தன் உடன் பிறப்புக்களாகிய இராசமகேந்திரன், வீர ராசேந்திரன் ஆகியோரையும் உடனழைத்துச் சென்றிருந்தான்; அதுபோலவே ஆகவ மல்லனும் அவன் மகன் விக்கிர மாதித்தனுடனும், படைத் தலைவர் பலரோடும் வந்து போரிட்டான். கடும் போர் நடைபெற்றது. சாளுக்கியர் படைத்தலைவர் பலரும் உயிரிழந்து போகச் சோழர்க்குப் பெரு வெற்றி கிட்டியது; எனினும், ஆகவமல்லனை இம்முறையும் அழிக்க முடிய வில்லை அவனும், அவன் மகனும் புறங்காட்டி ஓடி விட்டனர்.

## வீரராசேந்திரன்

முடக்காற்றுப் போரில் பிழைத்தோடிய ஆகவமல்லனும், அவன் மக்களும் வாளா இருந்தனர் அல்லர்; சோழநாட்டில், வீரராசேந்திரன் முடிசூட்டு விழா மகிழ்ச்சியில் மூழ்கி யிருக்கும்போது, ஆகவமல்லனின் இரண்டாம் மகன் விக்கிர மாதித்தன் என்பவன், சோழர் ஆட்சிக்கு உட்பட்டதான கங்கபாடி நாட்டைக் கைப்பற்ற முனைந்தான். அஃதறிந்த வீரராசேந்திரன், பெரும் படையுடன் சென்று போரிட்டு, மேலைச் சாளுக்கியர்களைத் துங்கபத்திரை ஆற்றுக்கு அப்பால் துரத்திவிட்டுத் தாயகம் திரும்பினான்.

கீழைச் சாளுக்கியர்க்கு உரிய வேங்கிநாடு, சோழ நாட்டிற்கு வடபுல அரணாக விளங்குவதினாலேயே, சோழர்கள் வெற்றி நடைபோடுகிறார்கள்; ஆகவே, அச்சோழர்களை வெற்றி கொள்ள வேண்டுமாயின், முதற்கண், வேங்கி நாட்டை வென்று தன் நாட்டோடு இணைத்துக் கொள்ளு தல் வேண்டும் என உணர்ந்தான் ஆகவமல்லன்; அதனால் அது முடிக்குமாறு, சாமுண்டராயன் எனும் மாதண்ட நாயகனை வேங்கி மீது ஏவினான். அஃதறிந்தான் வீர ராசேந்திரன்; வேங்கி நாட்டின் இன்றியமையாமையினை

அவனும் உணர்த்தவனாதலின், உடனே வேங்கி நாடு நோக்கிப் புறப்பட்டு, சாளுக்கியர் படையை இடைவழியிலேயே வழிமறித்துப் போரிட்டு அழித்தான்.

வேங்கி . நாட்டு இடைவழியில், சாளுக்கியர் படை தோற்றுப் புறங்காட்டி விட்டதே ஒழிய, அது அடங்கி ஒடுங்கிவிடவில்லை; மாறாக, கிருஷ்ணை, துங்கபத்திரை ஆகியஇரு பேராறுகளும் கூடும் இடமாகியகூடல் சங்கமத்தில் பெரும்படையோடு பாடி கொண்டிருக்கும் ஆகவமல்லனோடு இணைந்து கொண்டது; அது அறிந்த வீரராசேந்திரன், சாளுக்கியர் படையைக் கூடல் சங்கமத்தில் விட்டுச் செல்வது போர் முறையாகாது என உணர்ந்து, கூடல் சங்கமம் நோக்கிப் புறப்பட்டான். கடும் போர் நடைபெற்றது; வழக்கம் போல் இப்போரிலும் ஆகவமல்லன் புறங்காட்டி விட்டான்; அவன் பாசறையில் விட்டுச் சென்ற பட்டத்து யானை : முதலாம் பெரும் படைகளையும், பட்டத்து அரசியையும், பெரும் பொருளையும் கைக் கொண்டு, கங்கைகொண்ட சோழபுரம் அடைந்து விசயாபிடேகம் செய்து கொண்டான்.

கூடல் சங்கமத்துப் பெற்ற வெற்றியைக்
"குந்தளரைக் கூடல் சங்கமதது வென்ற கோன்
அபயன்"

எனக் கலிங்கத்துப்பரணியும்,

"கூடலார் சங்கமத்துக் கொள்ளும் தனிப் பரணிக்கு எண்ணிறந்த துங்கமதயானை துணித்தோனும்" என விக்கிரம சோழன் உலாவும்,

"பாடவரியபரணி, பாட்டணிவீழ்
கூடலார் சங்கமத்துக் கொண்ட கோன்" என

இராசராச சோழன் உலாவும் பாராட்டியுள்ளன.

வீரராசேந்திரனால், தன் படைத்தலைவர் பலரும் இறந்துபோக, தனக்குத் துணைவந்த கங்கன், காடவர் கோன், நுளம்பன், வைதும்பராயன் போலும் அரசர்களும் உயிரிழந்து போக, தோல்வியுற்ற தன் செயல் தனக்குப் பெரிழிவு தருவதாகும்; பழியொடு வாழ்வதினும், போரிட்டுச் சாவது சாலவும் நன்று என உணர்ந்திருந்தான் ஆகவமல்லன்; உடனே கூடல் சங்கமத்தில் தான் காத்திருப்பதாகவும்; தன்னோடு போரிட வரவேண்டுமென்றும், 'வாராதிருப்பவர் பேரரசர் அல்லர். பெரும்பழிப் புரட்டராவர்' என்றும் ஒரு திருமுகம் எழுதி, வீரராசேந்திரனுக்கு அனுப்பினான்.

திருமுகம் பெற்ற வீரராசேந்திரன், ஆகவமல்லன் விரும்பியவாறே, பெரும் படையுடன் கூடல் சங்கமம் அடைந்தான். ஆனால், அழைப்பு விடுத்த ஆகவமல்லன் வந்திலன். அதனால் சினங்கொண்ட சோழன், இரட்டபாடி நாடு புகுந்து, ஆங்கிருந்த ஆகவமல்லனின் படைகளை அழித்தான்; ஆகவமல்லன் போல் ஒரு பதுமை செய்து, அதன் கழுத்தில், ஆகவமல்லனும், அவன் மக்களும் தனக்கு அஞ்சி ஐந்துமுறை புறங்காட்டி ஓடிய செய்தி பொறித்த ஓலையை அதன் மார்பில் தொங்கவிட்டு, வேங்கி நாடு நோக்கி வீரராசேந்திரன் நடந்தான்.

ஆகவமல்லன் உயிரிழந்த பின்னர், சாளுக்கிய இளவரசனாக முடிசூட்டிக் கொண்டு திக்குவிசயம் புறப்பட்ட அவன் மகன், விக்கிரமாதித்தன், வேங்கி நாட்டைக் கைப்பற்றிக் கொண்டு, கிருஷ்ணை ஆற்றங்கரையை அடைந்து, தன் தந்தைக் கான இறுதிக் கடன் ஆற்றிக் கொண்டிருந்தான். வேங்கி நாடு நோக்கி வந்து கொண்டிருந்த வீரராசேந்திரன், அந்நாடு ஆகவமல்லன் மகன் கைப்பட்டது என அறிந்து, "வேங்கி நாட்டை மீட்காமல் மீளேன்; வல்லராகில் வந்து காக்க" என விக்கிரமாதித்தனுக்கு செய்தி போக்கிவிட்டு, வேங்கி நாடு நோக்கி விரைந்தான்; இடையில்

விசயவாடையில் வந்து எதிர்த்த சாளுக்கியர் படையை அழித்து விட்டு, வேங்கி நாடு புகுந்து, ஆங்கிருந்த சாளுக்கியர் படையையும் வென்று துரத்தி விட்டு, வேங்கியை மீட்டு, அதைப் பண்டேபோல், கீழைச் சாளுக்கிய விசயாதித்தனிடம் ஒப்படைத்து வெற்றித் திருமகள் மணக்கத் தலைநகர் வந்து சேர்ந்தான்.

ஆகவமல்லனுக்குப் பிறகு, சாளுக்கியப் பேரரசனாக முடிசூட்டிக்கொண்ட சோமேசுவரன் அத்துணை நல்லவன் அல்லன். குந்தள நாட்டு மக்கள் அவன் ஆட்சியில் பெருந் தொல்லைக்கு உள்ளாயினர். அவன் தவறுகளை எடுத்துக் காட்டி, அவனை நல்வழிப்படுத்த முயன்ற அவன் தம்பி விக்கிரமாதித்தனை நாட்டை விட்டு வெளியேற்றினான்; சாளுக்கிய நாடு விட்டு வெளியேறிய விக்கிரமாதித்தன், தன் தம்பி சயசிம்மனையும் உடன் அழைத்துக் கொண்டு சோணாடு நோக்கிப் புறப்பட்டான்.

அஃது அறிந்தான் கடம்பர் குலமன்னன் சயகேசி? தமையனும் பகைவனாகி விட்ட நிலையில் சோழப் பேரரசைப் பகைத்துக் கொள்வது அறிவுடைமை ஆகாது; அவனோடு நட்புறவு கொள்வதே நன்று என விக்கிரமாதித்த னுக்கும், தன் குலப் பகைவர்களாம் சாளுக்கியர் பிளவு பட்டிருக்கும் போது, அவர்களுள் ஒருவரை நண்பனாக ஏற்றுக்கொள்வதே அரசியல் நெறியாகும் என வீர ராசேந்திரனுக்கும், அறிவுரை கூறி, அவர்களிடையே பகை யொழிந்து, நட்பு வளர வழி செய்தான் சயகேசி அதன் பயனாய், வீரராசேந்திரன் மகள், விக்கிரமாதித்த சாளுக்கி யனுக்கு மணம் செய்து தரப்பட்டாள்; இத்திருமணம் துங்கபத்திரைப் பேராற்றங்கரையிலேயே நடைபெற்றது. அதன் பின்னர், வீரராசேந்திர சோழன், இரட்டப்பாடி ஏழரை இலக்க நாட்டின் மீது படை எடுத்துச் சென்று சோமேசுவரனை வென்று துரத்திவிட்டு, அந்நாட்டை விக்கிரமாதித்த சாளுக்கியனுக்கு வழங்கினான்.

## முதலாம் குலோத்துங்கன் :

வீரராசேந்திரனுக்குப் பிறகு, சோழ அரியணையில் அமர்ந்த அவன் மகன் அதிராசேந்திரன், சில காலமே ஆட்சி புரிந்து, நோய்வாய்ப்பட்டு இறந்துவிட, அவனுக்கு மகப் பேறின்மையால், கீழைச்சாளுக்கிய இராசேந்திரன், குலோத்துங்கன் என்னும் அபிடேகப் பெயர் பூண்டு, சோணாட்டு அரச உரிமையைப் பெற்றான். தன் மாமன்மார்கள் மேலைச்சாளுக்கியர்களோடு ஓயாது போர் மேற்கொண்டதால், சோணாட்டு வளமும் குன்றியது; சோழ அரசிளங்குமாரர் சிலரும் உயிரிழக்க நேர்ந்தது; குந்தள நாட்டவர்க்கும் பேரிழப்பு நேர்ந்தது, என்றாலும், அவர் களை அறவே அழிக்க முடியவில்லை என்ற உண்மைகளை உணர்ந்து துங்கபத்திரை ஆற்றிற்கு வடக்கே, சோழப் பேரரசை நிலைநாட்ட வேண்டும் என்ற பேராசையைக் குலோத்துங்கன் கைவிட்டான். அதனால், மேலைச் சாளுக்கியரோடு, போராடும் நிலைமை அவனுக்கு உண்டாக வில்லை.

ஆனால், மேலைச் சாளுக்கிய விக்கிரமாதித்தன் வேறு வகையில் சிந்திக்கத் தொடங்கினான். சோழர் குடியில், அரியணையில் அமரத்தக்க அரசிளங்குமரன் ஒருவனும் இல்லாமல் போய்விட்டான் என்பதால், அது கீழைச் சாளுக்கிய மரபைச் சேர்ந்த ஒருவனைச் சென்று அடைதல் முறையாகாது என எண்ணினான். கீழைச்சாளுக்கிய இராசேந்திரன் சோழர்குலப் பெண்ணை மணந்து கொண்ட தால் அவனுக்கு அவ்வுரிமை உண்டு எனக் கூறப்படுமானால், தானும் ஒரு சோழர்குலப் பெண்ணை மணந்திருப்பதால், அவ்வுரிமை தனக்கும் உண்டு என எண்ணினான். அதனால், குலோத்துங்கன் பால் அவனுக்கு வெறுப்பு வளர்ந்தது.

மேலும், வேங்கிநாடும், சோணாடும் ஓர் ஆட்சிக்கீழ் வருவதையும் அவன் விரும்பவில்லை. அதனால், சோழர்

பெரும்படையைத் தாக்கி அழிக்குமளவு தன் படைவலியைப் பெருக்கும் பணிகளை மேற்கொண்டான். அஃதறிந்தான் குலோத்துங்கன்; விக்கிரமாதித்தன் தமையனாகிய சோமேசுவரன், தம்பியோடு பகைகொண்டுள்ளான் என்பதை அறிந்திருந்த குலோத்துங்கன், அவனைத் தன் நண்பனாக்கிக் கொண்டான். இனியும் வாளா இருப்பின், சோழர் படை அழிக்கலாகா ஆற்றல் பெற்றுவிடும் என அஞ்சிய விக்கிரமாதித்தன், குலோத்துங்கன் மீது போர்தொடுத்து விட்டான். முதல் நடவடிக்கையாகக் குலோத்துங்கனுக்குத் துணை நின்ற தன் தமையனைவென்று அவன் ஆண்டு கொண்டிருந்த நாட்டை அகப்படுத்திக் கொண்டான்.

சோழர் படையும் வடநாடு நோக்கிப் புறப்பட்டது; நங்கிலி, மணலூர், அளத்தி, நவிலை முதலான இடங்களில் கடும்போர் நடைபெற்றது. இறுதியில் குலோத்துங்கனே வெற்றி பெற்றான். விக்கிரமாதித்தன் துங்கபத்திரை ஆற்றுக்கப்பால் துரத்தப்பட்டான். சாளுக்கியப்படையைச் சேர்ந்த ஆயிரம் யானைகளையும், எண்ணிறந்த செல்வங்களையும் கைக் கொண்டு. கங்கை கொண்ட சோழபுரம் திரும்பியது சோழர்படை.

"தளத்தொடும் பொருதண்டெழப் பண்டோர்நாள்
அளத்திபட்டது அறிந்திலை ஐய நீ"

"தண்டநாயகர் காக்கும் நவிலையில்
கொண்ட ஆயிரம் குஞ்சரம் அல்லவோ"

என, இப்போர் வெற்றிகளைப் புகழ்ந்து பாராட்டுகிறது கலிங்கத்துப்பரணி

# ௨௯. சோழர்-வேங்கிச் சாளுக்கியர் உறவு

மேலைச்சாளுக்கியரின் தாயத்தினரான கீழைச் சாளுக்கியர், கிருஷ்ணை, கோதாவரி ஆகிய இரு பேராறு களுக்கும் இடைப்பட்ட வேங்கிநாட்டை ஆண்டு வந்தனர். கி. பி. பத்தாம் நூற்றாண்டின் நடுவில், அக்கீழைச் சாளுக்கியரிடையே அரசுரிமை காரணமாகப் போர் நிகழ்ந்தது. மூத்தோன் வழியினனாகிய இரண்டாம் அம்மராசன் (கி. பி. 905—970) ஆண்டு கொண்டிருந்தான். இளையோன் வழியினனாகிய பாடபன் என்பவன், இராஷ்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணன் துணையோடு உள் நாட்டில் கலகம் செய்து. ஒரு பகுதியைக் கவர்ந்து ஆளத் தொடங்கினான்.

வேங்கிநாட்டின் எஞ்சிய பகுதியை அம்மராசனும், அவனுக்குப் பின்னர், அவன் மாற்றாந்தாயின் மகனாகிய தானாணவன் என்பானும் கி. பி. 973 வரை அரசாண்டு வந்தனர். இளையோன் வழியினரர்கிய பாடபனும், அவன் தம்பி தாழனும் கி. பி. 973இல் வேங்கிநாடு முழுமையும் கைக்கொண்டு ஆளத்தொடங்கினர். நாட்டை விட்டு வெளியேறிக் கரந்துறை வாழ்க்கை மேற்கொண்ட, அம்மராசன் வழியில் வந்த சக்திவர்மன் என்பவன் சோழ நாடு புகுந்து முதலாம் இராசராசன் பால் அடைக்கலம் புகுந்தான்.

சோணாட்டில் தங்கியிருந்த சக்திவர்மன், தெலுங்குச் சோழ மன்னன் வீமனுக்குரிய சீட்புலிநாடு, பாசி நாடுகளை வென்று அடக்க இராசராசசோழன் மேற்கொண்ட போரில், சோழர்படையுடன் சென்று, பெரும்போர் ஆற்றிச்சோழர் வெற்றிக்குத் துணைபுரிந்தான். சக்திவர்மன் ஆற்றிய அப்போர்பணியால் அகமகிழ்ந்து, அவன் பால் அன்பு கொண்ட இராசராசன், வேங்கி நாட்டின் மீது படையெடுத்துச்சென்று, இளையோன் வழியினரை வென்று, வேங்கிநாட்டு அரசுரிமையை சக்திவர்மன்பால் ஒப்படைத்தான். மேலும், சக்திவர்மன் தம்பி, விமலாதித்தனுக்குத் தன் மகள் குந்தவையை மணம் செய்து கொடுத்தான்.

இராசராசன் காலத்தில் ஏற்பட்ட சோழர்—சாளுக்கியர் திருமணத் தொடர்பு கங்கை கொண்ட சோழன் எனும் முதல் இராசேந்திரன் காலத்திலும் நீடித்தது. அவன் தன் மகள் அம்மங்கை தேவியை கீழைச் சாளுக்கிய விமலாதித்தனுக்கும் இராசராச சோழன் மகள் குந்தவைக்கும் பிறந்த இராசராச நரேந்திரனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். இவ்விருவர்க்கும் பிறந்தவனே பிற்காலத்தில் குலோத்துங்கன் எனும் பெயரோடு சோழர் அரியணையில் அமர்ந்தான்.

சோழர்குலச் செல்வியர், வேங்கிச் சாளுக்கிய மன்னர்க்கு மணம் செய்து கொடுக்கும் இம்முறை இரண்டாம் இராசேந்திரன் காலத்தும் உயிர் பெற்றுத் திகழ்ந்தது. கீழைச் சாளுக்கிய இராசராச நரேந்திரனுக்கும் கங்கை கொண்ட சோழன் மகள் அம்மங்கை தேவிக்கும் பிறந்தவனும் பிற்காலத்தே குலோத்துங்கன் எனும் பட்டப் பெயரோடு சோழர் அரியணையில் அமர்ந்தோனுமாகிய கீழைச் சாளுக்கிய இராசேந்திரனுக்கு இரண்டாம் இராசேந்திர சோழன் தன் மகள் மதுராந்தகியை மணம் செய்து மகிழ்ந்தான்.

சோழப் பேரரசு வீறுநடை போட்டு நடைபெறுவது காணப் பொறாதவர்கள் மேலைச் சாளுக்கியர். அப் பேரரசை அடக்கி ஆள வேண்டும் எனப் பலமுறை முயன்றும் தோல்வி கண்டவர்கள் சோழப் பேரரசுக்குத் துணையாக வேங்கி நாட்டுக் கீழைச் சாளுக்கியர் இருக்கும் வரை தம் எண்ணம் கைகூடாது என்பதை உணர்ந்தனர். அதனால் வேங்கி நாட்டை வென்று ஒன்றாக்கிக் கொள்ளக் கருதினர். அதற்கேற்ற காலமும் வாய்த்தது.

கீழைச் சாளுக்கிய மன்னனும், கங்கை கொண்ட சோழன் மருமகனுமான இராச ராச நரேந்திரன் இறந்து விட்டான். அதுவே ஏற்புடைய காலம் எனக் கொண்ட மேலைச் சாளுக்கிய ஆகவமல்லன் தன் படைத் தலைவன் ஒருவனை வேங்கி நாட்டிற்கு அனுப்பினான்; அஃதறிந்த வீரராசேந்திர சோழன் தானும் வேங்கி நாடு சென்று மேலைச் சாளுக்கிய தண்ட நாயகனைக் கொன்று வேங்கி நாட்டைக் காத்தான். மேலைச் சாளுக்கிய நாட்டையும், கீழைச் சாளுக்கிய நாட்டையும் ஒன்று இணைக்கும் பணி இவ்வாறு தடையுற்றது என்பதால் தளர்ந்து விடாது மேலைச் சாளுக்கிய ஆகவமல்லன் முன்னினும் பெரிய படையொன்றை வேங்கி நாட்டிற்கு அனுப்பினான். சோழர் படை வருகைக்கு முன்னர் விரைந்து சென்று வேங்கியைக் கைப் பற்றிக் கொண்டது ஆகவமல்லன் படை. இராசராச நரேந்திரன் மறைவுக்குப் பின்னர் வேங்கி நாட்டை ஆண்டு கொண்டிருந்த விசயாதித்தன் சோணாடு புகுந்து வீரராசேந்திரனிடம் அடைக்கலம் புகுந்தான். அஃதறிந்து கடுஞ்சினம் கொண்ட வீரராசேந்திரன் "தான் கைக் கொண்ட வேங்கி நன்னாடு மீட்டுக் கொண்டலால் மீள்கிலம் கேட்டு நீ வல்லனாகில் வந்து காக்கென்று" ஆகவமல்லனுக்கு ஓலை போக்கி வேங்கி நாடு நோக்கி விரைந்தான். வந்து தடுத்த ஆகவமல்லன் படையைக் கிருஷ்ணை ஆற்றங் கரையில் விசயவாடையில் வென்று அழித்துவிட்டு வேங்கி நாட்டை

மீண்டும் கைக் கொண்டு அதன் ஆட்சிப் பொறுப்பை விசயாதித்தன்பால் ஒப்படைத்து சோணாடு திரும்பினான் வீர ராசேந்திரன்.

வேங்கியை விசயாதித்தன் ஆண்டு கொண்டிருக்க சோணாட்டில் தன் தாய்ப் பாட்டன் அரண்மனையில் வளர்ந்து வந்த குலோத்துங்கன் வீர ராசேந்திர சோழன் மேற்கொண்ட மேலைச் சாளுக்கிய போர்களில் பங்கு கொண்டும், கடாரத்தரசனுக்குத் துணையாகச் சென்ற சோழ படைக்குத் தலைமை வகித்தும் சோணாட்டு அரசியலில் பெரும் பங்கு கொண்டு வாழ்ந்திருந்தான்,

தன் தந்தையின் ஆட்சிக் காலத்தில், வேங்கி நாட்டின் இளவரசாகப் பட்டம் கட்டப் பெற்று, குலமரபுப்படி, விஷ்ணுவர்த்தனன் எனும் அபிடேகப் பெயரும் சூட்டப் பெற்றிருந்தும், கீழைச் சாளுக்கிய அரசை அழித்துவிட மேலைச் சாளுக்கியர் முனைந்து செயலாற்றிக் கொண்டிருக்கும் சமயம், தன் சிறிய தந்தையையும் பகைத்துக் கொள்வது அரசியல் அறிவுடைமையாகாது என்ற உயர்ந்த ராஜ தந்திரம் அறிந்திருந்தமையால், வேங்கி நாடு விடுதலை அடையத் தன் தாய் மாமனே துணை புரிந்திருக்கவும், வேங்கி நாட்டு ஆட்சிப் பொறுப்பினைத் தான் ஏற்றுக் கொள்ளாது தன் சிறிய தந்தை விசயாதித்தனே அது பெற விடுத்துச் சோணாடு வந்து வாழலாயினன் .

வேங்கி நாட்டு நிலைமை இதுவாக, சோணாட்டில் வீரராசேந்திரனுக்குப் பிறகு. அரியணை ஏறிய அவன் மகன் அதிராசேந்திரன் சில திங்களே ஆட்சி புரிந்து, நோய் வாய்ப்பட்டு, கி.பி. 1070ல் இறந்தான், அவனுக்கு மகப் பேறு இன்மையாலும், சோழர் மரபில் வேறு அரச குமரன் ஒருவனும் இன்மையாலும், சோணாடு ஆளும் அரசனைப் பெறமாட்டாது போயிற்று. நாட்டின் அகத்திலும் புறத்திலும் கலகமும், குழப்பமும் எழுந்தன. சோணாட்டு

மக்கள் அமைதி இழந்து அல்லல் உற்றனர். அப்போது வடபுலப் போரில் ஈடுபட்டிருந்த குலோத்துங்கன் அறிந்து, உடனே சோணாட்டிற்கு விரைந்தான். சோணாட்டு அமைச்சர் முதலாம் அரசியல் தலைவர்கள் அவனை வரவேற்று, சோணாட்டு அரசனாக்கினர். இவ்வகையால் சோணாடும் வேங்கி நாடும் இரண்டறக் கலந்து ஒன்றாயின.

தன் சிறிய தந்தையாகிய விசயாதித்தன் உயிரோடிருக்கும் வரை, வேங்கி நாட்டு ஆட்சியை. அவன்பால் ஒப்படைத்திருந்தான்: குலோத்துங்கன்; விசயாதித்தன் இறந்த பிறகு, வெங்கி நாட்டு ஆட்சிப் பொறுப்பினை இராசராச மும்மடிச் சோழன், வீரசோழன், இராசராச சோழ கங்கன், விக்கிரம சோழன் என்ற குலோத்துங்கன் மக்கள் நால்வரும், ஒருவர் பின் ஒருவராக ஏற்று, வேங்கி நாட்டைக் காத்து வந்தனர்.

விக்கிரம சோழன், சோணட்டின் இளவரசனாகப் பட்டம் சூடிப் பொறுப்பேற்றுக் கொள்வான் வேண்டி, சோணாடு திரும்பியதும், மேலைச் சாளுக்கிய விக்கிரமாதித்தன், வேங்கி நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான். வேங்கி நாடு சில காலம், மேலைச் சாளுக்கியர் ஆட்சிக்கீழ் இருந்தது! விக்கிரம சோழன். ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்டதும், வேங்கி நாடு சென்று, ஆங்கு ஆட்சி புரிந்து கொண்டிருந்த மேலைச் சாளுக்கியரை வென்று ஓட்டி விட்டு, வேங்கி நாட்டில், மீண்டும் சோழர் ஆட்சி நிலவச் செய்தான்.

# எ. சோழர்-இராட்டிரகூடர் உறவு

விஜயாலயன், தஞ்சையைக் கைப்பற்றிச் சோழப் பேரரசை நிறுவுவதற்கு முன்னரே, இராட்டிரகூடர் நோக்கு தமிழகத்தின் மீது வீழ்ந்திருந்தது; நந்திவர்ம பல்லவன் காலத்திலேயே, இராட்டிரகூடர்கள் காஞ்சியைக் கைப் பற்றிக்கொண்டனர்; இராட்டிரகூடர் குலத்தில் வந்த ரேவா என்ற பெண்ணை மணந்து கொண்டதன் மூல மாகவே, நந்திவர்மபல்லவன், காஞ்சி உரிமையை மீண்டும் பெற முடிந்தது.

தமிழ்நாடு ஆளும் அரசர்களுக்குத் தம் குலமகளிரை மணம் செய்து கொடுப்பதன் மூலம் தமிழகத்து உறவினைப் பெறும் முறையினைப் பல்லவர் காலத்திலேயே அறிந் திருந்த இராட்டிரகூடர்கள், தமிழகத்தில் பல்லவர் ஆற்றலைக் குன்றச் செய்து, தம் பழம் பேரரசை நிலை நாட்ட முனைந்து நிற்கும் சோழர் உறவைப் பெறுவதிலும் அம்மண முறையினையே கையாண்டனர்; பல்லவரையும், பாண்டியரையும் வலி இழக்கப் பண்ணிச் சோழப் பேரரசு கண்ட, முதலாம் ஆதித்தனுக்கு இராட்டிரகூட இரண்டாம் கிருஷ்ணதேவன், தன் மகள் இளங்கோப்பிச்சியை மணம் செய்து கொடுத்தான்,

ஆதித்தனுக்குப் பின்னர், சோழர் அரியணை ஏறிய முதற் பராந்தகன் காலத்திலும், அத்தகைய திருமண உறவு ஏற்பட்டது. பராந்தகன் தன் மகள் வீரமாதேவியை,

இராட்டிரகூடர் இரண்டாம் கிருஷ்ணனின் இரு பேரன்களில் ஒரு பேரனாகிய மூன்றாம் இந்திரன் மகள் கோவிந்தனுக்கு மணம் செய்து கொடுத்தான். ஆனால், இம் மணமுறையினால், சோழர்—இராட்டிரகூடர் நட்புறவு ஏற்படுவதற்கு மாறாக, இருவரிடையே பெரும்பகை வளர்ந்துவிட்டது.

பராந்தகன் மருமகன் கோவிந்தனின் சிற்றப்பனாகிய அமோகவர்ஷன் என்பான், கோவிந்தனை விரட்டிவிட்டு, இராட்டிரகூட அரசனாகி விட்டான்; கோவிந்தன் தன் வீரமா தேவியோடு, சோணாடு வந்து சேர்ந்தான்; மகளுக்கும், மருமகனுக்கும் இழைக்கப்பட்ட கொடுமைக்குப் பழிவாங்க எண்ணினான் பராந்தகன். இந்நிலையில் அமோகவர்ஷன் இறந்துவிட்டான்; இராட்டிரகூடரை வெல்ல அதுவே ஏற்புடைக்காலமாம் என எண்ணிப் பெரிய சோழர் படை ஒன்றைத் துணையாக அளித்து மருமகனை இரட்டிரகூடத்தின் மீது ஏவினான்; அப்போது அரியணை ஏறி இருந்த அமோகவர்ஷன் மகன் மூன்றாம் கிருஷ்ணன் சோழர் படையையும், அது துணையாக வந்த கோவிந்தனையும் வென்று துரத்தினான்.

இதற்கிடையில், சோழப்பேரரசு காணவேண்டும் என்ற பெருவேட்கையால், சோனாட்டின் வடபுலத்தே கோலோச்சியிருந்த வாணர்களையும், வைதும்பர்களையும் வென்று, வாண-வைதும்ப நாடுகளைத் தனதாக்கிக் கொண்டான் பராந்தகன். தம் நாடுகளைப் பராந்தகனிடம் பறிகொடுத்த வாண-வைதும்பர்கள், பராந்தகனின் பகைவனாம் இராட்டிரகூட மூன்றாம் கிருஷ்ணனின்பால் அடைக்கலம் புகுந்தனர்.

தன்னை அழித்துவிட்டுத், தன் குலத்துவந்த கோவிந்தனை அரியணையில் அமர்த்த முனைந்தவனே பராந்தகன் எனும் நினைவால், அப்பராந்தகன்பால் கடுஞ்சினங்கொண்டிருந்த மூன்றாம் கிருஷ்ணனுக்குத், தன்னிடம் அடைக்கலம் புகுந்த வாண-வைதும்பர்களைக் காக்க

வேண்டுவது தன் கடமை என்ற உணர்வும் உண்டாகவே, தமிழகத்தின் மீது போர் தொடுப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளலாயினான்.

அஃது அறிந்த பராந்தகனும், தன் மகன் இராசாதித்தன் தனிமையில் திருநாவலூரில், ஒரு பெரும் படையை நிறுத்தி வைத்தான். இராட்டிரகூடன் வாணரும், வைதும்பரும் துணைவரத் தமிழகத்துள் புகுந்து விட்டான். தக்கோலத்தில் பெரும்போர் மூண்டது; சோழர்படை வீறு கொண்டு போரிட்டது என்றாலும், இராட்டிரகூடனுக்குத் துணையாக, வாண-வைதும்பருடன் வந்தகங்கமன்னன் ஏவிய அம்பு ஒன்று, யானை மேல் அமர்ந்து அமர் புரிந்து கொண்டிருந்த இராசாதித்தன் மார்பில் பாய்ந்து அவன் உயிர் குடித்து விடவே, சோழர் படை தோற்றுப் பின்வாங்கிற்று.

யானை மேல் இருந்த நிலையிலேயே இறந்துவிட்டமையால், இராசாதித்தன், "ஆனை மேல் துஞ்சிய தேவன்" என அழைக்கப்பட்டான். தொண்டைநாடும், திருமுனைப்பாடி நாடும் இராட்டிரகூடர்வசமாயின; இராட்டிரகூட மன்னன், அந்நாட்டின் ஆட்சிப்பொறுப்பை தனக்குப் படைத்துணையாக வந்த வைதும்பர்பால் ஒப்படைத்துத் தன் நாடு அடைந்தான்.

தான் கண்ட பேரரசின் எல்லை, தன் வாழ்நாளிலேயே அழிந்துவிட்டதை எண்ணி எண்ணி இறந்துபோனான் பராந்தகன். அவனுக்குப் பிறகு அரியணை அமர்ந்த கண்டராதித்தன் காலத்தில் ஏதும் நடைபெறவில்லை. கண்டராதித்தனுக்குப் பிறகு, பராந்தகனின் மூன்றாம் மகன் அரிஞ்சயன் ஆட்சிப்பீடம் ஏறினான். தன் தந்தை இழந்த நாட்டை மீண்டும் கைப்பற்றவேண்டியது தன் கடமை என உணர்ந்தான்; ஒரு பக்கம் தன் படை வலிமையைப் பெருக்கினான். மறு பக்கம் தன் மகளை, வாணர்குலத்து

இளவரசன் ஒருவனுக்கு மணம் செய்துகொடுத்ததன் மூலம் வாணரை இராட்டிரகூடரிடமிருந்து பிரித்துப் பகைப்படை ஆற்றலைக் குன்றச் செய்தான்; இச்செயல்களால், இராட்டிரகூடர்களை வென்றுவிடலாம் என்ற துணிவு பிறக்கவே, இராட்டிரகூடர் மீது போர் தொடுத்தான். வடஆர்க்காடு பகுதி ஆற்றூரில் கடும்போர் நடைபெற்றது. போரில் அரிஞ்சயன் இறந்தான்; ஆற்றூரில் இறந்தமையால் அவன், "ஆற்றூர்த் துஞ்சிய தேவன்" என அழைக்கப் பட்டான். இவன் பெயரனான இராசராசன் இவன் நினைவாக, மேல் மாடியில் ஒரு கோயில் எடுத்தான்.

# ஏ. சோழர் அரசியல்

தஞ்சை, திருச்சி மாவட்டங்களும், தென்ஆர்க்காடு மாவட்டத்தின் ஒரு பகுதியும், புதுக்கோட்டை நாட்டின் ஒரு பகுதியும் உள்ளடங்கிய நிலப்பரப்பே பொதுவாக சோழமண்டலம் என அழைக்கப்படும். என்றாலும், அதன் பரப்பு, சிற்சில காலங்களில், ஆளும் அரசர் ஆற்றலுக்கு ஏற்ப, இவ்வெல்லைகளுக்கு அப்பாலும் பரவி, வடக்கே தொண்டைநாட்டையும், தெற்கே பாண்டி நாட்டையும், மேற்கே சேர நாட்டையும் உள்ளடக்கிய பெருநிலப்பரப்பாகவும் அது திகழ்ந்தது.

சோழ நாடு, ஆட்சி அமைதி கருதிப் பல மண்டலங்களாவும், மண்டலம் ஒவ்வொன்றும் பல வளநாடுகளாகவும், ஒவ்வொரு வளநாடும் பல நாடுகளாகவும், ஒவ்வொரு நாடும் பல ஊர்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. முதலாம் இராசராசன் காலத்தில், சோழ நாடு ஒன்பது மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, அவை ஒவ்வொன்றும், அவனுக்குரிய இயற்பெயர், பட்டப்பெயர்களைத் தாங்கி இருந்தன. அதுபோலவே சோழ மண்டலம், ஒன்பது வளநாடுகளாகப் பிரிந்திருந்தது; சயங்கொண்ட சோழமண்டலம் என வழங்கப்பட்ட தொண்டை மண்டலம் இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டது.

## அரசுரிமை

சோழநாட்டு அரசுரிமை, தந்தை மகனுக்கு அளிக்க வழிவழித் தொடர்ந்து வருவதாகும். மக்கட்பேறின்றி

மன்னர் இறந்தபோதும், ஆளும் மன்னர்க்கு, மகன், ஆளும் தகுதியில்லாதவனாகிவிட்டபோதும், மன்னனின் உடன் பிறந்தான் அரசுரிமை பெறுவதும் உண்டு. மக்கள் பலராயினும் முதல் மகனுக்கே ஆட்சி உரிமை உண்டு; அரசர்கள் தாம் ஆண்டு கொண்டிருக்கும்போதே, மகனுக்கு இளவரசு பட்டம் கட்டி ஆட்சியில் பயிற்சி அளித்து வந்தனர்.

## அமைச்சர்

சோழர் ஆட்சி, தனி மனிதக் கோலாட்சியே எனினும், அரசன், அமைச்சர் உள்ளிட்ட பலர் அறிவுரை கேட்டே ஆட்சி புரிந்து வந்தான். முதல் அமைச்சர், அவர் கீழ் பணிபுரியும் அமைச்சர்கள் என அமைச்சர் குழுவில் பலர் இருந்தனர் என்பது, "அவன் இருந்துழி அறிக என்றனன் அபயன் மந்திரி முதல்வனே" என்ற கலிங்கத்துப்பரணி தொடரால் அறியலாம்.

## உடன் கூட்டம்

அமைச்சர்களே அல்லாமல், அரசன் செல்லும் இடந்தோறும் உடன் சென்று, அவனுக்கு உசாத் துணையாக அறிவுரை வழங்குவார் சிலரும் இருந்தனர்; அவர்கள் உடன்கூட்டத்து அதிகாரிகள் எனப்பட்டனர். அவர்கள் வகிக்கும் பொறுப்புகளுக்கு ஏற்ப பெருந்தனம், சிறுதனம் என அழைக்கப்பட்டனர்.

தலைநகரில் அமைச்சர்களே அல்லாமல், சாமந்தர், திருமந்திர ஓலை, திருமந்திர ஓலை நாயகம், விடையில் அதிகாரி, கரும அதிகாரி, என்ற வேறு பிற அலுவலர்களும் இருந்தனர்: இவர்களுள், சாமந்தர் நாற்படைத் தலைவராவர். அரசன் அவ்வப்போது அளிக்கும் ஆணைகளை நேரில் கேட்டு ஓலையில் எழுதுவார் திருமந்திர ஓலை;

அவர் எழுதியதைச் சரிபார்த்துக் கையொப்பம் இடுவார் திருமந்திர ஓலை நாயகம்: அரச ஆணை அடங்கிய திருமுகங்களை உரியவர்களுக்குப் பணி மக்கள் மூலம் சேர்ப்பிப்பவர் விடையில் அதிகாரி; அரசின் பல்வேறு துறைகளிலும் நிகழும் நிகழ்ச்சிகளை ஆராய்ந்து ஒழுங்கு செய்பவர் கரும அதிகாரி. இவர்களே அல்லாமல், நாட்டில் களவும், கலகமும், கொலையும், கொள்ளையும் நிகழாவாறு காக்கும் காவல்துறை தலைவனாம் நாடுகாவல் அதிகாரியும் தலைநகரில் இருந்தான்.

## புரவுவரித் திணைக்களம்

"உறு பொருளும், உல்கு பொருளும், ஒன்னார்த்
தெறு பொருளும் வேந்தன் பொருள்"

என வள்ளுவர் கூறியவாறு, அரசன் வருவாயுள் பெரும்பகுதி வரியே ஆதலின், அத்துறை, சோழர் அரசியலில் பெரும்பங்கு பெற்றிருந்தது. விளைநிலங்களை அளந்து, தரம் இட்டு, அவற்றிற்குரிய வரிகளை விதித்து, அவற்றை வாங்கும் பொருட்டு, அப்பல்வேறு பணிகளையும் புரியும் பல்வேறு துறைத் தலைவர்களைக் கொண்ட நிலவரிக் கழகம் ஒவ்வொரு மண்டலத்திலும் இடம்பெற்றிருந்தது. அது புரவுவரித் திணைக்களம் எனவும், அதன் உறுப்பினர்கள் புரவுவரித் திணைக்களத்தார் எனவும் வழங்கப்பட்டனர். இக்கழகத்தின் தலைவர், புரவுவரித் திணைக்கள நாயகம்; ஊர் தோறும் சென்று நிலவரிக் கணக்குகளை மேற்பார்த்து வருபவன் புரவுவரித் திணைக்களத்துக் கண்காணி; ஒவ்வொரு ஊரிலிருந்தும் அரசுக்கு வரவேண்டிய வரி இவ்வளவு என்பதைத் தெளிவாக எழுதி வைத்திருக்கும் புத்தகம், "வரிப் பொத்தகம்". அப்புத்தகம் எழுதுபவனும் "வரிப் பொத்தகம்" என்றே அழைக்கப்படுவன். வரி பற்றி அவ்வப் போது ஏற்படும் மாறுதல்களைக் குறித்து வைப்பவன்

“வரியிலிடு அதிகாரி” இவர்கள் எல்லாம் இடம்பெற்றதே புரவுவரித் திணைக்களம்.

ஆட்சிக்குத் துணையாக நின்று பணிபுரியும் பல்வேறு அதிகாரிகளுக்கும், அரையன், பேரரையன், மாராயன், மழவராயன் போலும் பல்வேறு பட்டப் பெயர்களைச் சூட்டிச் சிறப்பிப்பர்.

அரசனும், அமைச்சர்களும், உடன் கூட்டத்து அதிகாரிகளும் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று நாட்டு மக்களின் குறைகளையும், முறையீடுகளையும் நேரில் கேட்டறிந்து, குறை தீர்த்தும், முறை செய்தும் வருவர்.

# ஐ. பழைய தமிழகத்தில் மக்களாட்சி

ஒரு காலத்தில் உலகெங்கும் நிலவி இருந்த முடியாட்சி முறை மெல்ல மெல்ல மறைந்து போக, இப்போது மக்களாட்சி முறை இடம் பெற்று வருகிறது. இருபதாம் நூற்றாண்டின் மக்கள் ஏற்றுக் கொள்ளும் ஆட்சி முறையாகக் காணப்படும் இம்மக்களாட்சி முறை தமிழ்நாட்டில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மேற்கொள்ளப்பட்டது.

அக் காலத்தில், நாட்டில் முடியாட்சியே நிலவியிருந்தது என்றாலும், சிற்றூர் பேரூர்களில் குடியாட்சி முறையே இடம் பெற்றிருந்தது. ஊர் மக்களால் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட அவையே அவ்வூர்களின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தது. அவ்வூருக்கான ஆட்சி முறை பற்றிய விதிமுறைகளை வகுப்பது, அவற்றைச் செயல்படுத்துவது. உடைமை குறித்தோ, ஊறு விளைவித்தமை குறித்தோ—எழும் வழக்குகளை விசாரித்து நீதி வழங்குவது, அதைச் செயல்படுத்துவது ஆகிய அனைத்தையும் அவ்வூர்ச் சபையே மேற்கொண்டிருந்தது.

அத்தகைய ஊர்ச்சபைகள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டன! அவற்றின் பால் அளிக்கப்பட்டிருந்த பொறுப்புக்கள் யாவை என்பன பற்றிய விரிவான விளக்கம், காஞ்சிபுரத்திற்கு 30 கி. மீ. தொலைவில் உள்ள உத்திரமேரூரில் உள்ள பெருமாள் கோயில் மதில் சுவற்றில், கி. பி. பத்தாம்

நூற்றாண்டில், தமிழகத்தில் அரசோச்சியிருந்த சோழப் பேரரசு காலத்தில் வெட்டப்பட்ட கல்வெட்டில் விரிவாக அளிக்கப்பட்டுள்ளது.

முப்பது குடும்பு (வார்டு)களைக் கொண்ட பெரிய ஊர் அது குடும்பிற்கு ஒருவர் வீதம் முப்பது உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அந்தந்தக் குடும்பிற்கு உரிய உறுப்பினர் அந்தந்த குடும்பிலிருந்தே தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

தேர்வு நடைபெறும் நாளும், காலமும், இடமும், சில நாட்கள் முன்கூட்டியே பறையறைந்து அறிவிக்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களுக்குத் தகுதி, தகுதி இன்மைகள் விரிவாக வகுக்கப்பட்டிருந்தன.

## தகுதிகள் வருமாறு

1. முப்பந்தைந்து வயதுக்கு மேல் எழுபது வயதுக்கு உட்பட்டவன்.

2. கால் நிலத்துக்கு மேல் விளை நிலமும், சொந்தத்தில் வீடும் உடையவன்.

3. வேத நூல் அறிந்தவன்.

4. அரைக்கால் நிலமே உடையவனாயின், நாலு வேதத்திலும், நான்கு பாஷ்யங்களிலும் விரிந்த அறிவும், விரித்துரைக்க வல்ல நாவளமும் உடையவன்.

5. இவற்றோடு, மனம், மொழி, மெய் தூய்மையும் செயல் திறமும் உடையவன்.

## தகுதியின்மை

மேற்கூறிய தகுதிகளைப் பெற்றிருந்தாலும், கீழே கூறப்படும் குறைபாடுகள் உடையவர் உறுப்பினர் ஆவதற்குத் தகுதியற்றவர் என விலக்கப்படுவர்.

1. ஊர்ச்சபையில் மூன்று ஆண்டு பணி புரிந்தவர்.
2. ஊர்க் கணக்குக் காட்டாதவர்
3. முறைப்படி மணம் செய்து கொள்ளாதவர்
4. பிறர் மனை நயப்பவர்
5. கொலை முதலாம் ஐம்பெரும் குற்றம் புரிந்தவர்
6. பிறர் பொருளைக் கவர்ந்தவர்.
7. கையூட்டு பெற்றவர்
8. பொய்க் கையெழுத்து இட்டவர்
9. பொய்ச் சான்று கூறியவர்
10. ஊர்க்கு அடங்காது திரிபவர்

இக்குற்றம் புரிந்து, அதற்கான தண்டம் ஏற்றோ, அல்லது பிற வகையிலோ பிராயச்சித்தம் செய்து கொண்டாலும் அவர் தகுதியற்றவராவர்.

மேலே கூறிய குற்றங்களைப் புரிந்தவர் மட்டுமே அல்லாமல், மேலே கூறிய குற்றம் புரிந்தவனின்.

1. தந்தை
2. தந்தையின் சகோதரர்
3. தாயின் சகோதரர்

4. தந்தையின் சகோதரர்களின் மக்கள்
5. தாயின் சகோதரர்களின் மக்கள்
6. தந்தையின் சகோதரிகளின் மக்கள்
7. தாயின் சகோதரிகளின் மக்கள்
8. சகோதரர்
9. மனைவியின் சகோதரர்
10. சகோதரிகளின் கணவன்
11. சகோதரிகளின் மக்கள்
12. சகோதரர்களின் மக்கள்
13. மகன்கள்
14. மகன்களை மணந்தவர்

ஆகிய இவர்களும் உறுப்பினராவதற்குத் தகுதி அற்றவராவர்.

ஒவ்வொரு குடும்பிலும் உள்ளவர்களில், மேலே கூறிய தகுதிகளை உடையவர்களின் பெயர்ப் பட்டியல் முதலில் தயாரிக்கப்படும். பின்னர், அப்பட்டியலில் உள்ளவர்களில் மேலே கூறிய தகுதியின்மைகளை உடையவர்களின் பெயர்கள் நீக்கப்படும். இவ்வாறு, மேற்கூறிய தகுதிகளைப் பெற்றிருப்பதோடு, மேற்கூறிய குறைபாடுகள் இல்லாதவர்களின் பெயர்ப் பட்டியல் இறுதியாக்கப்படும்.

பின்னர், அப்பட்டியலில் இடம் பெறும் பெயர்கள் ஒரே அளவாக வெட்டி வைத்திருக்கும் பனை ஓலையில் தனித்தனியாக எழுதி, அவ்வாறு எழுதப்பட்ட ஓலைகளை ஊர்ப் பெரியவர்களெல்லாம் குறைவறக் கூடியிருக்கும் ஊர்ச்சபையின் நடுவில் வைக்கப் பட்டிருக்கும் புதிய குடத்தில், ஒவ்வொன்றாக இடுவர். அவ்வாறு எல்லா

ஓலைகளும் இடப்பட்ட பின்னர், சபையில் உள்ளாருள் மூத்த பெரியவர், ஓலைகள் இட்ட குடத்தைக் கூடியிருக்கும் ஊர் மக்கள் எல்லாம் நன்கு காணுமாறு தூக்கிப் பிடித்திருக்க, ஏதும் அறியாச் சிறுவன் ஒருவனை அழைத்து, அக்குடத்தில் உள்ள ஓலைகளையெல்லாம் ஒன்று விடாமல் வேறு ஒரு குடத்தில் இடச் செய்து, பிறகு, அக் குடத்துள் ஓலைகளை நன்கு கலைக்கச் செய்து, ஒரு ஓலையை எடுத்துத் தருமாறு பணிக்க, அச்சிறுவனும் அவ்வாறே செய்ய, அவன் எடுத்துத் தரும் ஓலையை நடுநிலையாளர் ஒருவர், தன் ஐந்து விரல்களையும் விரித்தவாறே உள்ளங் கையில் ஏற்று, அவ்வோலையில் எழுதப்பட்டிருக்கும் பெயரைப் படித்துக் காட்டிய பின்னர், அவ்வோலையை அவ்வவையில் கூடியிருக்கும் முதியோர் ஒவ்வொருவரும் படித்த பின்னர், அவ்வோலையில் காணப்படும் பெயருடையான் அக்குடும்பின் உறுப்பினனாக அறிவிக்கப்படுவன்.

இவ்வாறே முப்பது குடும்பிற்கும் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுவர். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவாரின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகள் ஆயினும், இடையில் உறுப்பினர் யாரேனும் குற்றம் புரிந்து விடுவாராயின், அவர் உறுப்பினர் பதவியிலிருந்து அகற்றப்படுவர்.

பகை உணர்வுக்கு வழி வகுக்காத— அதே நிலையில், மக்களாட்சி முறைக்கு மதிப்பளிக்கும், பயன்மிகு நல்ல தேர்வு முறையைத் தமிழ்நாடு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கடைப் பிடித்து வந்துள்ளது.

# உத்திரமேரூர்க் கல்வெட்டு—1

1. ஸ்வஸ்தி ஸ்ரீ மதுரை கொண்ட கோப்பரகேசரி வன்மர்க்கு யாண்டு பன்னிரண்டாவது உத்திரமேருச் சதுர்வேதி மங்கலத்துச் சபையோம் இவ்வாண்டு முதல் எங்கள் ஊர் ஸ்ரீமுகப்படி ஆஞை.

2. இதனால் தத்தனூர் மூவேந்தவேளான் இருந்து வாரியம் ஆக ஆட்டொருக்காலும் சம்வத்சரவாரியமும் தோட்ட வாரியமும் ஏரிவாரியமும் இடுவதற்கு வியவஸ்தை செய்.

3. த பரிசாவது குடும்பு முப்பதாய் முப்பது குடும்பிலும் அவ்வக் குடும்பிலாரேய் கூடி காணிலத்துக்கு மேல் இறை நிலம் உடையான் தன் மனையிலே அ

4. கம் எடுத்துக்கொண்டு இருப்பானை அறுபது பிராயத்துக்கு உள் முப்பது பிராயத்துக்கு மேல்பட்டார் வேதத்திலும் சாஸ்திரத்திலும் காரியத்திலும் நிபுணர் என்னப்பட்டி

.5 ருப்பார்ரை அர்த்த சௌசமும் ஆத்ம சௌசமும் உடையராய் மூவாட்டின் இப்புறம் வாரியம் செய்திலாதார் வாரியம் செய் தொழிந்த பெருமக்களுக்கு

6. அணைய பந்துக்கள் அல்லாதாராய் குடவோலைக்கு பேர் தீட்டி சேரி வழியே திரட்டி பன்னிரண்டு சேரியிலும் ஒரு பேராம் ஆறு ஏதும் உருவறியாதான் ஒரு

7. பாலனைக் கொண்டு குடவோலை வாங்குவித்து பன்னிருவரும் சம்வத்ஸர வாரியம் ஆவதாகவும் அதன் பின்பே தோட்ட வாரியத்துக்கு மேல்படி குடவோ

8. லை வாங்கி பன்னிருவரும் தோட்டவாரியம் ஆவ தாகவும் நின்ற அறுகுட வோலையும் ஏரி வாரியம் ஆ

9. வதாகவும் முப்பது குடவோலை பறிச்சுவாரியம் செய்கின்ற மூன்று திறத்து வாரியமும் முந்நூற்று அறுபது நாளும் நிரம்ப வாரியம் ஒழிந்த அனந்தரம் இடும் வாரியங் கள் இவ்வியவஸ்தை ஓலைப்படியே குடும்புக்கு குடவோலை யிட்டு குடவோலை பறிச்சுக் கொண்டேய் வாரியம் இடுவ தாகவும் வாரியம் செய்தார்க்கு பந்துக்களும் சேரிகளில் அனோன்யமே அவரு

10. ம் குடவோலையில் பேர் எழுதி இடப்படாதார் ஆகவும் பஞ்சவார வாரியத்துக்கும் பொன்வாரியத்துக்கும் முப்பது குடும்பிலும் முப்பது குடவோலையிட்டு சேரியால் ஒருத்தரை குடவோலை பறித்து பன்னிருவரிலும் அறுவர் பஞ்சவார வாரியம் ஆவதாகவும் அறுவர்பொன் வாரியம் ஆவதாகவும் சம்வத்சர வாரியம் அல்லாத

11. வாரியங்கள் ஒருகால் செய்தாரை பின்னை அவ் வாரியத்துக்கு குடவோலை இடப்பெறாதாகவும் இப்பரிசேய் இவ்வாண்டு முதல் சந்திராதித்தவத் என்னும் குடவோலை வாரியமேய் இடுவதாக தேவேந்திரன் சக்கரவர்த்தி ஸ்ரீ விரநாராயணன் ஸ்ரீ பராந்தகதேவர் ஆகிய பரகேசரிவர்மர் ஸ்ரீ முகம் அருளிச் செய்துவரக் காட்ட

12. ஸ்ரீ ஆக்ஞையினால் தத்தனூர் மூவேந்தவேளான் உடன் இருக்க நம் கிராமத்து துஷ்டர் கெட்டு சிஷ்டர் வர்த்தித்திடுவாராக வியவஸ்தை செய்தோம் உத்திரமேரு சதுர்வேதி மங்கலத்துக்குச் சபையோம்.

(ASI—Annual Report 1904/1905-ப. 136-138).

# உத்திரமேரூர்க் கல்வெட்டு—2

1. ஸ்வஸ்தி ஸ்ரீ மதுரை கொண்ட கோப்பரகேசரி வன்மர்க்கு யாண்டு பதினாலாவது நாள் பதினாறு காலியூர்க் கோட்டத்து தன் கூற்று உத்திரமேருச் சதுர்வேதி மங்கலத்துச் சபையோம் இவ்வாண்டு முதல் எங்களுக்கு பெருமானடிகள் எம்பெருமான் ஸ்ரீ வீரநாராயணன் ஸ்ரீ பராந்தகதேவன் ஸ்ரீ பரகேசரிவன்மருடைய ஸ்ரீ முகம் வரக்காட்ட, ஸ்ரீ முகப்படி ஆ

2. க்ஞையினால் சோழநாட்டு புறங்கரம்பை நாட்டு ஸ்ரீ வங்கநகர்க்கரஞ்சை கொண்டயக்ரமவித்த பட்டனாகிய சோமாசிப்பெருமான் இருந்து வாரியமாக ஆட்டொருக் காலும் சம்வத்ஸரவாரியமும் தோட்டவாரியமும், ஏரி வாரியமும் இடுவார்க்கு வியவஸ்தை செய்த பரிசாவது, குடும்புமுப்பதா முப்பது குடும்பிலும் அவ்வங்குடும்பிலா.

3. ரே கூடி காணிலத்துக்கு மேல் இறைநிலமுடையான் தன்மனையிலே அகம் எடுத்துக் கொண்டிருப்பானை எழுபது பிராயத்தின் கீழ் முப்பத்தைந்து பிராயத்தின் மேற்படாதார் மந்திரப்பிரமாணம் வல்லான் ஓதுவித்து அறிவானை குடவோலை இடுவிதாகவும் அரைக்காணிலமே யுடையான் ஆயினும் ஒருவேதம் வல்லான் ஆய்நாலு பாஷ்யத்திலும் ஒருபா.

4. ஷ்யம் வக்கணித்து அறிவான் அவனையும் குடவோலை எழுதிப்புக இடுவதாகவும் அவர்களிலும் காரியத்தில் நிபுணராய், ஆசாரம் உடையாரானாரையே கொள்விதாகவும் அர்த்த சௌஸமும் ஆன்ம சௌஸமும் உடையாராய் மூவர்ட்டின் இப்புறம் வாரியஞ்செய்திலா தாராய் கொள்வதாகவும் எப்பேர்பட்ட வாரியஞ் செய்து

கணக்குக் காட்டாதே இருந்தாரும் இவர்க்கு சிற்றவ்வை பேரவைம.

5. க்களையும் இவர்க்கு அத்தை மாமன் மக்களையும் இவர்களுக்கு தாயோடு உடப்பிறந்தானையும் இவர்கள் தமப்பனோடு உடப்பிறந்தானையும் தன்னோடுடப் பிறந் தானையும், இவர்களுக்கு பின்னை கொடுத்த மாமனையும் இவர்கள் பிராமணியோடு உடப்பிறந்தானையும் தன்னோடு உடப்பிறந்தானை வேட்டானையும் உடப்பிறந்தாள் மக்களையும் தன் மகனை வேட்ட மருகனையும் தன் தமப் பனையும்.

6. தன் மகனையுமாக இச்சுட் (டப்பட்ட இத்தினை) பந்துக்களையும் குடவோலை எழுதிப்புக இடப்பெறா தாராகவும், அகம்மியா கமனத்திலும், மகா பாதகங்களில் முன்படைத்த மகாயாதகத்திலும் எழுத்துப்பட்டாரையும் இவர்களுக்கும் முன் சுட்டப்பட்ட இத்தினை பந்துக் களையும் குடவோலை எழுதிப்புக இடம்பெறாதாராகவும் சம்ஸர்க்கபதிதரை பிராயச்சித்தம் செய்யும் அளவும்.

7. குடவோலை இடாதாதாகவும்... தியும் சாகஸ்யராய இருப்பாரையும் குடவோலை எழுதிப் புகவிடப் பெறா தாராகவும் பரதிரவியம் அபகரித்தானையும் குடவோலைப் எழுதிப் புகவிடப் பெறாதாராகவும் எப்பேர்ப்பட்ட கையூட்டும் கொண்டான் கிருதப் பிராயச்சித்தம் செய்து சுத்தரானாரையும் அவ்வவர் பிராணாந்திகம்.

8. வாரியத்துக்கு குடவோலை எழுதி புக (விடப் பெறாததாகவும்) பாதகஞ் செய்து பிராயச்சித்தம் செய்து சுத்தரானாரையும் கிராம கண்டகராய் பிராயச்சித்தம் செய்து சுத்தரானாரையும் அகம்மியாக மனம் செய்து பிராயச்சித்தமும் செய்து சுத்தரானாரையும் ஆக இச்சுட்

டப்பட்ட அனைவரையும் பிராணாந்திகம் வாரியத்துக்குக் குடவோலை எழுதிப் புகவிடப்பெறாததாக.

9. வுகமாக இச்சுட்டப்பட்ட இத்தனைவரையும் நீக்கி முப்பது குடும்பிலும் குடவோலைக்கு பேர்தீட்டி இப் பன்னிரண்டு சேரியுலுமாக இக்குடும்பும் வெவ்வேறேவாய் ஓலை பூட்டி முப்பது குடும்பும் வெவ்வேறே காட்டி குடம்புக இடுவதாகவும் குடவோலை பறிக்கும் (போ)து மகாசபைத் திருவடியாரை கபால விருத்தம் நிரம்ப கூட்டிக்கொண்டு அன்றுள்ளூரில் இருந்த நம்பிமார் ஒருவரையும் ஒழியா.

10. மே மகாசபையிலே உள் மண்டகத்திலே இருத்திக் கொண்டு அந்நம்பிமார் நடுவே அக்குடத்தை நம்பிமாரில் விருத்திராயிருப்பார் ஒரு நம்பி மேல் நோக்கி எல்லா ஜனமும் காணுமாற்றால் எடுத்துக்கொண்டு நிற்க பகலே அந்தரம் அறியாதவன் ஒரு பாலனைக் கொண்டு ஒரு குடும்பு வாங்கி மற்றறொரு குடத்துக்கே புகவிட்டுக் குலைத்து அக்குடத்தில் ஏர் ஓலை வாங்கி மத்தியஸ்தன் கையிலே.

11. குடுப்பதாகவும் அக்குடுத்த அவ்வோலை மத்தியஸ் தன் வாங்கும்போது அஞ்சு விரலும் அகலவைத்து உள்ளங் கையிலே ஏற்றுக்கொள்வானாகவும் அவ்வேற்று வாங்கின ஓலை வாசிப்பானாகவும் வாசித்த அவ்வோலை அங்கு உள்மண்டகத்திருந்த நம்பிமார் எல்லாரும் வாசிப் பாராகவும் வாசித்த அப்பேர் தீட்டுவதாகவும் இப்பரிசே முப்பது குடும்பிலும் ஓரோர் பேர் கொள்வதாகவும் இக் கொண்ட முப்பது பேரிலும் தோட்டவாரியமும் செய் தாரையும் வித்யா விருத்தர்களையும்.

12. வயோவிருத்தர்களையும் சம்வத்ஸரவாரியரையும் கொள்வதாகவும் மிக்குநின்றாருள் பன்னிருவரையும் தோட்டவாரியமாகக் கொள்வதாகவும் இவ்விரண்டு நிறந்த

வாரியமும் கரை காட்டிக்கொள்வதாகவும் இவ்வாரியம் செய்கின்ற மூன்று திறந்த வாரியப் பெருமக்களும் முந்நூற்று அறுபது நாளும் நிரம்பச்செய்து ஓழிவதாகவும் வாரியஞ் செய்யா நின்றாரை அபராதங்.

13. கண்டபோது அவனையொழித்து விடுவதாகவும் இவர்கள் ஓழிந்த அனந்தரம் இடும் வாரியங்களும் பன்னிரண்டு சேரியிலும் தன்மகிருத்தியம் கடைக்காணும் வாரியரே மத்தியஸ்தரைக் கொண்டு குறிகூட்டிக் குடுப் பாராகவும் இவ்வியவஸ்தை ஓலைப்படியே...க்குக்குட வோலை பறித்துக் கொண்டே வாரியமும் இடுவதாகவும் பஞ்சவார வாரியத்துக்கும் பொன்வாரியது.

14. க்கு முப்பது குடும்பிலும் குடவோலைக்குப் பேர் தீட்டி முப்பது வாயோலைக்கட்டும் புக இட்டு முப்பது குட வோலை பறித்து முப்பதிலும் பன்னிரண்டுபேர் பறித்துக் கொள்வதாகவும் பறித்த பன்னிரண்டிலும் அறுவர் பொன் வாரியம் அறுவர் பஞ்சவாராவாரியமும் ஆவராகவும் பிற்றையாண்டும் இவ்வாரியங்கள் குடவோலை பறிக்கும் போது இவ்வாரியங்களுக்கு முன்னம் செ.

15. ய்த குடும்பன்றிக்கே நின்ற குடும்பிலே கரை பறித்துக் கொள்வதாகவும் கழுதை ஏறினாரையும் கூட லேகை செய்தானையும் குடவோலை எழுதிப்புக இடப் பெறாதாகவும் மத்தியஸ்தரும் அர்த்தசௌஸமும் உடை யானே கணக்கு எழுதுவானகவும் கணக்கு எழுதினான் கணக்கு பெருங்குறி பெருமக்களோடு கூட கணக்குக்காட்டி சுத்தன் ஆகிடின் பின்னன்றி மற்றுக்கண.

16. க்குப்புகப் பெறாதானாகவும் தான் எழுதின கணக்குத்தானே காட்டுவானாகவும் மற்று கணக்கர்புக்கு ஒடுக்கப் பெறாதாராகவும் இப்பரிசே இவ்வாண்டு முதல்

சந்திராதித்தவல் என்றும் குடவோலை வாரியமே இடுவதாக தேவேந்திரன் சக்ரவர்த்தி பண்டித] வத்ஸலன் குஞ்சர மல்லன் சூர சூளாமணி கல்பகசரிதை ஸ்ரீ பரகேசரிவன்மர் (டைய) ஸ்ரீமுகம் அருளிச்செய்து வரக்காட்ட ஸ்ரீ ஆக்ஞையா.

17. சோழநாட்டு புறக்கரம்பை நாட்டு ஸ்ரீவங்கநகர்க் கரஞ்சை கொண்ட யக்ரமவித்தபட்டனாகிய சோமாசிப் பெருமான் உடன் இருந்து இப்பரிசு செய்விக்க நம் கிராமத் திற்கு அ (ப்யுதயமாக) துஷ்டர்கெட்டு விரிஷ்டர் வர்த்திப் பதாக வியவஸ்தை செய்தோம் உத்தரமேருச் சதுர்வேதி மங்கலத்துச் சபையோம் இப்பரிசு குறியுள்ளிருந்து பெரு மக்கள் பணித்த வியவஸ்தை யெழுதினேன் மத்தியஸ்தன்.

18. காட்டிப் போத்தன் சிவக்குறி இராஜமல்லமங்கதப் பிரியனேன்.

(Archaeological snrvey of India Annual Report-1904...05 PP-139-42)

# ௯. பாண்டியர் பேரரசின் வீழ்ச்சி

கடைச் சங்க காலத்தே பேரரசு நடாத்திய பாண்டியர், பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில், மதுரை மாநகரை மகம்மதியர் கைப்பற்றிக் கொண்ட காலம் வரையும், சரிவற்ற பேரரசாகவே வாழ்ந்தனர் எனக் கொள்வதற்கு இல்லை. அவர்கள் அடியோடு மறைந்தது கி.பி. பதினான்காம் நூற்றாண்டில்தான் என்றாலும், இடைப்பட்ட ஆயிரம் ஆண்டுகால வாழ்விலும் சரிவையும் உயர்வையும் பலமுறை சந்தித்தே வந்துள்ளனர்.

பாண்டி நாட்டின் தென் எல்லையாக விளங்கிய பஃறுளி ஆற்றையும், குமரிமலையையும் கடல்கொண்டுவிட்டதனால், பாண்டி நாட்டிற்கு நேர்ந்த நிலக் குறைபாட்டினை நீக்குவான் வேண்டி, சேரநாட்டுக் குண்டூர்க் கூற்றத்தையும், சோழநாட்டு முத்தூர்க் கூற்றத்தையும் கைக்கொண்டு நிறைவு செய்ததால், நிலந்தருதிருவின் நெடியோன் என அழைக்கப்பட்ட, பாண்டியன் மாகீர்த்தியும், தான் இளையன் என்பதால் தன்னை அழித்துவிட்டுப் பாண்டி நாட்டைப் பங்கு போட்டுக் கொள்ளலாம் என்ற நினைவோடு வந்து, மதுரையை வளைத்துக்கொண்ட சேர, சோழர், வேளிர் ஐவர் உள்ளிட்ட எழுவர் கூட்டணியை முறியடித்து, அவர்களை சோணாட்டுத் தலையாலங்கானம் வரைத் துரத்திச்சென்று அழித்து, அவர்களுக்கு உரிமையான நாடுகளையும் கைக்கொண்டு தமிழகம் முழுமையும் ஒரு குடைக்கீழ் வைத்து ஆண்ட, தலையாலங்கானத்துச்

செருவென்ற நெடுஞ்செழியனும் சிறப்பளிக்க, கடைச் சங்க காலத்தில் சிறந்து விளங்கிய பாண்டியப் பேரரசு, கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழகத்துள் நுழைந்த வடபுலத்துக் கொள்ளைக் கூட்டத்தவராய களப்பிரர்களால் இருந்த இடம் தெரியா வண்ணம், ஒருமுறை அழிக்கப்பட்டது.

ஏறத்தாழ நானூறு ஆண்டுகள் வரை ஏதும் அறிந்து கொள்ளா வண்ணம் மறைந்து கிடந்த அப்பேரரசு, கி. பி. 590ல் கடுங்கோன் என்பவன், களப்பிரர்களை அழித்து மீண்டும் நிறுவ. புத்துயிர் பெற்றுப் பொலிவுற்றது.

அந்நாள் தொட்டு கி.பி. 880ல் நடைபெற்ற திருப்புறம் பியம் போர் வரை, பாண்டிய நாடே அல்லாமல், சோழநாடு, தொண்டை நாடுகள் உள்ளிட்ட தமிழகம் முழுமையும் தம் ஓர் அரசே நிலவ ஆண்ட பாண்டியப் பேரரசு, அப்போரில், இராசசிம்ம பாண்டியன் பெற்ற தோல்வியால் சோணாட்டிற்கு அடங்கிய சிற்றரசாக. இரண்டாம் முறையாக சீர்குலைந்து போயிற்று.

பாண்டியப் பேரரசின் அழிவிற்கு வித்திட்டவர் சோழரோ, சிங்களவரோ அல்லர். மாறாக, அப்பாண்டியர் குடிவந்தவரே ஆவர். பாண்டியர் குடிவந்தவர்களுக்கிடையே நிலவிய ஒற்றுமையின்மையே அவர்கள் அழிவிற்குக் காரணமாம். சோழர்கள், பாண்டி நாட்டை வென்று அகப்படுத்திக் கொண்டு, தமக்குரியதான மதுரை அரண்மனையில் அமர்ந்துகொண்டு, "மதுராந்தகன்", "மதுரை கொண்டான்" என்பன போலும் பட்டப் பெயர்களைச் சூட்டிக் கொண்டு, முடிசூட்டு விழாக் கொண்டாடிய அந்நிலையிலும், அப் புறப்பகையை அழிக்க வேண்டியாவது பாண்டியர் ஒன்றுபட்டு நின்றாரல்லர். மாறாக ஒன்றுபட்டு நிற்க வேண்டிய அந்நிலையிலும், தமக்குள்ளே பகைகொண்டே நின்றனர்.

பராக்கிரம பாண்டியனும் அவன் மகன் வீரபாண்டிய னும் ஒருபுறமும், குலசேகர பாண்டியனும் அவன் மகன் விக்கிரம பாண்டியனும் மறுபுறமும் நின்று, அரசுரிமை காரணமாகப் பகைகொண்டு, ஒருவரையொருவர் அழிப்பான் முனைந்து, அதற்குத் துணைபுரியுமாறு சோழர்களையும். சிங்களவர்களையும் மாறி மாறி அணுகித் தாமும் அழிந்து, பாண்டிப் பேரரசின் அழிவிற்கும் வழிகோலிய நிகழ்ச்சியை வரலாறு மறைக்கவில்லை.

சோழர் பேரரசின் அழிவிற்குப் பின்னர், பாண்டியர் பேரரசைக் காஞ்சி முதல் குமரிவரை பரவிய பெருமைக்குரிய தாக உயர்த்தினான் சடையவர்மன் சுந்தரபாண்டியன் என்றாலும், அவனாலும் பாண்டியர்களிடையேஒற்றுமையை உருவாக்க முடியவில்லை. அவனை அடுத்து ஆட்சிக்கு வந்த மாறவர்மன் குலசேகரன் காலத்திலேயே, பாண்டி நாட்டை அப் பாண்டியர் குடிவந்த ஐவர், ஐந்து கூறுகளாகப் பிரித்துக் கொண்டு தனியரசு நடாத்தத் தலைப்பட்டு விட்டனர். இவ்வவல நிலையை, அக்காலத் தமிழகம்போந்த, மேனாட்டு வழிப்போக்களாகிய மார்க்கோபோலோவும், மகம்மதிய வரலாற்று ஆசிரியனாகிய வாசப்பும் எடுத்துக்கூறி எள்ளி நகையாடியுள்ளனர்.

ஆளும்குடி வந்தவரிடையே ஒற்றுமையின்மை நிலவக் கண்ட அந்நிலையை, அப்பேரரசுக்கு அடங்கித் திறை செலுத்துவோராக ஆங்காங்கே சிறு சிறு நிலப்பிரிவுகளை ஆண்டுவந்த குறுநிலத் தலைவர்கள், அப்பேரரசின் ஆணையை ஏற்கமறுத்துத் தனி ஆட்சி நடத்துமளவு துணிவு பெறும் நிலையும் தலைவிரித்தாடத் தொடங்கி விட்டது. பாண்டியர்க்கு அடங்கிய குறுநிலத் தலைவர்களாகிய வாணாதிராயர்களும், சம்புவரையர்களும் முறையே,பாண்டி மண்டலத்தின் தென் பகுதியிலும், வட பகுதியிலும் தனி ஆட்சி மேற்கொள்ளத் தொடங்கி விட்டனர்.

இவ்வாறு, வாழ்வு தாழ்வுகளை மாறி மாறிப் பெற்று வந்த பாண்டியர் பேரரசு, மீண்டும் வாழ்வறியாத் தாழ்வு நிலை நோக்கிய விரைவு நடையினை, மாறவர்மன் குலசேகரன் காலத்தில் மேற்கொண்டு விட்டது.

மாறவர்மன் குலசேகரனுக்கு ஆண்மக்கள் இருவர். ஒருவன், முறையாக மணந்துகொண்ட பட்டத்தரசிக்குப் பிறந்த சுந்தரபாண்டியவன்; மூத்தவன். மற்றொருவன், குலசேகரனின் காதற் பரத்தைக்குப் பிறந்த வீரபாண்டியன்; ஆண்டில் இளையவன் குலசேகரனுக்குப் பிறகு அரச உரிமை பெறத் தக்கவன் சுந்தரபாண்டியனே எனினும், அறிவு, ஆண்மை, ஆற்றல்களில் வீரபாண்டியனே சிறந்து விளங்கக் கண்ட குலசேகரன் அவனையே இளவரசனாக்கினான்.

அதனால் சினங்கொண்ட சுந்தரபாண்டியன், தந்தைக்கு எதிராகக் கொதித்தெழுந்து, தம்பியைத் துரத்திவிட்டுத் தந்தையைக் கொலை செய்துவிட்டுத் தானே அரசனாக முடிசூட்டிக் கொண்டான். படையும், பண்டாரமும் அவன் உடைமையாயின. இது நிகழ்ந்தது கி.பி. 1310ல்.

தந்தையைக் கொலை செய்த தமையனைப் பழிவாங்கத் துணிந்தான் வீரபாண்டியன். படை திரட்டிக் கொண்டு புறப்பட்டான். இருவர்க்கும் நடைபெற்ற போரில், இரு திறத்தவர் படையும் பாழுற்றன; ஆயினும் இறுதியில் பெரும் புண்பெற்ற வீரபாண்டியன், சுந்தரபாண்டியனால் சிறைபிடிக்கப்பட்டான். அவனுக்குரிய படையும் பெரும் பொருளும் சுந்தரபாண்டியன் உடைமையாயின. அந்நிலையில், வீரபாண்டியன் உடன்பிறந்தவன் மகன் ஒருவன், வீரபாண்டியனுக்குத் துணைவந்தான். அவனால் சிறையினின்றும் விடுவிக்கப்பட்ட வீரபாண்டியன்; பெரும்படையோடு சென்று சுந்தரபாண்டியனைத் துரத்தினான். அவன் தாக்குதலைத் தாங்கமாட்டாத சுந்தரபாண்டியன், டெல்லி

சுல்தான் அலாவுதீனால் அனுப்பப்பட்டு, ஹொய்சள நாட்டை வென்று, அதன் தலைநகரில் வீற்றிருந்த மாலிக்காபூர் பால் அடைக்கலம் புகுந்தான்.

அஃது அறிந்த வீரபாண்டியன் மாலிக்காபூர்க்கு எதிராக ஹொய்சள அரசனுக்குப் படைத்துணை அனுப்பினான் மாலிக்காபூர் மதுரை மீது போர்தொடுத்துப் புறப்பட்டான். வெறிகொண்டு விரைந்து வரும் முகம்மதியப் படையைத் தடுத்து நிறுத்துவார் யாரும் இல்லை: மதுரை புகுந்த மாலிக்காபூர், வீரபாண்டியனைத் தலைநகரிலிருந்து துரத்திவிட்டானே ஒழிய, தன்னிடம் அடைக்கலம் புகுந்த சுந்தரபாண்டியனுக்கு, மதுரை மன்னனாக முடிசூட்டினான் அல்லன்:

மாறாக, அவனையும் துரத்திவிட்டு, இருவர்க்கும் உரிய உடைமைகள் அனைத்தையும் கொள்ளையடித்தான். கோயில்களை இடித்தான்; மக்கள் எண்ணியும் பார்க்காத இன்னல்களை விளைவித்தான். பெரும் பொருட்குவியல்களோடு, மதுரையைவிட்டு வெளியேறினான். மதுரை மீது படையெடுத்த மாலிக்காபூர் பாண்டி நாட்டில் மகம்மதியர் ஆட்சியை நிறுவவில்லை எனினும், பாண்டியர் அழிவுக்கு அதுவே முதற்படியாய் அமைந்தது; மாலிக்காபூர் மதுரையைக் கொள்ளையடித்துத் திரும்பிய பத்தாண்டுகளுக்குள், டெல்லி சுல்தான் குஸ்ருகான் மற்றொரு படையெடுப்பைத் தென்னாட்டின் மீதும் துவக்கினான்; மதுரை இரண்டாம் முறையும், மகம்மதியர்களின், கொலை, கொள்ளைகள் போலும் கொடுமைகளுக்கு உள்ளாயிற்று.

மதுரையும், அதைச் சூழ உள்ள பாண்டி நாடும் இவ்வாறு மகம்மதியர் தாக்குதலுக்கு உள்ளாகித் தளர்ந்திருக்கும் நிலையில், கேரள நாட்டு அரசனாகிய ரவிவர்மன் குலசேகரனும், காகத்திய குப்பிடி நாயகனும், பாண்டியர்க்கு உடைமையாக விளங்கிய தொண்டை மண்டலம், சோழ

மண்டலம் ஆகிய நாடுகளை மாறிமாறி வென்று, ஆங்கு ஆட்சி புரிந்து கொண்டிருந்த பாண்டியர் குலத்தவரைத் துரத்திவிட்டனர்.

இவ்வாறு மகம்மதியர்களும், கேரளர்களும், காகத்தியரும் அடுத்தடுத்துப் படைதொடுத்துப் பாண்டியர் அரசைச் சிறுகச் சிறுக அழித்துவிடவே, பாண்டியர்கள், தம் தாயகமாம் மதுரையை விடுத்து, தமிழகத்தின் தென்கோடிப் பகுதியாகிய நெல்லை மாவட்டத்தைத் தம் உறைவிடமாகக் கொண்டு உயிர்வாழத் தலைப்பட்டனர்.

நெல்லையின் பல்வேறு பகுதிகளின், சிறுசிறு குடியிருப்புகளுக்கு உரியவராகி, ஆங்காங்குள்ள கோயில்களுக்குத் தங்களால் இயன்ற அறப்பணி ஆற்றி வந்த அவர்கள் வாழ்க்கையும், மதுரை, நாயக்கர் ஆட்சிக்கு உட்பட்ட காலம்வரையே, ஒரு சிறிது அறியக் கிடந்தது: அதன் பிறகு, அவர்களைப் பற்றிய குறிப்பே எதுவும் கிடைத்திலது.

தமிழகத்துக்கு ஊறு செய்வான் வேண்டித் தமிழகத்தின் மீது படையெடுத்து வந்த ஆரியர்களாம் வடவர் படையை வென்று ஓட்டி, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்ற வரலாற்றுப் புகழ்மிக்க பெரும் பெயர் பூண்ட அப் பாண்டியன் வழிவந்த ஒருவனே, வடவராகிய மகம்மதியர் படைக்கு வரவேற்பு அளித்துத் தமிழகத்தின் அழிவிற்குத் துணை நின்றான்; வரலாறு விளைவிக்கும் விந்தைதான் என்னே?

# 4. நாயக்கர் காலம்

# மதுரை நாயக்கர் ஆட்சி

## மத்திய அரசு

### அரசனும் அமைச்சர்களும்

**தளவாய்**

அமைச்சர்கள் துணை செய்ய அரசனே நாடாண்டு வந்தான் நாயக்கர் ஆட்சியில், தளவாய் என்பவனே நிர்வாகத் தலைவனாவான். உள் நாட்டுச் சட்டம், அமைதி, வெளிநாட்டுப் பாதுகாப்பு ஆகிய இரு பொறுப்புக்களும் அவன்பாலே இருந்தன. அமைச்சன் பொறுப்பும், படைத்தலைவன் பொறுப்புக்களும், தளவாய் பால் ஒரு சேர ஒப்படைக்கப்பட்டன. பெரிய பெரிய அரசியல் புரட்சிகளெல்லாம் தோன்றி அடங்கிய பின்னர், கொதிப்புள்ளம் கொண்ட குறுநிலத் தலைவர்களையும், பொது மக்களையும் அடக்கி, நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்த, பலம் வாய்ந்த நிர்வாகத் தலைவர் தேவைப் பட்டனர். அதனால், உள் நாட்டில் சட்டம் அமைதியையும், வெளிநாட்டில் நாட்டுப் பாதுகாவலையும் ஒரு சேர நிர்வகிக்க வல்ல அலுவலாளர்கள் தேவைப்பட்டனர். அரசன் இருந்தாலும், தளவாயே நாட்டின் தலைவனாக விளங்கினான். அரசன் ஆற்றல் இழந்தவனாயின், தளவாயே அனைத்தும்; ஆனால், பலம் வாய்ந்த அரசர்கள், சில

சமயம் தளவாயின் அதிகாரவரம்பைக் குறைத்து விடுவதும் உண்டு.

பிரதானி

தளவாய்க்கு அடுத்த பெரிய அரசியல் அலுவலாளர் பிரதானி எனப்படும் நிதி அமைச்சர் ஆவர். வருவாயைப் பெருக்குவதும், செலவினங்களை ஒழுங்கு படுத்துவதுமே அவன் தலையாய பொறுப்பாகும். என்றாலும், பொது வாக உள்நாட்டு விவகாரங்களில் அவன் செல்வாக்கு பெரி தாகவே இருந்தது. ஏனைய அமைச்சரினும், அவன் சற்று உயர்ந்தே விளங்கினான். நாயக்கர் ஆட்சியில் முதல் தளவாயாக விளங்கிய அரியநாதர், பிரதானி பொறுப் பையும் தானே ஏற்றிருந்தார்.

இராயசம்

அடுத்த பெரிய அதிகாரி, இராயசம் என அழைக்கப் பட்ட செயலாளன் ஆகும். நிர்வாகத்தில் அவனே தலைமை வகித்தான் நிர்வாக அமைப்புகளுக்கும், அரசர் களுக்கும் இடையே தொடர்பு படுத்தும் பொறுப்பேற் றிருந்த அவன், தளவாய், பிரதானிகளைப் போல் தனித் தன்மை வாய்ந்தவன் அல்லனாயினும், நிர்வாகத் துறையில், அவனே தலைவனான். அரசியல் கொள்கை வகுப்பது, இம்மூவர் கொண்ட குழுவே ஆகும்.

வருவாய் செலவினங்களைப் பதிவு செய்யும் பதிவு ஏடுகளின் பொறுப்பேற்றிருக்கும் கணக்கன் என்பவனும், அயல் நாட்டு உறவுகளை வகுக்கும் ஸ்தானாபதி என்பவனும் அடுத்த பெரிய அதிகாரிகள் ஆவர்.

ஆட்சி

நாயக்கர் ஆட்சியில், அமைச்சர்களும் அமைச்சர வையும் இடம் பெற்றிருந்தன என்றாலும், நாயக்கர் ஆட்சி

ஒரு வகையில் தனிமனித ஆட்சியே ஆகும். அரசியல் கொள்கைகள் வகுக்கும் அதிகாரம் அரசன் இடமேஇருந்தது. ஓர் அமைச்சர் பால் ஒப்படைத்திருக்கும் துறை பொறுப்பினை, அவ்வமைச்சர் இடமிருந்து எடுத்துத் தானே வைத்துக் கொள்ளும் முழு உரிமை அரசன் பெற்றிருந்தான் திருமலை நாயக்கரும், விஜயரங்க சொக்கநாதனும், தேவஸ்தானப் பொறுப்பைத் தாமே வைத்துக் கொண்டது குறிப்பிடத் தக்கதாம்.

அமைச்சர்களையோ பிற அரசியல் அதிகாரிகளையோ கலக்காமல், அரசர்கள் தாமாகவே எடுக்கும் நடவடிக்கைகளை அவை, மக்கள் நலம் கருதியவாயின், மக்கள் மறுக்காமல் ஏற்றுக் கொண்டுள்ளனர். வழி வழி வந்த மரபுகள், மக்கள் கருத்து, அமைச்சர்கள் அறிவுரை ஆகிய இவை;, அரசர்களின் அதிகார வரம்பை ஓரளவு கட்டுப்படுத்தியே உள்ளன. செல்வாக்கு மிக்க திருமலையும், பொதுமக்கள் கருத்திற்குத் தலை வணங்கியுள்ளான். நிர்வாக யந்திரம், நல்லாட்சிக்கு அடிகோலும் ஒரு வழித் துணையே ஆதலின், நாயக்கர் ஆட்சி. நிர்வாக யந்திர அமைப்பிற்குச் சிறப்பிடம் அளிக்காது, நல்லாட்சிக்குச் சிறப்பிடம் அளிப்பதாகவே இருந்தது.

### பாளையம்

நாயக்கர் ஆட்சிக்கு உட்பட்ட நாடு, ஆட்சி நலம் கருதிப் பல்வேறு பாளையங்களாகப் பிரிக்கப்பட்டது. பாண்டி மண்ணில், நாயக்கர் ஆட்சி கண்ட விசுவநாத நாயக்கனும்,* அரிய நாத தளவாயும், அரசியல், பொருளாதாரம், பாதுகாப்பு ஆகியவை கருதி, நாட்டைப் பல்வேறு பாளையங்களாகப் பிரித்தனர். பாண்டியர் பேரரசு சரிந்த நிலையில், உழவுத் தொழில் சீரழிந்து கிடந்தது.

நாடு பெருங்காடாகக் காட்சி அளித்தது. அது மக்களின் பாதுகாப்பையும், நலத்தையும் கெடுக்கும் நிலைக்களமாய் அமைந்தது. கொலையும், கொள்ளையும், குழப்பமும் தலைவிரித்து ஆடின. இந்நிலையில், ஆங்காங்கே உள்ள உள்ளூர்த் தலைவர்களுக்குப் பெருவாரியான அதிகாரமும் உரிமையும் வழங்காமல், மத்திய அரசு மட்டும் எதையும் செய்துவிட முடியாது.

பாண்டியர் காலத்தில், மகம்மதியர் தாக்குதல் காரணமாகவோ, அல்லது தங்கள் கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலம் தேடியோ, வடநாட்டிலிருந்து வந்து குடியேறிய, அவ்வுள்ளூர்த் தலைவர்கள், பாண்டியர்களுக்குத் திறை செலுத்தும் குறுநிலத் தலைவர்களாகவும், அவர்களின் நம்பிக்கைக்கு உரியவர்களாகவும் இருந்தனர். அத்தகைய தலைவர்கள் பால் நம்பிக்கை வைத்து, பெருமதிப்பு அளித்தால், அப்புதியவர்களின் ஆர்வமும் உழைப்பும், ஆட்சிக்கு எதிராகப் பயன்படாமல், உழவு, தொழில் போலும் ஆக்கப் பணிகள்பால் செல்லும். மேலும், தேவைப்படும் காலங்களில், அவர்களின் படைபலத்தையெல்லாம் ஒருமுகப் படுத்தி நாட்டுப் பாதுகாப்புக்குப் பயன் கோடல் கூடும். இவற்றையெல்லாம் எண்ணி அமைக்கப்பட்ட பாளையங்களின் எண்ணிக்கை எழுபத்திரண்டு எனக் கூறுகின்றன வரலாற்றுக் குறிப்புக்கள்.

பாளையத் தலைவன் பாளையக்காரன் எனப்பட்டான். உங்கள் மண்ணுக்கு நீங்களே உரிமையாளர்கள் — தலைவர்கள் என்றுகூறி, கண்ணியம்மிக்க பொறுப்பினை அவர்கள் பால் ஒப்படைக்கவே, அவர்கள், தங்களின் தலைவர்களாம் பாண்டியர்களை வென்றவர்கள் என்பதால், நாயக்க மன்னர்கள் பால்கொண்ட வெறுப்பும் பகைஉணர்ச்சியும் தணிந்தன. பாளையம், அவர்களுக்குத் தந்தை வழி மகன் என்ற வழிவழி உரிமையுடையதாகும் என அறிவிக்கவே,

அவர்களுக்கு அப்பாளையங்களை வளப்படுத்துவதில் ஆர்வம் மிக்கது. நீதி, நிர்வாகம், காவல் ஆகிய முத்துறையிலும் அவர்களுக்கு முழுஉரிமை அளிக்கப்பட்டது. சுருங்கச் சொன்னால், அந்த அந்தப் பாளையத்திற்கு அவர்களே மன்னர்கள். இதற்குப் பதிலாக, பாளையத்தின் வருவாயில் மூன்றில் ஒரு பங்கை அரசுக்குத் திறையாகத் தரவேண்டும்: மற்றொரு பங்கில், தேவைப்படும் காலங்களில் மத்திய அரசுக்குத் தருவதற்கென ஒரு படையை நிறுவிப் பேணி வருதல் வேண்டும்.

## துறைகள்

பல்வேறு துறைகளையும் செயல்படுத்தி நடத்திச் செல்லத், துறைத் தலைவர்கள் இருந்தனர். அவர்களுக்குக் கீழே பல்வேறு நிலைகளில் பணிபுரியப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர்: தம்கீழ்ப் பணிபுரிய வல்லாரை நியமிக்கவும், தவறு கண்ட வழி நீக்கவும், துறைத் தலைவர்களுக்கு முழுஅதிகாரம் அளிக்கப்பட்டது: அவர்கள் முறையாக மாத ஊதியம் வழங்கப்பட்டனர்: அவர்கள் ஆற்றும் அரும்பணிகளைப் பாராட்டும் முகத்தான் அரசர்கள் அவ்வப்போது வழங்கும் நில நன்கொடை, நிதி நன்கொடைகளே அவர்கள் ஊதியமாம் என வரலாற்று ஆசிரியர் சிலர் கூறுவது சரியாகாது.

## நீதி

மத்திய அரசு, தன் பொறுப்பில் முறையான நடுவர் மன்றம் எதையும் நிர்வகிக்கவில்லை. ஆங்காங்குள்ள கிராமத் தலைவர்களே, நடுவர்களாக இருந்து நீதி வழங்கி வந்தார்கள்: உடன்பிறந்தவர்களுள் மூத்தவன் யார்; தந்தையை அடுத்துப் பாளையத்துக்கும், பொருளுக்கும் உரியவன் யார், என்பன குறித்து வரும் வழக்குகள் எல்லாம் அக்கிராம மன்றங்களிலேயே தீர்க்கப்பட்டன. சமுதாய,

சமய வழக்குகள் மட்டுமே, அரசர்கள் முன் உரைக்கப்பட்டு நீதி வழங்கப்பட்டன.

## வருவாய்த் துறை

நிலவரி போலும் பல்வேறு வரிகளை முறையாகவும், எளிமையாகவும் வசூலிக்கத்தக்க வகையில், வருவாய்த்துறை அமைக்கப்பட்டது. கிராம வருவாய்த்துறை அதிகாரி, மணியக்காரன் அல்லது அம்பலக்காரன் என அழைக்கப் பட்டான். நிலத்தீர்வை, பயிரிடும் செலவுபோக ஒரு நில வருவாயில் பாதி ஆகும். நிலத்தீர்வை நாணயமாகவே வசூலிக்கப்பட்டது. அன்றாடம் வசூலிக்கப்பட்ட வரித் தொகை, கிராமத்திலிருந்து மாகாணத் தலைவருக்கு அன்று அன்றே அனுப்பப்படும். அவர் அதைப் பிரதானியின் பொறுப்பில், தலைமையிடத்தில் உள்ள அரசு பண்டாரத் தில் சேர்த்துவிடுவர்.

நிலவரியே, அரசின் முக்கிய வருவாயாகும். எல்லா நிலங்களும் பாளையக்காரர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. தலைமையிடத்திற்கு அண்மையில் உள்ளனவும், நிலவளமும், நீர்வளமும் பொருந்தியனவுமாய ஏராளமான நிலங்கள் அரசரிடத்திலேயே இருந்தன. தொலைவில் இருந்தனவும், திருத்தம் பெறாதனவுமாகிய நிலங்களே பாளையக்காரர் கள்பால் ஒப்படைக்கப்பட்டன.

நிலவரிக்கு அடுத்து, அரசுக்கு நிதி அளித்தது, பாளை யக்காரர் தரும் கப்பமாகும். இது நிலையான வருவாயா காது. பாளையக்காரர் நல்லவர் அல்லாதவராக மாறிய நிலையிலும், மத்தியில் வலுவற்ற ஒருவன் அரசனாகி விட்ட நிலையிலும், இத்துறையில் குறைவு ஏற்பட்டு விடும்; அடுத்த பெரிய வருவாய், முத்துக் குளிப்பதாலும், சங்குக் குளிப்பதாலும் கிடைக்கும் வருவாயாகும். இவை தவிர்த்து

உழவு, பண்டார வாடை, ஜோடி என்பன போலும் வரிப் பெயர்கள் கல்வெட்டுக்களில் உள்ளன; தறிகள் மீதும், தறி நெய்வோர் மீதும், வரிகள் விதிக்கப்பட்டதாகவும், தெரிகிறது.

அரசுப் பணியாளர்களுக்கு ஊதியம் என்ற வகையில் ஆகும் செலவு மிக மிகக் குறைவு ஆதலானும், படை அமைக்கும் பொறுப்பு பாளையக்காரர் பால் ஒப்படைக்கப் பட்டமையால், அத்துறையில் ஆகும் செலவும் இல்லை ஆதலானும், அந்துறைகளில் ஆகும் நிர்வாகச் செலவினம், அரசியல் பண்டாரத்தைப் பெருமளவில் பாதிப்பதில்லை; ஆகவே, நாயக்கர் காலத்தில், வருவாயினும், செலவினம் குறைந்தே இருந்தது.

இவ்வகையால் ஏற்படும் செல்வக் குவியல்கள், பெரிய பெரிய கோயில்களைக் கட்டுவது, அறச்சாலைகளை நிறுவுவது; நீர் வளம் பெருக, பெரிய பெரிய ஏரிகளையும், வாய்க்கால்களையும் வகுப்பது போலும் துறைகளில் செல விடப்பட்டன போர் நடைபெறும் காலங்களிலும், புயல். வறட்சிகளால் பேரிழப்பு நேரும் காலங்களிலும் உதவுவதற் காகவும், அச் செல்வக்குவியல்கள் பயன்பட்டன.

பலம் வாய்ந்த அரசு அமைக்கவும், பல்வேறு அரசியல் குழுக்களும், பாழ் செய்யும் உட்பகையும், மன்னனையும் மக்களையும் கொன்று குவிக்கும் குறும்பர்களும் இல்லாமல் செய்யவும், நாயக்க மன்னர்கள் பல்வேறு வழிமுறை களை மேற்கொண்டார்கள் எனினும், பாளையக்காரர் களின் முரட்டுத் தன்மையினாலும், கொள்ளையடித்துப் பொருள் குவிக்கும் கொடியோர்களாலும், நாட்டில் குழப் பங்கள் மிகவே செய்தன. நாயக்கர் ஆட்சியின் இறுதிக் காலத்திலும், குழப்பங்கள் மிக்க காலங்களிலும் மக்கள் பேரிடர்ப்பாடுகளுக்கு உள்ளாயினர்.

இவையே அல்லாமல், கொடிய பஞ்சமும், கொடு நோய்களும் மக்களை வாட்டி வதைத்தன. இவ்வழிவுப் பாதைகளை அகற்ற அரசு தன்னால் ஆனது எல்லாம் செய்தது. என்றாலும், அவை அறவே அகற்றப்பட்டன அல்ல; மாறாக, சில சமயம், மனித ஆற்றலையும் மிஞ்சிய ஆற்றல் வாய்ந்தனவாகி, அவை அல்லல் விளைவித்தன. காடுகள் பெரும்பாலும் அழிக்கப்பட்டு, வயல்களாகவும், வாழிடங்களாகவும் மாற்றப்பட்டன என்றாலும், காடுகள் அறவே அழிக்கப்பட்டன அல்ல; கொடு விலங்குகளுக்கும், கொடியவர்களுக்கும் இருப்பிடமாகி இடர் விளைவித்து வந்தன.

## வாணிகம்

மக்கள், தங்கள் தேவைகளைக் குறைத்தே வாழ்ந்தனர் ஆதலின் அவை உள்நாட்டிலேயே கிடைப்பது ஆயின; அதனால், நாயக்கர்கள் வாணிகத்திற்கும், தொழில் வளர்ச்சிக்கும் சிறப்பிடம் அளிக்கவில்லை: தலைநகரைச் சூழ உள்ள பகுதிகளில் அக வாணிகம் ஓரளவு, உள் நாட்டு மக்களால் மேற் கொள்ளப்பட்டன. எனினும் புறவாணிகம் வெளிநாட்டு மக்களிடமே இருந்தது. ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்கள் மீது சுங்கவரி விதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. என்றாலும், அது சிறிய அளவிலேயே நடைபெற்றுள்ளது. முத்து வாணிகமும் சங்கு வாணிகமும் மேனாட்டு மக்களால் மேற்கொள்ளப்பட்டன. மதுரையிலும், அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் நடைபெற்ற கைத்தறித் தொழில் தவிர்த்து வேறு தொழில்கள் நடைபெற்றதாகத் தெரிய வில்லை.

## சமய நெறி

எம்மதமும் சம்மதம் என்பதே நாயக்கர்கள் மேற் கொண்ட சமய நெறியாகும்: தாங்கள் பின் பற்றிய

சமயமே அல்லாது பிற சமயங்களையும் மதித்தே வாழ்ந் தனர். தங்கள் ஆட்சிக் காலத்தில் மகம் மதியர்கள் மேற் கொண்ட கொடுமைகளையும் மறந்து, மன்னித்து, அவர் களின் தொழுகை இடங்களாம் மசூதிகளுக்கும், தனிப்பட்ட மகம்மதியர்களுக்கும், அரிய பெரிய தானங்களை அளித் துள்ளனர். மக்களின் சமய நல்வாழ்வுக் கொள்கைகளைப் பேணிக் காப்பதே அரசின் தலையாய கடமை என நாயக் கர்கள் உணர்ந்திருந்தமையால், அவர்கள் ஆட்சிக் காலத்தில் சமயங்கள் செழித்தோங்கி வளர்ந்து நின்றன.

## சமுதாய அமைப்பு

நால்வருண அமைப்பு, நாயக்கர்களால் அழிக்கப்பட வில்லை. பிராமணர்கள் உயர்ந்தவர்களாக மதிக்கப் பட்டனர். அவர்களுடைய அறிவுரைகள், அரசர்களால் கேட்கப்பட்டு, மதிக்கப்பட்டன. சாதிமுறை அமைப்பில் மாற்றங்கள் நிகழ்வதை நாயக்கர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. ஐந்து பிரிவினராகப் பிரிந்து இருந்த கம்மாளர்கள், தம்மிடையே, கொள்வன கொடுப்பனமூலம் கலந்துவிடக் கூடாது; மதுரைப் பட்டு நூல்காரர், உபநயன முறையில், பார்ப்பனர் நெறியைப் பின்பற்றுதல் வேண்டும் என்ற ஆணைகள் பிறப்பிக்கப்பட்டதாகக் கல்வெட்டுக்கள் கூறு கின்றன.

பலதார மணமும், உடன்கட்டை ஏறுதலும் அரசர்களி டையே வழக்கமாக இருந்தன. திருமலை நாயக்கர் 200 மனைவியர்களையும், கிழவன் சேதுபதி 47 மனைவியர்களை யும் மணந்திருந்ததாகவும், அவ்விருவரும் இறந்தபோது, அவர்களின் மனைவியர் அத்தனை பேரும் உடன்கட்டை ஏறி உயிர் நீத்ததாகவும், அக்கால வரலாற்று நூலாசிரியர் களின் குறிப்புக்களில் இருந்து தெரிகிறது.

## கல்வி

கல்வித் துறையில், நாயக்கர்கள், இந்துமதம் பின்பற்றிய சமயக் கல்வியோடு இணைந்த கல்வி முறையையே பின் பற்றினர். பிராமணர்கள் மட்டுமே கற்க வாய்ப்பு அளித் தனர். மதுரையில் மட்டும் பத்தாயிரம் மாணவர்கள் கல்வி கற்று வந்தனர் என்றும், அவர்கள் அனைவரும் பிராமணச் சிறுவர்களே என்றும், கல்வி தவிர்த்து வேறு பொருள்கள்மீது அவர்கள் சிந்தனை சிதறிவிடக்கூடாது என்பதால், அம் மாணவர்களுக்கு உணவு, உடை, உறையுள் அளிக்கவும், அவர்களின் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கவும், பெரிய பெரிய அறநிலையங்களை அரசர்கள் நிறுவி வைத்தார்கள் எனவும் கூறப்படுகிறது. கல்வியை இலவசமாகக் கற்றுத் தரும் மடங்களுக்கும், கோயில்களுக்கும், ஏராளமான மானி யங்களை மன்னர்கள் வாரி வழங்கினார்கள்.

# ஆ, மதுரை நாயக்கர்களும் கிறித்துவப் பாதிரிமார்களும்

வீரப்ப நாயக்கன் மதுரையை ஆண்டு கொண்டிருந்த போது, கி.பி. 1592ல் பெர்னாண்டஸ் பாதிரியார் தலைமையில், மதுரையில் ஒரு மாதா கோயிலும், சமய மாற்று நிலையமும் நிறுவப்பட்டன. தமிழகத்து உயர் வகுப்பு மக்களை கிறித்துவராக்குவதே அவர்கள் நோக்கமாம்; ஆயினும் மாட்டிறைச்சி உண்பது, மதுபானம் குடிப்பது, புலையரோடு கலந்து பழகுவது ஆகிய அவர் செயல்களை மக்கள் வெறுத்தனர்; அவர்களைப் பறங்கிகள் என இழித்தும் கூறினர். போர்ச்சுகீசியப் பாதிரிமார்களின் நெஞ்சுரம், படைபலம், செல்வச் செருக்கு எதுவும் தமிழர் உள்ளத்தை மாற்ற இயலவில்லை. அதனால் பாதிரிமார்களின் தொடக்க முயற்சி தோல்வியில் முடிந்தது.

முத்து கிருஷ்ணப்ப நாயக்கர் காலத்தில், கி.பி. 1606ல் ராபர்ட்-டி-நொபிலி என்பவர், மதுரைப் பாதிரிமார்களின் தலைவராகப் பதவி ஏற்றார்; அவர் காலத்தில், இந்தியர்களைக் கிறித்துவராக்கும் பணி பெரு வெற்றி பெற்றது. தம் முன்னையோர் தோல்விக்கான காரணங்களை அவர் தெரிந்திருந்தமையால், அவர் முற்றிலும் வேறான முறையைக் கடைப் பிடித்தார்.

தமிழ்நாட்டு மக்களின் மதிப்பைப் பெறும் பொருட்டு தம்மையும் ஓர் தமிழனாகவே மாற்றிக் கொண்டார்.

உணவு, உடைகளில் மாற்றம் செய்து கொண்டார். தமிழில் தெளிவாகப் பேசவும் எழுதவும் கற்றுக் கொண்டார். இவ்வகைகளால், அவர் உரோம் நாட்டுப் பார்ப்பனர் எனக் கூறுமளவு பாராட்டப் பெற்றார். மக்கள் மனதில் இடம் பெற்றதுமே, உயர் வகுப்பு இந்துக்கள் சிலரை கிறித்தவ ராக்கினார். ஆகவே, முத்து கிருஸ்ணப்ப நாயக்கர் காலமே தமிழ்நாட்டில் கிறித்துவ மதம் கால் ஊன்றத் தொடங்கிய காலமாயிற்று.

முத்துவீரப்ப நாயக்கர் காலத்தில் கி.பி. 1610ல் நொபிலி மதுரையில் புதிய மாதா கோயில் ஒன்றைக் கட்டினார். அவருக்குத் துணையாக அன்டோனியோ விகோ என்பவரும் வந்து சேர்ந்தார். நொபிலி இவ்வாறு சமயப்பணி ஆற்றி வருங்கால், அவர்மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட பெர்ணாண்டஸ் பாதிரியார், அவர்மீது குற்றங்கள் சாட்டி, மேலிடத்திற்கு முறையிட்டுக் கொண்டார். அது விசாரிக்கப்பட்டு நொபிலி குற்றம் அற்றவர் எனத் தீர்ப்பு வழங்கப் பட்ட கி. பி. 1623 வரை, நொபிலி செயலற்றவராக்கப் பட்டார். சமயப் பணியும் தடைப்பட்டு நின்றது. தீர்ப்புக் குப் பிறகு சமயப் பணியை மீண்டும் தொடங்கிய நொபிலி, மதுரை மடாலயப் பொறுப்பை விகோ பால் ஒப்படைத்து விட்டு, சேலம், சேந்தமங்கலம், திருச்சிராப்பள்ளி முதலாம் இடங்களில் தன் பணியைத் தொடங்கினார்.

நாயக்க மன்னர், மைசூர், திருவாங்கூர் அரசுகளோடும், சேதுபதியோடும் மேற்கொண்ட போர்காரணமாக நொபிலி சிறையில் அடைக்கப்பட்டாரேனும், போர்ச்சுகீசிய ஆளுநர் அவர்கள் வேண்டுகோள் ஏற்று, அப்போது ஆட்சிப் பொறுப் பில் இருந்த திருமலை நாயக்கர். நொபிலியை விடுதலை செய்தார். மேலும் விரும்பி முன்வருவோரை, கிறித்துவ ராக்கவும் உரிமை வழங்கினார்.

ஆனால், கிறித்தவப்பாதிரிமார்கள்மீது மக்கள்கொண்ட வெறுப்பு அறவே மங்கி விடவில்லை? மாறாக, சிற்சில

சமயங்களில் அது கட்டுக்கு அடங்காமல் பெருகிவிடுவதும் உண்டு; அதன் பயனாய், திருச்சிராப்பள்ளியில் அத்தகைய எதிர்ப்பு காரணமாக, பல கிறித்துவர்கள் கொல்லப் பட்டனர்; மாதா கோயில்களும், மதமாற்ற நிலையங்களும் இடிக்கப்பட்டன; அஃதறிந்த நொபிலி, மதுரைக்கு விரைந்து திருமலைபால் முறையிட்டார். திருமலை அவரை அன்புடன் வரவேற்று, அவர் கூறுவன கேட்டு, அவர்கள் இழந்தன வற்றைத் திருப்பித் தரவும், அவர்கள் கட்டிய மாதாகோயில் களில் அவர்கள் முழு உரிமை உடையவராகவும், அவர்கள் விரும்பும் இடங்களில் தங்கி வாழவும் அனுமதி வழங்கி ஆணைகள் பிறப்பித்தார்.

நொபிலிக்குப் பிறகு கிறித்துவச் சமயப்பணிக்குத் தலைமை ஏற்று, "நொபிலி வித்தூன்றிய சமயப்பயிரை நீர் ஊற்றி வளர்த்தவர்" என்ற புகழ் பெறப் பணியாற்றிய மார்ட்டின் பாதிரியார், சொக்கநாத நாயக்கர் காலத்தில் 1656ல் மறைந்தார். சொக்கநாதன் காலத்தில் நிகழ்ந்த மகம்மதியர் படையெடுப்புக்களும், அதையடுத்து ஏற்பட்ட கொடிய பஞ்சங்களும், கள்ளர்களின் திடீர் தாக்குதல் களும் கிறித்துவ சமயப் பணிக்குப் பெருங்கேடு புரிந்தன. கிறித்துவப் பாதிரிமார்கள், தங்கள் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்புத் தேடி, சத்தியமங்கலமும் திருச்சியும் சென்று தங்கினர்.

இந்நிலையில், நாட்டில் நேர்ந்த கொலை, கொள்ளை களுக்கெல்லாம், பாதிரிமார்களே காரணம் எனக்கொண்டு, பொதுமக்கள் பாதிரிமார்களைக் கொல்லவும், கொடுமை செய்யவும் துணிந்தனர்: பாதிரிமார் மீது பொதுமக்கள் சாட்டிய குற்றச்சாட்டு, மிகக் கொடுமை வாய்ந்தனவாக வும், பொதுமக்கள் ஆத்திரத்தைத் தூண்டிவிடுவனவாகவும் இருக்கவே, அரசன் பாதிரிமார்களை, நாட்டை விட்டு வெளியேறுமாறு பணித்தான். ஆனால், பாதிரிகளின்

தலைவன், சொக்கநாதனைக் கண்டு தங்கள் சமயக் கொள்கை இது: அது பரப்பத் தாங்கள் மேற்கொள்ளும் அறப்பணி இது எனத் தெளிவாக எடுத்துக் கூறவே, சொக்க நாதன் ஓர் அளவு மனநிறைவு அடைந்து, பாதிரிமார்களை மாதா கோயில்களிலேயே வாழ அனுமதித்ததோடு அவர் களுக்கு வேண்டும் பாதுகாப்பு அளிக்கவும் உறுதி அளித் தான். இந்நிலையில், மறவர் நாட்டைச் சேர்ந்த தலைவன் ஒருவனைக் கிறித்துவனாக மாற்றிய செயல், மறவர் களிடையே பெரிய கொதிப்புணர்வை மூட்டிவிட்டது; மேலும், மதுரைக்கும், மைசூருக்கும் இடையில் போரும் மூண்டுவிட்டது; கூறிய இக்காரணங்களாலும், தங்கள் சமயப் பணியை விரிவாக்கக் கருதியதாலும் பாதிரிமார்கள் மதுரையோடு அமையாது, வேலூர், கோல்கொண்டா போலும் வடநாட்டுப் பகுதிகளுக்கும் செல்ல வேண்டி நேர்ந்தது.

மூன்றாம் முத்துவீரப்ப நாயக்கர் காலத்தில், 1647-ல் மதுரை மதமாற்ற நிலையத் தலைமையை ஏற்றுக் கொண்ட, பிரிட்டோ பாதிரியார், தம் சமயப் பணியை மறவர் நாட்டில் தொடங்கினார். கிறித்துவ எதிர்ப்பு ணர்ச்சி மறவர் நாட்டில் கட்டுக்கு அடங்காமல் இருந்தது. சமயப் பணி ஆற்றிவிட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்த பிரிட்டோ பாதிரியாரை, மறவர் மன்னரின் மந்திரி எனக் கூறிக்கொள்ளும் ஒருவன், பிடித்துக் கொண்டு, அவரையும், அவர் மாணவர்களையும், சிவனை வழிபடுமாறு பணிக்க அவர்கள் மறுக்கவே அவர்களின் காலையும், கையையும் கட்டி, மரத்தோடு அவர்களைக் கட்டிப்போட்டுக் கொடுமை செய்தான்: அஃதறிந்த சேதுபதி தலையிட்டினால் அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். ஆனால், மறவர் நாட்டில் மதப் பிரசாரம் செய்யக்கூடாது என எச்சரிக்கப்பட்டனர் என்றாலும், பிரிட்டோ, தன் சமயப் பணிகளை மறவர் நாட்டில் தொடர்ந்து மேற்கொள்ளவே விரும்பினார்.

ஆங்குத் தன் உயிருக்கு நேர இருக்கும் கேட்டினை எண்ணிப் பார்த்தாரல்லர்: துணிந்து மறவர் நாட்டுள் புகுந்து, மறவர் பலரை மதமாற்றம் செய்தார்; அவ்வாறு மதம் மாறியவர்களுள் குறிப்பிடத்தக்கவன், இராமநாதபுர அரசுக்கு வாரிசு எனக் கூறப்படும் தடியத் தேவனாவன். இச்செயல், கிறித்துவ எதிரிகளுக்குக் கோபத்தை மூட்டி விட்டது: எல்லோரும் ஒன்று திரண்டு, இராமநாதபுர அரசனாகிய கிழவன் சேதுபதிபால் சென்று, கிறித்துவப் பாதிரிமார்களின் சமயப் பணியால் நாடே கெட்டுவிட்டது; அவர்கள் முயற்சியால் மறவர் நாட்டில் கிறித்துவர் தொகை பெருகிவிடும்: கிறித்துவர் ஆ[illegible]ட்டால், ஆளும் அரசன் கிறித்துவனாக இருக்க நே[illegible] என்ற நிலை ஏற்பட்டு, கிழவன் சேதுபதி முடிதுற[illegible]ந்தரிடும் என்றெல்லாம் கூறவே, கிழவன் சேதுபதி, மறவா நாட்டில் மாதா கோயில்களையெல்லாம் இடிக்கவும், பிரிட்டோவை யும், அவர் வழியினரையும் சிறைபிடித்து வரவும் ஆணை யிட்டான்.

தடியத்தேவன் தலைநகரில் இருந்ததாலும், நாட்டில் மிகப்பலர் கிறித்துவராகமாறி இருந்ததாலும், பிரிட்டோ வுக்குத் தண்டனை தருவதில் தயக்கம் காட்டினான்கிழவன் சேதுபதி. அதனால், பிரிட்டோவை, மறவர் நாட்டில், தன் உடன் பிறந்தானுக்கு உரியதான உறையூர்க்கு அனுப்பி, ஆங்கே கொலை செய்து விடுமாறு மறைமுகச் செய்தி அனுப்பி விட்டான். அதுபோலவே, பிரிட்டோ, ஆங்கே கொலை செய்யப்பட்டார்.

பிரிட்டோ கொலை செய்யப்பட்டதால், மறவர் நாட்டில் கிறித்துவ சமயம் மங்கிவிடவில்லை; மாறாக, முன்னினும் பன்மடங்கு வேகமாக வளரத் தொடங்கிற்று. பிரிட்டோ கொலை செய்யப்பட்ட சில நாட்களுக்கெல்லாம், அவர் கொலைக்குக் காரணமாய் இருந்த உறையூர்த்

தேவனும், அவன் அமைச்சனும் அடுத்தடுத்து இறந்து விட்டனர். அது மக்கள் உள்ளத்தில் பிரிட்டோ பால் ஓர் அன்பு உணர்வையும், அவர் போதித்த சமயத்தின் பால் பற்றும் உண்டாக்கவே, மறவர் பலர் கிறித்துவராக முன் வந்தனர்.

கிறித்துவ சமயம், மறவர் நாட்டில் இவ்வாறு வேகமாகப் பரவிக் கொண்டிருக்கும் அதே காலத்தில், மதுரை மண்ணிலும் அது வெற்றிநடை போட்டுக் கொண்டிருந்தது; மங்கம்மாள், கிறித்துவப் பாதிரிமார்கள் பால் அன்போடும், பண்போடும் நடந்து கொண்டாள். தாம் பின்பற்றும் சமயத்திற்குத் தாம் தலை வணங்குவது போலவே, பிற சமயங்களையும் மதித்து நடக்க வேண்டும், என்ற தலையாய கொள்கை உடையவராகிய மங்கம்மாள் காலத்தில் கிறித்துவ சமயம், தமிழகத்தில் சிறப்பான இடம் பெற்றுத் திகழ்ந்தது.

★



இருபதாம் நூற்றாண்டுத் தமிழகத்தின் வரலாற்றில் தனக்கென ஒரு சிறப்பிடத்தைப் பெறத்தக்க வகையில், நல்ல தமிழ் அறிஞராக, வரலாற்றுத் திறனாய்வாளராக, செந்தமிழ்ப் பேச்சாளராக, இலக்கியப் படைப்பாளராக, பாதை மாறாத பகுத்தறிவுவாதியாக, அப்பழுக்கற்ற அரசியல் தலைவராக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவராக, எனப் பல்திறன் படைத்த நற்றமிழ்ப் புலவராக விளங்கியவர்,

புலவர் கா. கோவிந்தனார் அவர்கள்

"தமிழுக்கும், தமிழ்ப் புலவர்கட்கும், தமிழ்நாட்டுக்கும் தொண்டாற்றத் தன்னையே அர்ப்பணித்தவர்" என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டப் பெற்று, திருவண்ணாமலை குன்றக்குடி ஆதீனத்தாரின், 'புலவரேறு' பட்டம், தமிழக அரசின், 'திரு.வி.க. விருது', மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின், 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' பட்டம் போன்ற சிறப்புகளைப் பெற்ற புலவர் அவர்களின் 'தமிழ்ப் பணி', பொன்விழாக் கண்ட பெருமை யினையுடையது.

I S B N-81-85703-19-1